TAMIL NECTAR FIRST CUP

# PEELIVALAI MANAM

OR

# NAGA NATTU ELAVARASI.

WEDDING OF PEELIVALAI

THE YOUNG PRINCESS OF NAGA KINGDOM.

(AN ORIGINAL TAMIL DRAMA)

THE MADURA TAMIL SANGAM

By

**Vidwan, V. S. VENKATARAMAN.**

TAMIL PANDIT, ST. ANTONY'S HIGH SCHOOL

**COONOOR, R. S.**

(NILGIRIS.)

**1935**

Price Rs. 1—4—0.

உ

தமிழ் அமிழ்து. முதற்கிண்ணம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# நாகநாட்டு இளவரசி

அல்லது

# பீலிவளை மணம்.

---

ஒரு புதிய தமிழ் நாடகம்.

இஃது


நீலகிரி தழீஇய குனூர், அர்ச் அந்தோணியார்
உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியன்

**வித்துவான் [illegible] வேங்கடராமன்**


இயற்றியது.


சிதம்பரம்

கார்த்திகேயன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை ரூ. **1-4-0.**

1934.



உரிமைகள் ஆசிரியர்க்கே.

# முன்னீடு.

## நாகநாட்டு இளவரசி நாடகச்சுருக்கம்.

சூரியகுல வேந்தனான நெடுமுடிக்கிள்ளி மன்னனுக்கும், வளைவணன் புதல்வியாய பீலிவளைக்கும், ஓர் அசுரனிடத்தினின்றும், (பீலிவளையை) மீட்டது காரணமாகத் தோன்றிய காதல் ஆம் விதை கடலிடை ஓடத்திற் போம்பொழுது தோளொடு தோள் தழுவ **முளைவிட்டதாகப்** பின் மாயத்திரையுள் மறைந்து காதலனிடத்தில் ஒத்த காதல் உள்ளமை கண்டு தாழை முடங்கல் போக்கி அவனது இனிய மறுமொழி கேட்டு மாயத்திரையினின்றும் வெளிப்பட்டுப் பீலிவளை அரசன் முன்னிற்க, அரசனும் பீலிவளையைத் தன்னணையில் அமர்த்திக்கொள்ளும் தருணத்துத் **தளிர்த்ததாகப்** பின் தன் மனைவி பூங்குழலாளின் உடன்பாட்டினை அவளது நோன்பின் வழியாகத் தன் காதலனும் கிள்ளி பெற்றமையை மீண்டும் பீலிவளை ஒளிந்து கேட்கையில் **பூத்ததாகப்** பின் அரசி அரசனைவிட்டு அகலத் தன் அன்பானது கண்களைப் பொத்தி மகிழவே **கனிந்ததாகப்** பின் அவ்விருவரும் தத்தம் ஆசை நிறைவேறப்பெற்றனர்.

1. குறிப்பு:— **காதல்விதை முளைத்தவுடன்** நாகநாட்டு மன்னர்பிரானது பீலிவளைக் காட்சி விழைவு அழைப்பு காரணமாக நேர்ந்த பிரிவும் சின்னாட்கழிய மன்மதன் தூண்ட உய்யானத்து அரசனை அண்மிக் கூடலும் பீலிவளைக்கு நேர்ந்தமை காண்க.

2 குறிப்பு:— **காதல் தளிர்த்தவுடன்** கதம்பமுனி பயிற்றுவித்த எழிற்கண்ணித் திருமண நாடகத்தின் அவிநயச் சிறப்பினைப் பீலிவளைபாற் கண்டு களிக்க மன்னர்பிரான் அழைப்பதாக நாக தூதன் சொல்லப் பிரிவும் (எழிற்கண்ணி நடிப்பினில் நெடுமுடிநாகன் என்பதற்கு நெடுமுடிக்கிள்ளி எனப் பீலிவளை சொல்லலும் கதம்பமுனி சபித்தலும் நெடுமுடிநாகன் இரங்கி மகப்பேறு வரையில் கிள்ளியோடு பூவுலக மங்கையாகி இன்புற்றிருக்க அருளலும் பீலிவளைக்குப் பிரிவின்பின் ஏற்பட்டமை அறிக)

சின்னூட்கழிய ஆர்வமும் மிகச் சாபமும் துணைபுரிய நெடுநிலா முற்றத்து மன்னன் கிள்ளியொடு கூடலும் பீலிவளைபால் நிகழ்ந் தமை யுணர்க.

3. குறிப்பு:— காதல் கனிந்தவுடன் பீலிவளை ஓர் ஆண் மகவு பெற்று இதனை வெளியிடில் கிள்ளியைப் பிரியவேண்டுமே எனச் சாயல முனிக் குடிசையில் மகவினை ஒளித்து வைத்தமை தேர்க.

பீலிவளை ஒருநாள் கிள்ளியிடம் ஊடல்கொண்டு இளமை யோன் வனம்புகுந்து கொடியாக மாறக் கூடல்மணி மூலமாகக் காதலியைக் கண்டு அவளுடன் கிள்ளி தன்னகர் திரும்பி அரசு புரிந்து வருகையில் கடல் நீராடப் புகக் கழுகு ஒன்று அம்மணி கவர்ந்துபோக அம்பின் மூலமாகத் தன் மணியையும் மகப்பேற் றையுங்கண்டு மகிழ இதனிடையில் சாயலன் மனைவி மகனோடு வர தன் காதலி பிரிவெண்ணி வனம்புக எண்ண மைநாகமுனி தேற்ற பீலிவளையோடு என்றும் பிரியா உடனுறை வாழ்வினைப் பெற்று இளந்திரையனுக்கு இளவரசு முடிசூட்டித் தன் மனைவியோடும், தன் மகனோடும் இம்மையின்பமெல்லாமும் எய்தி வாழ்ந்து இருந் தனன்.

(மைநாகமுனி—இருணந்தி)

N. B:— நாடகச்சுருக்கத்து இல்லாத பகுதிகளை அங்க வரலாறு களில் பார்த்துத் தெளிக.

## வேண்டுகோள்.

. தமிழன்பர்காள்! நும்மை வணங்கி யான் ஒரு விண்ணப் பம் செய்து கொள்கின்றனன்

இந்நாடகம் யான் இருக்கும் இடத்திற்குத் தூரிய சிதம்ப ரத்து அச்சிடப்பெற நேர்ந்தமை காரணமாகக் குறியீடு எழுத்து

முதலான பாகங்களில் பல பிழைகள் மலியவே நிகழ்ந்துள அவை யெல்லாவற்றையுமே திருத்திப்படித்து என்மீது அன்பு புரிவீராக.

ஞாயிற்றின் இளவெயில் பெற்றுப் பூக்கும் தாமரைக்கு ஓர் குறைவுமில்லை. பொருள், கருவி, காலம், வினை, இடனோடு ஐந்துமில்லாதவன் யான் என்பது இவற்றானே வெளிப்படை. சந்திரகாந்தக்கல் சந்திரனைக் கொண்டல்லவா குளிர்ந்த நீரைத் தருகிறது. என் குறிப்பினை நீவிர் அறிவீர். தாய் தந்தையர் வெற்றிலைப் பாக்குச்சுருளினைத் தம்மக்கள் கையிற் கொடுத்துத் தம் வாயினால் கவர்ந்து மென்று தின்று இன்புறுவது தமிழறிஞராய நமக்குத் தெரியாதது ஒன்று அல்ல. ஆகலின் அன்புடன் இதனை யேற்றுப் படித்து அருள் புரிவீராக.

தென்மொழியில் வல்லுநராம் நாவலர்பாற் சென்றக்கால்
புன்மொழியும் பொற்புனனி பூத்திங்கு—நின்றிடுங்காண்
கத்துகடற் சிப்பியுள் கார்முகினீர் பெய்யவது
நித்திலமாய் நீடுவது போல்.

நீலகிரி தமிழிய
கூனூர்,
1 Dec. 1934.

இங்ஙன்,
வ. சி. வேங்கடராமன்.
(மருணீக்கியழகன்.)

# முகவுரை.

தொன்மையவா, மெனுமெவையும் நன்றாகா,
இன்று தோன்றிய நூல், எனுமெவையுந் தீதாகா.

என்பதனை, அறியாதவர், தமிழ் மக்களுள், ஒருவருமிலர். "நாக நாட்டு, இளவரசி" எனும் புனைபெயருடைய, "பீலிவளை மணம்" எனும் இந்நாடகத்தினது, வரலாறு, மணிமேகலை முதலிய, நூல்களிற், காணப்படுவது, ஆகும். சிலவிடங்களில், மட்டும்; நாடக வியனூல் விதிகளின் முறைகளைப் பின்பற்றிச் சுவை (ரஸம்) கெடாமல், முதனூல் வரலாற்றினைச் சிறிது, திரிபு, பட அமைத்தும், புதுமைபடப் புதுக்கியும், இந்நாடகநூலினை, எழுதியுள்ளனென்.

உலகம், வெவ்வேறு சுவை நுகருமியல்புடையது, எனக் கண்டு, பாவ, ராக, தாளங்கள் அமையப்பெறும் பாடல்களை, இந்நூலில், இயையச்செய்யாது, நீக்கிவிட்டனென்.

இஃது, இன்பச்சுவையை முதற்பொருளாகக் கொண்டது. பண்டைத் தமிழ்நூல் வரலாற்றினை அடிப்படையாகக்கொண்டு, எழுதிய நாடகங்கள் சிலவற்றோடு, இதனையும், ஒருபொருட் படுத்தி, எண்ணிப், படித்து மகிழ்ந்தும், நடித்து மகிழ்ந்தும், தம் நண்பரை இன்புறுத்தத், தமிழர் முன்வருவர், எனுந் துணிவு கொண்டெழுந்தே, யான், இது வகுக்கப் புகுந்தனென்.

இந்நூலினை, அருந் தமிழறிஞர் காணின், அவர், இதன் கண்ணமைந்துள்ள பொருள்களின் செவ்வியை, உள்ளவாறு அறிந்து தகமீக்கூறுவர், எனும் உறுதியும் எனக்கு உள்ளது.

"அறிவெனப்படுவது, பேதையார் சொன்னோன்றல்" என்ற சான்றோர் மொழியின்படி, மேதையார், எனைப் பொறுத்தருளுவர்,

என்று, ஓர் ஆழ்ந்த நம்பிக்கையை நற்றுணையாகக் கொண்டுள்ளனென்.

இந்நூல், பற்பல செயல்கள் மேற்கொண்டிருந்தபோழ்து, இடை இடை எய்திய நோங்களில், எழுதப்பெற்றதாகலின் எண்ணியாங்கு, இதனைச் சீர்திருத்தற்குப் போதிய போழ்து கிடைக்கப்பெறுது போயிற்று.

இது போன்ற நூல்கள், என் (தமிழ் அமிழ்து) வெளியீடுகளாக, உலகத்து, உலாவுமாறு, இறைவி, எற்குத் திருவருள் புரிந்து, எல்லாச் செல்வங்களையும் அளிப்பாளாக.

நலம். நலம். நலம்.

இங்ஙன்.

கூனூர் நீலகிரி.
16. May 1934.

V. S. வேங்கடராமன்
(வ. சி. மருணிக்கியழகன்)

# பீலிவளை மணம், எனும் நாடகம்.

## முதலங்கத்தின் வரலாறு

முன்னாளில், சூரியகுலத்துதித்த நெடுமுடிக்கிள்ளி, என்னும் மன்னன் புகார், எனுந் தலைநகரினில், இருந்தரசு செலுத்தி வந்தனன். அவ்வரசன், ஒருநாள், கடற்கரை யோரமாகக் காலையில் உலாவிவிட்டுக் காவிரி கடலொடு கலக்குமிடத்துக், கதிரவன் வணக்கஞ்செய்து முடித்துத் தன்னரண்மனைநோக்கி, மீண்டு வருவானெண்ணிப் புறப்பட்ட போழ்தினில், ஓர் புன்கண் ஒலத்தினைக் கேட்டு, அவ்வோலம் வருந்திசை நோக்கிப், பார்வை செலுத்துகின்ற வளவினில், நாககன்னியரைக் கண்டனன். பின்னர், அம்மன்னன், அந்நங்கையரைப்பார்த்து, என் அழுகின்றீர், இவ்வாறு, ஓலமிடற்குக் காரணம் யாது, எனக் கேட்டவுடன், அம்மங்கையர், "பெருந்தலையன், எனும், ஓர் அசுரன், எங்களது தோழியும், நாக நாட்டினுக்கு, மதாணியணிபோன்றவளுமான, பீலிவளையை, மின்னாளுடன் தூக்கிக்கொண்டு போயினன். ஆதலின், அவனைக் கொன்று, அவளை மீட்டு, எங்களிடத்தில், ஒப்புவித்தல் வேண்டும். எங்களைப் பாதுகாக்க, அருள் புரிமின்," என அரசனை வேண்டிக்கொண்டனர்.

அதுகேட்ட மன்னன், அவர்களுடன், ஓடத்திலேறி, மணிபல்லவஞ் சென்று, அங்கு அவரை இருக்கச்செய்து, நாகநாட்டரசனான, வளைவணன், பகைவனாய, அவ்வசுரன் கையினின்றும், அவளை விடுவித்து, அழைத்துவர எண்ணித், தான், மாலுமியுடன், அக்கலத்திலேயே, ஏறிக் கடலிடைச்சென்று, அசுரனுடன் பொருது, அவன்வலி தொலையச்செய்து, அக்கலத்தில், அவளை, மின்னாளுடன், ஏற்றிவைத்துக்கொண்டு, மணிபல்லவம் நோக்கி, வந்துகொண்டிருந்தனன். அவ்வமையத்து, அலைகளால் நாவாய் அசைய, அடிக்கடி, அவ்விருவரது, தோள்களும், ஒன்றற்கொன்று தழுவப்பெற்றன. தழுவப்பெறவே, பொதுநோக்கால், விதைத்த காதல் விதை, முளைத்து மேற்கிளம்பி யெழுகுற்றது.

அங்ஙன், இன்பமுற்ற மன்னன், மணிபல்லவத்து இறங்கி அம்மங்கையர்களிடம், பீலிவளையைச் சேர்ப்பித்தனன். பின், அப்பீலிவளை தன், பாங்கிமாரைத் தழுவி யின்புற்றனள். இச்சமயத்து, வளைவணனால், அனுப்பப்பட்ட ஓர் நாகன், மன்னனை யணுகி "நீவிர், எமது மன்னற்குப் பேருதவி புரிந்தனிர். ஆகையின், இப்பொழுதே, எம்முடன் பீலிவளையை யழைத்துக் கொண்டு மன்னர் திருமுன் வரல்வேண்டும்" என, மொழிந்தனன். பின்னர், மன்னன், இவ்வமயம், வளைவணனைப்பார்த்தற்கு முடியாதென மொழிந்து, நாககன்னியர் கொண்டுவந்த கலத்தினில், தானேறிப் புகாஅர் நோக்கி வந்துகொண்டிருந்தனன். பின் தன்னகர் செல்பவளாகிய, பீலிவளையும், ஏதோ ஒன்றனைப் பார்ப்பதுபோலப் பிறர்க்குத் தோன்றும்படி, அரசனைக் காதலுடன், பார்த்துக்கொண்டு தன் தோழிகளுடன் புறப்பட்டனள். அவள் போனபின்பு, அரசன், மிக, மன்மததாபமுறப்பெற்றுத் தன்னகர் வந்து சேர்ந்தனன்.

---

## பீலிவளை மணம்.

## இரண்டாவது அங்கத்தின் வரலாறு.

தனது நகர்வந்து சேர்ந்தமன்னன், காமவயத்தனாய்ப் பீலிவளையையே நினைந்து, எவ்வாற்றானு மின்பமுறாதவனா யிருந்தனன். ஒருநாள் அவன், தனது காதற்காமந் தணியுமென எண்ணி, இன்பப்பொழிலெனும், தனது மலர்வனஞ் சென்றனன். அங்கவன் சென்றவளவில், காதற்காமந் தணியப்பெறாது, வளர்ந்தெழத் தொடங்கியது. பிறகு, அருகிலுள்ள, குருக்கத்திக்கொடியில்லத்தில், அரசன், உட்கார்ந்து, நகைமாணியைப் பார்த்து, என்விருப்பம் பயனுற, ஓர் உபாயஞ் சொல்லெனக் கேட்டுக்கொண்டனன்.

நகைவேழம்பன், ஆராய்ந்துகொண்டிருக்கும்பொழுது, நெடுமுடிக்கிள்ளி, நற்குறிகண்டு பெருகுகாதலுடையவனாயினன்.

இவ்வண்ணமிருக்கும் பொழுதினில், மதனதாபமுற்ற பீலிவளை, பின்னருளுடன் மாயத்திரையால் தன்னை எவரும் பாராவண்ணஞ் செய்துகொண்டு அவ்வுய்யானவனத்தினுட் புகுந்தனள். புகுந்தபின் அவ்வணமே மறைந்துகொண்டு மாணியுடன் பேசும் அரசனது இரகசிய சம்பாஷணைகளைக்கேட்க எண்ணி அப்பீலிவளை அரசன்பக்கத்தில் நின்றுகொண்டனள். உருவிலாளன் ஒறுக்குந் துன்பமுற்ற மன்னனது வெறுப்புமொழிகளைக்கேட்ட அப்பீலிவளை, மந்திரவாற்றலால் தாழைமடல் ஒன்றுபெற்று அதனில் ஒத்தகாதலினைக் காட்டும் இன்மொழிகள் சில எழுதி அரசன் தன்னைத்தான் வெறுத்துக்கொள்ளாதவாறு, அந்நிருபத்தினை விடுத்தனள்

அதனைக்கண்ட மன்னன், துன்பஞ்சிறிது நீங்கப்பெற்று உவகையுடன் மாணியின்கையிற் கடிதத்தைக் கொடுத்தனன். பின்னர், பீலிவளை தன்மாயத்திரைநீக்கி மன்னன்முன்தோன்றி அவன் மனங்குளிர வாழ்த்திநின்றனள். பின். மன்னன் அவள் கையைப்பிடித்துத் தன் அரியணையில் உட்காரவைத்துக்கொள்வதற்குள், ஆகாயத்தினில் ஓர் நாகதூதனது மொழி அனைவரும் கேட்க வெளிப்பட்டது. அம்மொழியைக்கேட்ட பீலிவளை, மன்னனிடத்தில் அனுமதிபெற்றுப் பிரிவாற்றாமல், பாதளஞ் சென்றனள். அவள் போனபின் தாழைமடலினை, நகைமாணி கெட்டுப்போக்க, மன்னன் அதைத் தேடுவானாயினன். இச்சமயத்தில், அரசியாய பூங்குழலாள் அரசனைத்தேடிவரும்பொழுது, தாழைமடற் சுருள், காற்றினாலுருண்டுவர அதனை எடுத்துவந்து காணிக்கையாக அரசன்முன்வைத்துத் தாம் தேடவேண்டிய தில்லையெனச் சொல்லி நின்றனள். மன்னன், "அரசி காதல் பற்றி ஐயுறுவளோ" என்றெண்ணி, அவளது காலில் விழுந்து வணங்கினன். பிறகு அரசி, சரணடைந்த மன்னனை அவமதித்து வெகுண்டு, அவ்வுய்யானத்தைவிட்டு வெளிச்சென்றனள். அதன் பிறகு மனத்துன்பமுற்ற மன்னனும், நண்பகல் ஆகிவிட்டதென்ன எண்ணி ஸ்நான போஜனங்களை முடித்துக்கொள்வதன் பொருட்டுத் தன்னரண்மனைக்குள் நுழைந்தனன்.

## மூன்றுவது அங்கத்தின், வரலாறு.

தன்முன்பு கணவன் வணங்கிவேண்டிக்கொள்ளத், தான் அதனை அலக்ஷியம்செய்து வெறுத்துவந்தமையினுல், தான்மிக இரங்கினளாகி, அரசிளங்குமரி சந்திரனைக் கண்ணெதிராக வைத்துக்கொண்டு "கணவன் மனமகிழ்விப்பு" எனும் நோன்புபூண்டு அவ்விரதத்தினை முடித்தனள். இதுமுதல் எம்மங்கையைத் தலைவர் காமுறுகின்றனரோ, அந்நங்கை தலைவருடன் கூட்டத்தை விழைகின்றனளோ, அவளுடன் என்னேடு நட்பாடி, அன்பு பூண்டு நந்தலைவர் ஒருமைபூண்பனத்தர் ஆகுக, என்று சபதமும் செய்தனள். இவ்வணம் தம் தலைவரை மகிழ்வித்து இருக்கத், தலைவன் இவ்வணம் நினைப்பது தக்கதன்று நான் எப்பொழுதும் உன்வழி யனுகுபவன், எனப்பணிந்து சொல்லிக்கொண்டிருக்கும் போழ்தினில், பணிப்பெண்களுடன் தம்நோன்புமுடிந்ததென்று வெளிச்சென்றனள்.

இதற்கிடையில் இளவியங்குமாரர் கோலமணிந்த பீலிவளையும், மின்னனுளும், அரசி வருவதற்கு முன்னமே அம்மேன் மாளிகையில் வந்து தங்கியிருந்தனராதலால் அவ்வாசியின்மொழி கேட்டு, மெய்ம்மகிழுவகைபூத்தனர். அரசி அங்கிருந்து போன பின்னர், பீலிவளை, தன்வருகை நினைவுகொண்டுள்ள அரசனது கண்களை இருகைகளினுலும் பொத்தினள். பின்னர் தன்கைகளை எடுத்து அரசன்முன்வந்து நின்று, வாழ்த்திசை எடுத்துப் பாடினள். பின் மின்னனுள் மன்னனின் அனுமதிபெற்றுப் பாதலம் போயினள்.

மன்னனும் இடையீடியாதுமின்றிக், காதலியின் கூட்டம் பெற்றவனுகி, ஒருமுழுத்தப்பொழுது நிலாவின்பம் நுகர்ந்து தன் காதலியுடன் மகளிரறையுட் புகுந்து கலவியயர்ந்து இன்புற்றிருந்தனன். அதன் பிறகு, அவ்விருவரும் ஒத்த இன்பப் பேற்றினுல் உற்ற உவகைக் கடலுள், திளைத்தாடிப் பகலிரவு நொடிப்பொழுதாகப் பொழுதுபோக்கி வந்தனர்.

# பீலிவளை மணம் எனும் நாடகம்.

## நான்காவது அங்கம்

## வரலாறு.

ஒருநாள் பீலிவளை, நெடுமுடிக்கிள்ளியென்ற தன்மணாளனுடன், புகார் நகரத்துக் கழிக்கானற் சோலைக்கு விளையாடப் போயினள். ஆங்குச்சேர்ந்து அவ்விருவரும், ஐம்புலவின்பங்களை இனிதார நுகர்ந்துகொண்டிருந்தனர். ஆங்குக் காவிரியாற்று மணன்மேட்டினில், விளையாடிக்கொண்டிருந்த சிறுமியாய ஓர் இயக்கி, அரசனாற் பார்க்கப்பட்டுக் காமுறப்பட்டாள் என, ஊடல்கொண்டு, துனிகொண்டவளாகிக் கணவனது இன்மொழிகளைச் சிறிதுங்கேளாது மிகக்கோடமுற்றுப் பெண்டிர் புகவொண்ணாத "இளமையோன்" வனத்துட் புகுந்தனள்

பின்னர் அப்பீலிவளை, அவ்விளமையோனது சாபத்தினால், மாதவிக்கொடியாக மாறிவிட்டனள். பின்னர்த் தன்காதலி ஞெரேலென மறைந்தமை கண்டு, வியப்பு அடைந்தவனாகி இன்புற்றவர்க்கும் காதன் மயக்கத்தினை உண்டுபண்ணுவதாய மேகத்திரளைக் கண்ணுற்றுப் பித்துமேலிடப் பெற்றவனாய் மனம் தன் வயத்து நிற்கப்பெறாது உழன்று, நெடுமுடிக்கிள்ளியும் அக்கானகத்திலேயே அவளைத்தேடிக்கொண்டு அவளது நிலையினை அறிய விரும்பி அக்காட்டினை, இரந்துகேட்பவனாகி, அல்லும்பகலும், "காதலி நம்மைப் பிரிந்தனளே", என ஏக்கங்கொண்டு அல்லலுற்றுப் பொழுது போக்கிக்கொண்டிருந்தனன்.

ஓர்நாள், சாரணன்றன் இன்மொழிகேட்டுக் காதலியைக் கடிதிற் சேர்த்துப்பிரியவொண்ணாமற் செய்கின்ற கூடன்மணி எனும் ஓர்இரத்தினத்தைப்பெற்றுத் தன்நாயகியினையொத்துள்ள ஒரு கொடியினைத் தழுவல்வேண்டும் என எண்ணினனாகி; எவ்வளவிற்குள், அவன் அதனைத் தழுவினனோ, அவ்வளவிற்குள் அவ்விடத்திலேயே பீலிவளை தோன்றினள். பின்னர், சந்தோஷமடைந்தவனாகி அவளையழைத்துக்கொண்டு தனது தலைநகராய காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தனன்

# பீலிவளை மணம் எனும் நாடகம்.
## ஐந்தாவது அங்கத்தின் வரலாறு.

காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பிய மன்னன், மன் பதையால் மகிழ்விக்கப்பட்டு இனிது அரசாண்டனன். இவ்வணம் நாட்கள் சிலசெல்ல, ஓர் நன்னாளில் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறையில் நீராடற்குத் தன்மனைவிகளுடன் மன்னன் சென்று தனக்கு மிகவின்பந்தந்த அக்கூடன்மணியை ஓரேவலாள னிடங்கொடுத்து அதனைப்பனையோலை விசிறியில் வைக்குமாறும், தான் நீராடியபின்பு அதனை எடுத்துவந்து தன்னிடங்கொடுக்கு மாறும் சொல்லி நீராடுஞ்செயலை நிகழ்த்தத் தலைப்பட்டனன்.

மன்னன், மந்திரமுறையின்படி முழுகின பின்னர், அம் மணியை எடுத்துவர அவ்வேவலாளன் அதனெதிர்போய்க் கொண்டிருக்கையில், ஒரு கழுகு இறைச்சியென்றெண்ணி அம் மணியை எடுத்துக்கொண்டு பறந்ததைக்கண்டனன். அரசன் இதனையறிந்து வில்லேந்தி அதனைக்கொல்ல, மனையிலிருந்து வெளி வருவதற்குள் அத்திருட்டுப்பறவையும் கண்ணிற் புலப்படாது மறைந்து போனது. பின்னர் பக்குடுக்கையன் மணியுடன் அம்பு ஊடுருவத்தைக்கப்பட்ட கழுகு கிடைத்துவிட்டது. அக்கழுகினைக் கொன்ற அம்பின்மீது பெயர் எழுதப்பட்டுள்ளது என்று அறி விக்கப் பெயரினை வாசித்துத் தனக்குப் பீலிவளைபாற் பிறந்த மக னது அம்பென மன்னன் அறிந்து ஆச்சரியமுற்றனன்.

இதற்கு இடையில், சாயலமுனிவர் தவப்பள்ளியினின்றும் இளைஞனை அழைத்துக்கொண்டு ஒரு தவப்பேரிளம்பெண் அரசனை அண்மினள். அப்பொழுது பீலிவளையும் அங்குவந்து, "மகனை மறைவாக வளர்க்கச்செய்தது, மன்னர் பிரிவச்சத்தினால்தான்" என்று, அரசனுக்கு அறிவித்தனள். பின் பீலிவளையது பிரிவைப் பொறுக்கலாற்றாளாகி நெடுமுடிக்கிள்ளி மன்னன் கானகம் போவ தற்கெண்ணினன். இப்படி இருக்குமளவில் காரணமின்றி இறை

வரான மைநாகமுனிவர் அங்குவந்து, "நீ, கானுறவேண்டுவதில்லை இளந்திரையனிருக்குமளவும் பீலிவளையுடன் வாழ்ந்திருக்க", இது நாகவேந்தனாக்கினை, என மொழிந்தனர். வேந்தன் தானாகவே தன் மகனை இளவரசுப்பட்டத்தில் வீற்றிருக்கச்செய்தனன்.

இவ்வணம் நெடுமுடிக்கிள்ளி நிருபன் திரையனிருக்குமளவும் பீலிவளையுடன் சேர்ந்து வாழ்தல் தனக்குக்கிடைத்ததனாலும், பீலிவளை மனத்துக்கேற்ற கணவனைப்பெற்றமையாலும், பிள்ளைக்கு இளவரசுரிமை கிடைத்ததனால் அவ்விருவரும் தாய்தந்தையர்களிடம் வந்தின்புற்றமையாலும், அரசாளுஞ் செல்வமெய்தினமையாலும் அவ்விளந்திரையனும் என்றினைய அனைவரும் அளப்பிலா ஆனந்தக்கடலுள் மூழ்கியிருந்தனர்.

---

# பீலிவளை மணம் எனும் நாடகம்
## முதலாவது அங்கம்.

இடம், :— புகார்க் கடற்கரை, (சங்கமுகத்துறை.)
மணிபல்லவம்.
சமுத்திரம்.

காலம் :— காலை,

பாத்திரங்கள்:—

1. பீலிவளை, கதாநாயகி, வளைவணன் புதல்வி.
2. மாதவி. பீலிவளையின் தோழிகள்.
3. ரோஜா. ,,
4. சம்பங்கி. ,,
5. மின்னனுள். பீலிவளையின் ஆருயிர்ப்பாங்கி.
6. மன்னன். கதாநாயகன், நெடுமுடிக்கிள்ளி, புகார்வேந்தன்.
7. அழகன். வளைவணனுல் அனுப்பப்பட்ட நாகன்.
8. மாலுமி நாகநங்கையர், தோணி ஓட்டுவோன்.
9. மைநாகன். நாகமுனிவர்களுள் ஒருவன்.
10. ஜலசாரணர் நீரிடை எங்கும் திரியும் காவலர்.
11. நாகராஜன். பாதாலவுலகமாளும் சக்ரவர்த்தி.
12. வளைவணன். நாகநாட்டரசன்.

நாடக நூன்முகம்.
நடாத்துநர்.

1. நன்னூலன்.
2. பாங்கமர்ந்தோன்.

# பீலிவளை மணம்.

## இரண்டாவது அங்கம்.

இடம் :—

1. மாளிகை வெளியிடம்.
2. அரண்மனை.
3. இன்பப்பூம்பொழில்.

காலம் :—

1. காலை.
2. நண்பகல்.

பாத்திரங்கள் :—

1. வேழம்பன். விதூஷகன், நகைமாணி.
2. வித்தகி. பூங்குழலாள், பணிப்பெண்.
3. ஏலவிலையனார். நாகலோகவாசிகள் குரு.
4. நாகதூதன். நாகராஜனது தூதன்.
5. கதம்பமுனிவன். நாககன்னிகைகளுக்குக் கூத்துப் [பயில்விப்பவர்.
6. பூங்குழலாள். நெடுமுடிக்கிள்ளியின் மனைவி. (பாண்டியன் மகள்.)

# பீலிவளை மணம்.

## மூன்றாவது அங்கம்.

இடம் :—

1. மாளிகை.
2. நிலாப்புறமாடம்.
3. பள்ளியறை.

காலம் :—

1. மாலை.
2. முன்னிரவு.

பாத்திரங்கள் :—

1. பக்குடுக்கையன். (மருதன்)
   (மாதருறைவிடத்திற்குக் காவலாளன்.)
   (மெட்டங்கி யணிந்தவன்.)
   (கஞ்சுகி எனப்படுவன்.)
2. பணிப்பெண்கள்.
   (பூங்குழலாட்கு ஏவல் செய்வோர்.)
3. ஊழியமக்கள்.
   (அரசனுக்கு ஏவல் செய்பவர்.)
4. காந்தன். } நாககன்னிகைகளுக்கு நடம் பயிற்றுவித்த
5. வயந்தன். } கதம்பமுனிவரது மாணவர்.

# பீலிவளை மணம் எனும் நாடகம்.
## நான்காவது அங்கம்.

---

காலம் :—

காலை. (பலநாட்கள் 1-மாதம்.)

இடம் :—

1. கழிக்கானற் சோலை.
2. மணமுழை.
3. இளமையோன் வனம்.

பாத்திரங்கள் :—

1. மின்னனுள்.
2. சம்பங்கி.
3. மன்னன்.
4. பீலிவளை.
5. கூடன்மணி கொணர்ந்த நாகசாரணன்.

மன்னனால் காணப்பட்டவைகள் :—

1. மேகம்.
2. கார்ப்பருவம்.
3. வாழை.
4. மேலாடை.
5. கூடன்மணி.

மன்னனால் வினவப்பட்டவைகள். :—

1. மயில்.
2. குயில்
3. அன்னம்.
4. சக்கிரவாகம்.
5. ரோஜா
6. வண்டு.
7. யானை.
8. மணமுழை.
9. ஆறு.
10. மான்.

# பீலிவளை மணம் எனும் நாடகம்.

## ஐந்தாவது அங்கம்.

**காலம் :—**

காலைநேரம்.

**இடம் :—**

1. சங்கமுகத்துறை. (கூடாரம்)
2. அரண்மனை.

**பாத்திரங்கள் :—**

1. வேழம்பன்.
2. மன்னன்.
3. வேடுவச்சி.
4. பக்குடுக்கையன்.
5. தவப்பேரிளம்பெண்.
   (மெய்ம்மொழியாள்—சாயலன் மனைவியார்)
6. இளைஞன். (இளந்திரையன்—நெடுமுடிக்கிள்ளி மகன்)
7. சாயலன்.
8. பீலிவளை.
9. இருணத்தி.
10. மாதவி
11. நாகமங்கையர்.
12. வைத்தாளிகர்.

# பீலிவளை மணம் எனும் நாடகம்.
## நாடக நான்முகம்.

எய்வதா மேகனெனு மேற்ற மெவனிடத்தோ
வாய்வதி வீச்சுரப்பேர் வாய்வ—தெவனிடத்தோ
எத்தகைய வீச்சுரனை யன்பரெவ ரெண்ணுவரோ
அத்தகை யத்தனடி பற்று.

நன்னூலன்:— விரிவுரைபோதும், (திரையெதிர் நோக்கி) இளைஞ! இப்படிவா!

(வந்து)

பாங்கமர்ந்தோன்:— பெரியோய்! யானிருக்கின்றேன்.

நன்னூலன்:— இளைஞ! இப்பேரவை, பன்முறை பல புலவரது நாடகங்களைப் பார்த்திருக்கும். ஆகையின் இப்பொழுது "பீலிவளைமணம்" எனும் பெயரணிந்த முன்காணு வொரு நாடகத்தினை, அவிநயித்துக் காண்பிவிக்கப்போகின்றனன். ஆகையின் பாத்திரச்சபை யண்மையிற்போய் அவரவர் தத்தம் பாடங்களில் நினைவாற்றலுடையாராய் இருத்தல்வேண்டுமென்று முன்னர்த் தெரிவித்துவிடு.

பாங்கன்:— கட்டளைப்படியே நடக்கின்றேன் (என்று வெளிச்சென்றனன்.)

நன்னூலன்:— ஐயன்மீர்! யான் சிறிது விண்ணப்பஞ் செய்கின்றேன்.

(துவகையுடன் தலைவணங்கி நிமிர்ந்துநின்று)

உமது நண்பர்களான எம்மிடத்துள்ள அன்பினாலாவது பழையதும் இனியதும் ஆவது இவ்வாலாறு எனும் அவாவினாலாவது

இக்கூத்தின் தலைவி நல்லொழுக்கமுடையாள் எனும் ஆசையினு லாவது மருணீக்கியழகன் செய்த இந்நாடகத்தினை ஒருமைப் பட்ட மனத்தினராய்க் கண்ணுற்றுச் செவிசாய்த்திருப்பீராக.

(கண்ணுளர் குடிநையுள்)

நெடுநகரிறைவா! ஓலம்! நெடுமுடிக்கிள்ளீ! ஓலம்!
நாகர்தம் நண்பா! ஓலம்! நல்லழகுடையோய்! ஓலம்!
எங்குமே செல்வாய்! ஓலம்! இடரெலாந் தீர்ப்பாய்! ஓலம்!

**நன்னூலன்:—** (காதுகொடுத்து) அடே! யான் விண்ணப் பஞ்செய்தபிறகு அன்றிற் பறவைகளது அழுகுரல்போல என் னவோ ஒரு சத்தங் கேட்கப்படுகின்றது.

(ஆய்ந்து) இருக்கட்டும், உணர்ந்தேன்.

நாக நாட்டரசனுன வளைவணன் புதல்வியாய பீலிவளை தன் பாங்கிமாராய, நாகமங்கையருடன் மணிபல்லவத்தீவினிடை, விளை யாடிக்கொண்டிருக்கும் பொழுதினில், இடையில் ஒரு நாகர் பகைவன் அவளைக் கவர்ந்து போயினன்போலும் ஆகையின் நாகமங்கையர், ஓலமிடுகின்றனர்.

(என்று வெளிச் சென்றனன்.)

**நாககன்னிகைகள்:—** நெடுநகரிறைவா! ஓலம்! நெடுமுடிக் கிள்ளீ! ஓலம்!
நாகர்தம் நண்பா! ஓலம்! நல்லழகுடையோய்! ஓலம்!
எங்குமேசெல்வாய்! ஓலம்! இடரெலாந்தீர்ப்பாய்! ஓலம்!

(ஓலத்தினைக்கேட்ட நெடுமுடிவேந்தன்-சோழன்-வருகின்றனன்)

**மன்னன்:—** அழாதேயுங்கள், உங்களுக்குத்தீங்கிழைத்தவர் யார், யானிப்பொழுதே கதிரவன் வணக்கஞ்செய்து மனைக்குத் திரும்புகின்றேன் சொல்லுமின்.

மாதவி:— பெருந்தலையனும் அவனைச்சேர்ந்த அசுரர் களுந்தான்.

மன்னன்:— அம்மூடர் என்னசெய்தார்கள்.

மாதவி:— கேளுங்கள் மகாராஜாவே! யாங்கள் மணிபல்லவத்தீவில் விளையாடிக்கொண்டிருந்தோம், அப்போது நாகநாட்டு மன்னன் மகளும் எமது ஆருயிர்த் தோழியுமான அப்பீலிவளையை அவ்வசுரன் அம்மின்னனுடன் கவர்ந்துபோயினன்.

மன்னன்:— அவன் போனவழி உங்களுக்குத் தெரியுமா?

சம்பங்கி:— வடகீழ்த்திசைவழியாகப் போயினன்.

மன்னன்:— யான் இருக்கும்பொழுது ஏன் மனக்கவலையடைகிறீர்கள். உங்கள் தோழியை மீட்பதற்கு முயற்சி செய்கின்றேன்.

அனைவரும்:— சூரியகுலத்தரசர்களுக்கு இதுஇயற்கைதான்

மன்னன்:— நீவிர் எங்கு என்னை எதிர்பார்க்கிறீர்கள்.

நாகமங்கையர்:— இம்மணிபல்லவத்திற்கு யாம் போய் அங்கு இருக்கின்றோம்.

(இவ்விடத்து மாலுமி இருக்கின்றனன்.)

மாதவி:— மாலுமி! தென்றிசைநோக்கி மரக்கலம் ஓட்டுவாயாக.

மாலுமி.— அப்படியே யான் ஓட்டுகின்றனன்.
(மாலுமி அரசனையும், அனைவரையும், ஏற்றிக்கொண்டு கலத்தை மணிபல்லவத்தீவிற்கு விடுகின்றனன்.)

மன்னன்:— (ஓடத்தின் விசையைக் கவனித்து) இவ் வோடம் விரைவாகப் போவனுதல் முன்புறப்பட்டுப் பறந்த கருட னைக்கூடப் பிடித்துவிடுவேன் அவ்வசுரனைப் பிடித்தற்கு எவ்வளவு நாழிகை செல்லும்.

மாலுமி:— இதோ மணிபல்லவத்தீவு வந்துவிட்டது.

மாதவி:— (தன் தோழிகளைப்பார்த்து) நாமெல்லோரும் இங்கு இறங்குவோம். அரசர் இங்கிருந்து வடகீழ்த்திசை வழி யாகக் கடலிடைச்சென்று அவ்வசுரனுடல் வலிகெடுத்துப் பீலி வளையையும், மின்னனுளையும், அழைத்துவருவார் நாம் இங்கேயே இருப்போம்.

(அனைவரும் மணிபல்லவத்திடை இறங்கினர். மன்னன் மாலுமியுடன் வடகீழ்த்திசை நோக்கிக் கலத்திலேறிச் சென் றனன்.)

மாதவி:— அம்மன்னர் நம்மனஞ்இருப்பாணியை எடுத்து விடுவரோ.

ரோஜா:— மாதவி! நீ சிறிதும் சந்தேகப்பட வேண்டுவ தில்லை. நம்மன்னனும் போர்வந்த காலத்து இப்பூவுலகத்தினின் றும் இவ்வரசனை அழைத்துவந்து தமது வெற்றிப்படையணி முகப்பிற்குத் தலைவனுக நிறுத்துகின்றனர்.

மாதவி:— நம்மன்னர் வெற்றியை எப்போதும் அடை வராக. நாமனைவரும் இப்பளிங்கறை மண்டபத்தினில் இருந்தால் நம்முடைய உருவம் பிறர்க்குப் புலப்படுமே யன்றி நம்மை எவரும் கவர்ந்து செல்லுதல் இயலாது. நமது பேச்சொலியுங் கேளாது ஆகலின் யாமெல்லோரும் ஒளிந்துகொள்வோம்.

---

(§ நம்மனவிருப்பாணி—நம்மனத்தின்கண் பதிந்த இரும்பாணி.)

(அனைவரும் பளிங்கறையுட் புகுந்தனர்.)
(அரசன் அச்சமுற்ற அப்பீலிவலையை மின்னனுளுடன் ஓடத்திலேற்றி மாலுமியுடன் வருகின்றனன்.)

மின்னனுள்:— எழுந்திரு பயப்படாதே.

மன்னன்:— பெண்ணே! அஞ்சாதே அவ்வசுரன் இறந்தனன். வலைவணன் பெருமை மூவுலகுங் காப்பதல்லவா. தாமரை ஓடை காலையில் மலர்வதுபோல நீயும் கண்மலர்ந்து என்னைப்பார்.

மின்னனுள்:— மன்ன! மூச்சுமாத்திரம் உயிருளது என்பதை அறிவிக்கின்றது. இவ்வளவு நேரமாகியும் ஏன் மயக்கந் தெளியவில்லை.

மன்னன்:— புலியைக்கண்ட பெண்மான்போல மிகவும் அச்சமுற்றனள். இதோபார் முலையிடைப் பூசப்பெற்ற சந்தனப் பொருக்கு அசைகின்றது. மலரினைஒத்த மிருதுவான இம்மார்பு படபடப்பினை விடுகிறதில்லை.

மின்னனுள்:— பீலியே தைரியமாகவிரு. நீ நாககன்னிகையைப்போல இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, அச்சமுறுபவர் மனிதர்களன்றோ. நம்மினத்தவர் இப்படி இருப்பார.

(பீலிவலை மயக்கந் தெளிகின்றனள்.)

மன்னன்:— (சந்தோஷத்துடன்) அடீ உன்தோழி தெளிவடைகின்றனள் பார், சந்திரன் தோன்றியபோழ்து இருள் நீங்கப் பெறுகின்ற இரவுபோலவும், அகத்திய மீன் தோன்றிய போழ்து சேறு நீங்கப்பெறுகின்ற ஆற்றுநீர்போலவும், உள்ள மயக்கம் சிறிது நீங்கப்பெற்றவளாக ஆகின்றனள்.

மின்னனுள்:— பீலி! அஞ்சாதே. அவ்வசுரர் மடிந்தனர் நான் சொல்லுவதை நம்பு. தைரியமாகவிரு

பீலிவளை:— (கண்மலர்ந்து) நம்மருமை மன்னர் மன்ன ராகிய நாகராஜராலேயா, அவ்வசுரர் அடியுண்டு மடிந்தனர்.

மின்னனாள்:— அவராலல்ல. அவரைப்போல ஆற்றலு டைய இந்நெடுமுடிக்கிள்ளி மன்னரால் அவர் அழிந்தனர்.

பீலிவளை:— (அரசனைக் காதலுடன் பார்த்து தனக்குள்) அவ்வசுரர் எனக்கு நற்காக்ஷி கிடைக்கச்செய்தனர். இவ்வரசனைக் காணும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

மன்னன்:— (பீலிவளையை நோக்கி தனக்குள்) இது தக்க துதான். இவள் அழகியாயிருப்பதனால்தான் இவளிடம் அனை வரும் அன்புபூண்டிருக்கின்றனர். மறைபயிலும் மூடனாகிய அப்பிரமன் சிற்றின்ப விழைவினனல்லன். இக்கட்டழகினையும் இந்நடங்கெழிலையும் அமைத்து இவளைப்படைப்பதற்கு அப்பிரம னிடம் போதுமான அவ்வளவு ஆற்றல் இல்லை சந்திரனாவது, மன்மதனாவது, வயந்தனாவது மற்றும் எவனாவது இவளைப் படைத் திருக்க வேண்டும்.

பீலிவளை:— அடீ! நந்தோழிமார்கள் எங்கேப்பொழுது இருக்கின்றனர்.

மின்னனாள்:— அச்சந்தவிர்த்த மாப்பெருமன்னரே, அறி வார். எனக்குத் தெரியுமா?

மன்னன்:— (பீலிவளையை நோக்கி) மிகுந்த துன்பமுறு கின்றனை தைவவயத்தான் ஒருமுறை உன்னைப்பார்த்தமையின் பெரும்பேறு பெற்றுத்திகழும் கண்களைஉடைய அவன் உன்னைப் பிரிந்திடில் அவன்றனது மனம் உன்னைக் காண்டற்கு விரையும் போவா உடையதாகும். அப்படியிருக்கப் பிறந்தநாள்முதல் உன்னை என்றும் பிரியாத உனதுபாங்கிமார் உன்னைப்பிரிந்து தனித் திருப்பின் உன்னைக் காணவேண்டுமெனப் போவலுடன் எண் ணுதிருப்பரோ?

பீலிவளை:— (தனக்குள்) இவளதுமொழி பெரியோர் தன்மைக்கு ஏற்றதாய் சந்திரனிடத்திலிருந்து அமுதம் ஒழுகுவது போல வெளிவருகின்றது. (மின்னனுளைநோக்கி) ஆகையினுலேதான் என்மனம் அப்பாங்கிமாரைப்பார்க்க ஆசைப்படுகின்றது.

மன்னன்:— (கையினுற் சுட்டி) கட்டழகி! உனது தோழிகள் மணிபல்லவத்திலிருந்து உனது முகத்தைக் கிரஹணத்தினின்றும் விடுபட்ட சந்திரனைப்போலக் காண்கின்றனர்.

மின்னனுள்:— அடீ! பார்!

பீலிவளை:— (அரசனை ஆவலுடன் பார்த்துக்கொண்டு) ஒத்த துன்பத்தினராகி என்னை நோக்குகின்றனர்.

மின்னனுள்:— (புன்னகைபூத்து அபிப்ராயத்துடன்) அடீ! யார் உன்னை நோக்குகின்றனர்.

பீலிவளை:— பாங்கிமார்கள்.

மன்னன்:— மாலுமி! அதோ மணிபல்லவங் காணப்படுகின்றது. ஓடத்தினை விரைவாக ஓட்டு.

மாலுமி:— மன்னரே! அப்படியே.

(கடலிடை அலைகளால் ஓடம் அசைகின்றது.)

மன்னன்:— (தனக்குள்) ஓடத்தின்வேகம் எனக்குப்பயன் அளித்தது. காற்றும் எனக்குப் பேருதவி செய்கின்றது. இந்த எனது தோள் பொன்னியல் குரும்பையிற் பொலிந்த வெம்முலையினளான இவளது தோளினைத் தழுவலுற்றது. எனது உடம்பும் காதல் தளித்ததுபோலப் புளகாங்கிதமானது. என்னே! யான்பெற்ற வின்பம்.

**பீலிவளை:—** (வெட்கத்துடன்) அடீ! கொஞ்சந்தள்ளி அப்புறம் உட்காரு.

**மின்னாளுள்:—** எனாலை முடியாது.

(ஓடம் மணிபல்லவத்தின் அருகில் வருதல்)

**மாதவி:—** (பளிக்கறையினின்று வெளிவந்து) (சந்தோஷத்துடன்) (ரோஜாவும், சம்பங்கியும் பின்றொடர்ந்து வருகின்றனர்) மின்னாளுடன் பீலிவளையை அழைத்துக் கொண்டு நம்மன்னர் சித்திரை மங்கையுடன் சேர்ந்த சந்திரனைப் போல இதோ வந்துவிட்டார்.

**ரோஜா:—** (பார்த்து) நம்மிருதோழிகளும் வந்துவிட்டனர் அரசரும் விழுப்புண்படாது வந்தனர்.

**சம்பங்கி:—** அடீ! நன்றாகச் சொல்லுகிறாய் ஜெயிக்க முடியாதவர்களல்லவா அவ்வசுரர்கள்.

**மாதவி:—** தோழிகாள்! வாருங்கள்!! வாருங்கள்!!! நமக்கு நலஞ்செய்கின்ற மன்னரை வரவேற்று மரியாதை செய்வோம்.

(நாககன்னிகையர் அனைவரும் வருகின்றனர்)

**மன்னன்:—** மாலுமி! நங்கூரம்போட்டு ஓடத்தினை நிறுத்து. இம்மாதரசி அவளுடைய தோழிமார்களுடன் பெருவிருப்பமொடு இளவேனிற் செல்வி கொடிகளுடன் சேர்வதுபோலக் கலந்து கொள்ளப்போகின்றனள்.

(மாலுமி அவ்வணமே செய்கின்றனன்.)

**நாககன்னிகைகள்:—** நம்மன்னர் வாகைசூடி மேம்பட்டு வீற்றிருக்கின்றனர்.

**மன்னர்:—** நீவிரும் தோழியுடன்சேர்ந்து மேலாக விளங்குகின்றீர்.

**பீலிவளை:—** (மின்னலாளால் கைகொடுக்கப்பட்டவளாய் ஓடத்தினின்று மிறங்கி) பாங்கிகாள்! வாருங்கள்! துயருழந்த என்னைத் தழுவிக்கொள்ளுங்கள். மறுபடியும் உங்களைப் பார்ப்பேன் என்ற எண்ணம் எனக்கு முன் உண்டாகவில்லை.

(தோழிகள் பரபரப்புடன் தழுவிக்கொள்கின்றனர்.)

**மாதவி:—** பல்லாண்டு பல்லாண்டு நம்வேந்தர் வையகத்தை ஆள்வாராக.

**மாலுமி:—** எவனோ ஒருவன் ஓடத்தினில் வந்துகொண்டிருக்கின்றனன்.

(நாகநங்கையர் நோக்குகின்றனர்.)

**அனைவரும்:—** ஆ! ஆ! அம்பியழகன் வருகின்றனன்.

(அழகன் பிரவேசிக்கிறான்.)

**அழகன்:—** (அரசனைநோக்கி மரியாதையுடன்) மன்ன! வந்தனம்! நாகராஜர்க்கு உதவிசெய்து மேம்பட்டு நீ விளங்குகின்றனை.

**மன்னன்:—** அடே! அம்பியழகன்! (ஓடத்தினின்று மிறங்கி) நண்ப! நன்று நின்வரவு!

(இருவரும் கைகுலுக்குகின்றனர்).

**அழகன்:—** நண்ப! பெருந்தலையனிழைத்த தீங்கினை மைநாகன் மூலமாக அறிந்த எம்மன்னன் இப்பீலிவளையை மீட்டு அழைத்துவா எமக்குக் கட்டளையிட்டனன். பிறகு யாம்

வரும் வழியில் ஜலசாரணர் மூலமாக உனது வெற்றியை அறிந்து என்னுடன்வந்த படையைப் பாதலத்துக் கனுப்பிவிட்டு உன்னைக் கண்டு பீலிவளைமுதலிய இந்நங்கையர்களுடன் உன்னை அழைத்துப்போகலாம் என எண்ணி யானிங்குவந்தேன். நீ எம்மன்னற்கு நன்று இழைத்தனை. வண்ணபகவானால் முன்பு எம்மன்னனுக்கு அளிக்கப்பட்ட இப்பீலிவளை இப்பொழுது நண்பனாய் உன்னால் அவ்வசுரன்கையினின்றும் மீட்டுத்தரப்பட்டவளாகின்றனள்.

மன்னன்:— இவ்வண்ணம் உயர்த்திக் கூறுதல் தகுதியன்று எனெனில் சிங்கவேறுபோன்ற நும்மன்னனைச் சேர்ந்த யான் அப்பகைவரைப் புறங்காட்டி யோடச்செய்தது, மலைக்குகையினின்றும் எதிரொலியாகக் கிளம்பி யெழுந்த சிங்க கர்ஜனை யானைகளைத் துரத்தி ஒட்டுவதனோடொக்கும்.

அழகன்:— இது தக்கதாகும் ஆற்றலிற்கு அழகு செருக்கின்மையன்றோ.

மன்னன்:— நாகராஜனைப் பார்ப்பதற்கு இது நேரமன்று ஆகையின் இப்பீலிவளையை நும்மன்னன்மாட்டு அழைத்துக் கொண்டு போ.

அழகன்:— அவ்வண்ணமே செய்கிறேன். (நாககன்னிகைகளைப்பார்த்து) இங்கு வம்மின் வம்மின்.

(நாக கன்னிகையர் புறப்பட்டனர்.)

பீலிவளை:— (மறைவாக) மின்னல்! உதவிசெய்த நம்மன்னருடன் நேரிற் பேச எனக்கு வெட்கமாயிருக்கிறது ஆகையின் நீ எனக்கு முகமாயிரு.

மின்னனுள்:— (அரசனருகில் வந்து) மன்னரே! பீலிவளை தங்களது புகழைப் பாதலங்கொண்டுபோகத் தாங்கள் அனுமதி தரல் வேண்டுமென விண்ணப்பஞ்செய்கின்றனள்.

**மன்னன்:—** போய்வாருங்கள்.

(அனைவரும் அழகனுடன் ஓடத்திலேறிப் பாதலஞ்செல்கின்றனர்.)

**பீலிவளை:—** (தடுக்கிவிழுந்து) இந்தக்கொடியினில் எனது ஒற்றைவட முத்துமாலை தொத்திக்கொண்டுவிட்டது.(ஒருவருக்கும் தெரியாததுபோலத் திரும்பி மன்னனைப் பார்த்துக்கொண்டு) மின்னால்! இந்தித்திலமாலையை எடுத்துவிடு. கொஞ்சம் தயவு செய்.

**மின்னனாள்:—** (புன்னகையுடன்) நன்றாகத் தொத்திக் கொண்டது எடுத்துவிட முடியாததுபோல் தோன்றுகிறது. இருக் கட்டும். ஆனாலும் பார்க்கிறேன்

**பீலிவளை:—** (புன்னகையுடன்) யாலை எடுத்துவிடச்சொல் லும் உன்வார்த்தையினை நினைத்துக்கொண்டிரு.

**மின்னனாள்:—** உள்ளமாலை அகற்றமுடியாது.இதை எடுப் பேன். (உள்ளமாலை—உள்ளக்காதலை) (முத்துமாலையினைஎடுத்து விடுகின்றனள்.)

**மன்னன்:—** (தனக்குள்) பூங்கொடியே! அப்பீலிவளை முகந்திரும்பி, ஒருகண் சிறக்கணித்தாள்போல என்னைக் கடைக் கணால் நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழும்படி கண்ணிமைப் பொழுது சிறிது இடையூறு விளைத்தனை. நீ அவ்வாறு செய்த தனால் நான் அவளைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன் ஆகையின் எமக்கு நீ நலமே செய்தனை,

**மாலுமி:—** மன்ன! யானுங்களைப் புகார்நகருக்குக்கொண்டு விட இங்கு இருக்கிறேன். தாங்கள் அவ்வசுரர்மீது எய்த அவ் வக்கினியம்பு அவரை எரித்து உமது அம்பறாத்தூணியில் பாம்பு தன்வளையுள் நுழைவதுபோலப் புகுந்துகொண்டது.

**மன்னன்:—** யாமினிச் செல்லலாம். மாலுமி! நங்கூரம் எடுத்துத் துடுப்புபற்றித் துழாவி ஓடத்தைவிடு.

(மாலுமி அவ்வணமே செய்கின்றனன். அரசன்)
ஓடத்தில் ஏறிக்கொள்கின்றனன். பீலிவளை, பெருமூச்சுடன்
மன்னனைப்பார்த்துக்கொண்டு தோழிகளுடன்
அழகனொடு பாதலம் புக்கனள்.

**மன்னன்:—** (பீலிவளை சென்றவழியைப் பார்த்துக் கொண்டு) ஆ! ஆ! காதல் கிடைத்தற்கரிய பொருளின்கண் விருப்பமுடையதாகியுள்ளது.

இம்மங்கையர்க்கரசி தன்வலிகொண்டு உடலினின்றும் என் மனதைத் "தாமரைத்தண்டினின்றும் பெண்ணரசன்னம் நூலினையிழுப்பதுபோல" கவர்ந்து செல்கின்றனள்.

காதன்மனங் கமழும் நாகநகர்ப் பூங்கொடியே
நீதவியே லென்றொருகால் வந்தெனை நீ ஆளாயோ

என்றனைவரும் வெளிச்சென்றனர்.

# (இரண்டாவது அங்கம்)

## முதற்களம்

—o—

(நகைவேழம்பன் வருகின்றனன்.)

**வேழம்பன்:—** ஹி, ஹிஹீ! பார்ப்பானொருவன் பால்பாயாசத்தினைக் கழுத்துரை நிரம்பக்குடித்து வயிறு வெடித்துப்போகும் நிலையில் இருப்பதுபோல மன்னனது இரகசிய விஷயத்தினை இச்சந்தடியில் சிறிதும் வெளியிடாதிருக்க என்னால்முடியவில்லை. முழுதும் அது வெளியிடத் தகுதியற்றதாயிருக்கின்றது. நாக்கினை எவ்வளவு உள்ளுக்கு இழுத்துக்கொண்டாலும் அது வெளியில் நீட்டிக்கொண்டு வருகின்றது. உதட்டினில் பூட்டாவது போட்டுப் பூட்டிவிடட்டுமா? நந்தோழன் அரசாட்சி மண்டபவிருக்கையினின்று எழுந்திருக்கும்வரையில் இம்மாளிகை வெளியிடத்தினில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்.

(வேழம்பன் மாளிகை வெளிச்சுவர்ப்பக்கத்தில்)
இருந்த ஓர் அணையின்மீது உட்கார்ந்தனன்.
(பணிப்பெண் வருகின்றனள்.)

**வித்தகி:—** கதிரவன் வணக்கஞ்செய்து திரும்பிவந்தது முதற்கொண்டு நங்கொழுநனார் யானைநோயுண்ட விளாங்கனிபோல உள்ளீடில்லாமனத்தாராகி ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆகையின் அவரது காதனினைவிற்குக் காரணம் என்னவென்று அவரது பாங்கராய நகைவேழம்பனிடத்திருந்து அறிந்துவாவென நம்மரசி கட்டளையிட்டுள்ளாள். நான் அந்த பார்ப்பானை எப்படி எய்ப்பது; புன்னுனிப்பனித்துளிபோல அவன்கிட்ட ராஜாவின் ரகசியம் ரொம்பநேரம் தங்கியிருக்காது. இவன் எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பான். இவனைத்தேடிண்டு போறேன். (கொஞ்சதூரம் நடந்து சுற்றிலும் நோக்கி) இவன் என்ன பொம்மைக் குரங்குபோலப் பேசாமல் குந்திண்டிருக்கிறான். இவன்கிட்டபோறேன் (போய்) சாமி! கும்பிடறேன்.

**வேழம்பன்:—** உன்புருஷனோடு சொகமாயிரு. (தனக்குள்) இவளைப் பார்க்கும்போதே இரகசியம் நெஞ்சைப்பிளந்து கொண்டு வெளிவந்துவிடும்போலிருக்கிறது. வித்தகி! பாடறத் தொழிலை விட்டுவிட்டு யெங்கெவந்தெ.

**வித்தகி:—** அம்மணியின், கட்டளைப்படி தங்களைப் பார்க்க வந்தேன்.

**வேழம்பன்:—** அம்மணி! என்ன கட்டளையிட்டிருக்கா.

**வித்தகி:—** "முன்பெல்லாம் என்னிடத்தில் ஆசைகொண்ட புருஷன் இப்பொழுது என்னவோ ஒரு கவலையுற்று ஏங்கிக் கிடக்கின்றான். என்னையும் திரும்பிகூட பார்க்கிறதேயில்லை." என்று அம்மணி சொல்லரு.

**வேழம்பன்:—** (ஊகித்துப்பார்ப்பதுபோல) நந்தோழன், அம்மணிக்கு என்ன விரோதமாக நடந்திருப்பான்.

**வித்தகி:—** சாமி! ராசா, எவள்கிட்டேயோ காதல்வைச்சிருக்கான். அவள்பேரைச்சொல்லி அம்மணியை அதேநினைவினால் கூப்பிட்டான்.

**வேழம்பன்:—** (தனக்குள்) எப்படி அவன் ரகசியத்தைத் தானாகவே வெளியிட்டுட்டான். என் இப்பொழுது நாக்கை இழுத்துக்குனு நான் கஷ்டப்படறேன்.

**வேழம்பன்:—** வித்தகி! அம்மணியைப் பிலிவளையின்னு கூப்புட்டானா. அந்த நாகப்பொண்ணைப் பார்த்ததுமுதற்கொண்டு அவன் பைத்தியம்பிடிச்சுப்போய் மூளைகலங்கி அம்மணியை மாத்திரம் கஷ்டப்படுத்துறான் என்று நினைக்காதே. அந்தப்பைத்தியம், விளையாடறத்துக்கு மனசில்லாமல் என்னையும் ரொம்ப தொந்தரவுபடுத்துறது.

**வித்தகி:—** (தனக்குள்) ராஜாவினுடைய ரகசியத்தை வெளிப்படுத்திப்புட்டேன். சாமி! அம்மணிக்கு என்ன சொல்றதுங்க.

**வேழம்பன்:—** வித்தகி! ராசாவைக் கானல்நீரினின்றும் திருப்பரத்துக்கு வேலைசெய்யுரேன். அப்புறம் அம்மணிமுகத்தைப் பார்க்கறேன் என்னு எசமானிகிட்டே சொல்லு.

**வித்தகி:—** கட்டளை எப்படியோ அப்படியே.

(கண்ணுளர் குடிஞையுள்)

வைதாளிகர்.

வெல்க! வெல்க!! நம்மன்னர் மன்னர் வெல்க!!!

மன்ன! உமக்கும், சூரியனுக்கும், இருளைத்தீர்க்கும்வேலை ஒத்ததாகவேயுள்ளது. இதோபாருங்கள் சூரியன் ஆகாயநடுவினில் கண்ணிமைப்பொழுது நிற்கின்றனன். உமக்கும் சுயேச்சையாயிருக்குங்காலம் வந்துவிட்டது. நீவிர் எழுந்தருளுமின்.

(உடனே கன்னலன் மணி அடிக்கின்றனன்.)

**வேழம்பன்:—** (மணியோசைகேட்டு) ராஜா நாளோலக்கவிருக்கையினின்றும் எழுந்து இவ்வழியாகத்தான் வருகின்றார் போலும். நானும்போய் பக்கத்தில் நிற்கிறேன்.

(வேழம்பன் எழுந்து அரசனண்டைபோய் நின்றனன்.)

## இரண்டாங்களம்.

(அரசனும் வேழம்பனும் வருகின்றனர்.)

**மன்னன்:**— அந்நாகலோக நங்கையை நான் பார்த்தது முதற்கொண்டு அவள் மன்மதனம்பு பாய்ந்தவழியையே பின்பற்றி என்னுளத்திற்புகுந்து வீற்றிருக்கின்றனள்.

**வேழம்பன்:**— (தனக்குள்) பாண்டியன்மகளாய பூங்குழலாள் மிகவும் அரசனால் துன்புறுத்தப்பட்டாள்போலும். ஆ! ஆ!! ஆ!!! அவள் மிகவும் இரங்கற்பாலளாய் உள்ளனள்.

**மன்னன்:**— இரகசிய ரத்னப்புதையலைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனையா, அல்லது உள்ளங்கை நெல்லிக்கனி போலச் செய்தனையா.

**வேழம்பன்:**— (துயருடன் தனக்குள்) அந்தப்பாத்தைப் பணிப்பெண்ணால் நான் ஏமாற்றப்பட்டேன்போலும். மோசம்! வெகுமோசம்!! இல்லாவிட்டால், நம்பாங்கன் இவ்வண்ணம் நம்மைக் கேட்கமாட்டான்.

**மன்னன்:**— (ஐயத்துடன்) நீ என் சும்மாவிருக்கின்றனை. பொம்மையா?

**வேழம்பன்:**— இவ்வண்ணம் என்னால் உள்ளிழுத்துக் கொள்ளப்பட்ட நாக்கு உனக்குக்கூட மறுமொழியளிக்காது படுத்துக்கொண்டிருக்கிறது. எப்படித்தெரியுமா? நாக்கைப் பல் பாதுகாக்கிறது. பல்லைக்கடித்துக்கொண்டு வெளிவிடாதிருக்கின்றேன்.

**மன்னன்:**— தக்கது. இனி இப்போழ்து, எங்குச்சென்று பொழுதுபோக்குவது.

வேழம்பன்:— சமையலறைக்குப் போவோம்.

மன்னன்:— அங்கு என்ன?

வேழம்பன்:— அங்குக் கொழுக்கட்டை, அப்பம், லட்டு ஜீலேபி, தயிர்வடை, மைசூர்மசாலேதோசை, பெங்களூர்பாகு பொருளங்காய், முறுக்கு, வடை, சுண்டல், குலோப்ஜான் முதலிய இனியபண்ணியாரங்கள் வெவ்வேறு வகையினவாயும் பல்வேறு வடிவுடையனவாயும் இருக்கும். இன்னும் உண்பன சிலவும், தின்பன சிலவும், நக்குவன சிலவும், பருகுவன சிலவும் ஆயபல தின்பண்டங்கள், நளபீமரைப்போன்ற நமது மடையாாலமைக்கப்படும்பொழுது அவற்றையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டு பொழுதுபோக்கிவிடலாம். எனக்கு இப்பொழுதே நாவில் நீர் ஊறிச் சொட்டுகின்றது. ஏன் கவலைப்படுகின்றனை.

மன்னன்:— (புன்னகையுடன்) உனக்கு வேண்டியது இருப்பதனால் நீ இன்புறுகின்றனை. எனக்கு வேண்டியதில்லையே. நானின்புறுவதெப்படி?

வேழம்பன்:— நீதான் உனக்கொத்த மாதரசியைப் பார்த்தனையே.

மன்னன்:— ஆனால் என்ன?

வேழம்பன்:— அப்பெண்மான் உன் கண்வலைக்கு அகப்படாமற்போகும் என்று நான் எண்ணவில்லை.

மன்னன்:— நீயே பார்! இது ஓரந்தானே

வேழம்பன்:— இவ்வளவுநேரம் பேசிக்கொண்டிருந்தே எனக்கு உவகையைப் பொங்கச்செய்துவிட்டனை. அம்மங்கையர்க் கரசியாய பிலிவளை, என்னைப்போல அழகிலும், உருவிலும் நிகரற்றவளாயிருப்பளா?

**மன்னன்:—** மாணி! உறுப்புதொறும் அளவிலாவழகுடையவள், அவளென்று உனக்கு நினைவில் இருக்கட்டும். சுருங்கச் சொல்கிறேன் கவனமாய்க்கேள். அவள் உடம்பிற்கு அணிகலம் அழகைத் தருவதன்று. அவளுடம்பு அணிகலத்திற்கு அழகு அளிப்பதாகும். கைபுனையணிக்குக் கைபுனையணியாம். உவமைக்கு எதிர் உவமையாம். அம்மேனியை நேரிற் கண்டின்புற்றவரே மெய்யென நம்புவர்.

**வேழம்பன்:—** ஆகையினால்தான் நீ மாண்டுபட்டு முகிலவாம்பறவையது நோன்பு பூண்டு வாயைத்திறந்துகொண்டிருக்கின்றனை

**மன்னன்:—** காதல்வயத்தோர்க்குத் தனியிடமன்றி வேறிடம் இன்பந்தராது. ஆகையின் எனக்கு நீ மயக்குறு பூம்பொழில் போகும் வழியினைக்காட்டு.

**வேழம்பன்:—** (தனக்குள்) என்செய்வது. (வெளிப்படை) இவணிவண் வருக. (நடந்து) பூம்பொழிலால் ஏவப்பட்ட தென்றலிளங்காற்றால், நீ வரவேற்கப்படுகின்றனை.

**மன்னன்:—** (பார்த்து) இக்காற்றினுக்கு இவ்வடைமொழி தக்கதுதான். இத்தென்றலாடவன் பாசிலைக்குருகிளங்கொடியினைத் தேனிக்கச்செய்துகொண்டும், இம்மௌவலங்கொடியினை ஆடலுறச்செய்துகொண்டும், ஒருபால் நனையன்பும், ஒருபால் குறிப்புநடையுங்கொண்டு காதலன்போல விளங்கா நின்றனன்.

**வேழம்பன்:—** இதுபோலவே உன்மனநிலையும் ஆகுக. (நடந்து) இப்பூம்பொழில்வாயில் இதுவே. நாம் உட்சென்று காணலாம்.

**மன்னன்:—** முதலில்நீபோ நானும் வருகின்றேன்.

(இருவரும் புகுகின்றனர்.)

**மன்னன்:—** (முன்னர்நோக்கி) பாங்க! பூங்காவனக் காட்சி மனக்கவலை மாற்றுமென எண்ணியது, நலம்பயந்ததிலது. ஆற்றுநீரை எதிர்த்துச்செல்பவன் விரைவிற் கடலுள்புகுமாறு போல இவ்வுய்யானத்துள் காமவெப்பந் தணிப்பவந்தேனுக்கு வெம்மைமீதூரலே மேம்படுகின்றது.

**வேழம்பன்:—** வெப்பு எவ்வணம் மிகுக்கின்றது.

**மன்னன்:—** முதலிலேயே அரும்பொருள் வேட்கையினின்றும் தடுக்கவியலா என்மனதை அம்மன்மதன் ஐங்கணைகளாலும் வருத்தி மெலிவித்தனன். இப்போழ்தினிலோ தேமாமரங்களது பழுத்தவிலைகளெல்லாம் உதிர்ந்தன. பாசிலந்தளிர்களோ பச்சைப்பசேரெனப் பசுமையுற்றுள்ளன. குயிற்காளமோ ஒலிக்கின்றது. வண்டு நாணொலி வளர்த்ததாயுள்ளது. கிள்ளையம் புரவிகள் கிளைத்தெழுகின்றன. இவையெலாங் கூடினமையின் அவ்வுருவிலாளன் முன்னினும் மிகவே வருத்தி மெலிவிப்பன். இனிச்செய்வதென்ன உளது.

**வேழம்பன்:—** அழுததுபோதும். சீக்கிரமாகவே அம்மன்மதன் உன்விருப்பத்தை நிறைவேற்றி இன்பந்தருபவனுவன்.

**மன்னன்:—** பார்ப்பனன் திருமொழி யேற்கப்பட்டது.

(நடந்து செல்கின்றனர்.)

**வேழம்பன்:—** இவ்வுய்யானத்தினது இளவேனிற்பருவ வரவினை அறிவுறுத்தும் அலகிலா வழகினைக்கண்டு களிப்பினை எய்துவாயாக.

**மன்னன்:—** காமர்வனப்பினைக் காண்டொறூஉம் யான் எங்கும் நுகர்கின்றனன். இதோபார் இம்மருதாணிப்பூவினை இது முனையில் மங்கையர் நகம்போலச் சிவந்துளது. இருமருங்கும் கார்நிறம் உடையதாயுளது. இவ்விளவசோகுமலர், செந்நிறவள

வனப்புடையதாகி அலரும் பருவத்ததாகியுளது. இத் தேமாம் பூங்கொத்து, சிறிதுலாவிய தாதுகளால், கருமஞ்சணிறத்ததாகி யுளது. குழவிப்பருவத்திற்கும், இளமைப்பருவத்திற்கும், நடுவணதாகிய நிலையில், இவ்விளவேனிற் செல்வி வீற்றிருக்கின்றனள். என்னே! இவ்வனப்பு!.

**வேழம்பன்:—** இம்மாதவிப் பூங்கொடி யில்லம், வண்டு வீழ்ச்சியால் உகுந்தமலர்களால், மணிக் கற்பாறையிற் பூவமளி யமைத்து, உன்னையே வரவேற்கக் காத்துக்கொண்டிராநின்றது. அஃது உன்னால் கடைக்கணித்தற்பாலது.

**மன்னன்:—** உன் விருப்பத்தின்வண்ணமே வருகின்றனன்.

(நடந்துபோய் உட்கார்ந்தனர்.)

**வேழம்பன்:—** இங்கு இனிதமர்ந்து கண்ணைக் கவரும் கொடிகளின் வனப்பினைக் கண்டுகொண்டே பிலிவலையிடத்த தான காதல்நினைவினைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

**மன்னன்:—** (பெருமூச்சுவிட்டு) நண்ப! பிலிவலையையே பார்க்கவேண்டுமென்று, பேராவல்கொண்ட என் கண்கள் வணரிளங்கிளையவும், நறுமணமார் மலரனவும் ஆயஇப் பூங்கொடிகளில் நன்கு பதியப்பெற்றிருக்கமாட்டா. இப்பூங்கொடிகள் பொதுவறு சிறப்புடை நங்கையர்க்கு உவமையாகுமோ? யாதாயினும், ஓர் வழிசெய்து, என் வேண்டுகோளைப் பயனுறச்செய்.

**வேழம்பன்:—** (சிரிப்புடன்) ஹ! ஹ! ஹஹ! அவ்வகலிகை காதலனை ஆயிரங்கண்ணனுக்குத் துணைபுரிந்தோனை சந்திரனும் பிலிவலை காதலனை உனக்கு நானும் ஆக இருவரும் இங்கு மதிமருட்சி பூண்டேமாக ஆய்விட்டனம்.

**மன்னன்:—** இப்படி இல்லை. மிகு நட்பல்லவா, விழைவு நிறைவிப்பது.

**வேழம்பன்:—** மன்னர் ஆராய்ந்துபார்க்கிறேன், புலம்புவை யாயின், என் மனவொருமைப்பாடு கலைந்துபோம். ஆகையின் அழேஎல்.

(இவ்வணம் சிந்தைவயப்பட்டதனைக் காட்டுகின்றனன்.)

**மன்னன்:—** (நற்குறிகண்டு தனக்குள்) அப்பீலிவளையோ அரியளாயுளள், எதிர்பாராமல் இம்மன்மதன்செயல் நிகழ்கின்றது. விழைவு பயனுறும்போழ்து, உற்றதுபோல உள்ளம் ஒருங்கின்பம் எய்துகின்றது. (காதல் நினைவினனாயிருக்கின்றனன்.)

---

## மூன்றாங்களம்.

(பீலிவளையும், மின்னாளும், வானவூர்தியினின்றும்,)
இறங்கி வருகின்றனர்.

**மின்னாள்:—** காரணஞ்சொல்லாமல் எங்குப் போகின்றாய்.

**பீலிவளை:—** அன்று நாமெல்லோரும் மணிபல்லவத் தீவினின்றும், பாதலம் போகும்பொழுது, எனது மாலை ஒரு பூங்கொடியினில் தொத்திக்கொள்ள அப்பொழுது என்னைப் பார்த்துச் சிரித்தனையே, இப்பொழுது ஏன் கேட்கின்றனை.

**மின்னாள்:—** என்ன அந்நெடுமுடிக்கிள்ளி நிருபன் திருமுன்னேகப் புறப்பட்டனையா?

**பீலிவளை:—** இந்த என்செயல் நானே முற்றிலும் ஒளித்து விட்டது.

**மின்னாள்:—** யாரைத் தூதாக அனுப்பியுள்ளாய் ஆராய்ந்து செய்.

**பீலிவளை:—** மனதைத் தூதாக அனுப்பியுள்ளனன்.

**மின்னாள்:—** நீதானே செயற்பாலதும், உயற்பாலதும், ஆராய்ந்து துணிவுகொள்.

**பீலிவளை:—** இச்செயலைச் செயத் தூண்டியவன் மன்மதனல்லவா. உறுதிகொள்வது என்னுளது?

**மின்னாள்:—** இனி எனக்கு மறுமொழி விடுக்க வியலாது.

**பீலிவளை:—** எவ்வணஞ் சென்றால் இடையூறுநேரிடாதோ அவ்வணம் எனக்கு வழிகாட்டு.

மின்னனுள்:— தைரியமாயிரு. ஏலவிலேயனூர் நமக்குக் குழன்முடி மந்திரம் கற்பித்திருக்கின்றமையின் யாம் அசுரர்கண் களுக்குப் புலப்படமாட்டோம்.

பீலிவளை:— அடடா! நான் மறந்துபோய்விட்டேன்.

(நிலத்திற்குச் சிறிது சமீபத்தில் வந்து)

மின்னனுள்:— அடீ! காவிரிகடலொடு கலக்குஞ் சங்க முகத்துறை நீரினுள் தன்னழகைப் பார்ப்பதுபோன்றுள்ள புகாஅர் நகரினுக்கு முடிமணியாய நெடுமுடிக்கிள்ளி யரண்மனையில் யாம் வந்துள்ளோம்.

பீலிவளை:— (பார்த்து) நாகருலகே வேறிடத்தில் நின்ற தெனப் பகர்தல்வேண்டும். (உற்றுநோக்கி) அடீ! அவ்வன்பன் எங்கு இருப்பான்

மின்னனுள்:— இந்த உய்யானவனத்தின் ஒருசார்பில் உள்ளதாய பூம்பொழிலில் இறங்கி அவரிருக்குமிடத்தை அறிவோம்.

(இருவரும் இறங்குகின்றனர்)

மின்னனுள்:— (அரசனைப்பார்த்து) (உவகையுடன்) அடீ! நிறைமதி நிலவினைப்போல, நம்மன்னர் உன்னைக் காமுறுகின்றனர்.

பீலிவளை:— (நோக்கி) அடீ! இப்பொழுது முதன் முதற் பார்த்தலால், மிகுவின்பத் தோற்றமுடையராய் நம்மன்னர் காணப்படுகின்றனர்.

மின்னனுள்:— பொருந்துகின்றது. ஆகையின் வா. போவோம்.

**பீலிவளை:—** நான், என்னுரு மறைத்து, இவன் பக்கல் இருந்து, அனைத்தையுங் கேட்கிறேன். மன்னன் இத் தனியிடத்தில் தன்பாங்கனுடன், ஏதோ வொன்றை ஆராய்ந்து கொண்டுளான்.

**மின்னனாள்:—** உனக்கு எங்ஙனந் தோன்றுகிறதோ அங்ஙனஞ்செய்.

**வேழம்பன்:—** அடே! அரியளான அக்காதலியின் கூடல்வழி உய்த்துரைப்பட்டது.

**மன்னன்:—** (வாய்பேசாதிருக்கின்றனன்.)

**பீலிவளை:—** இவனால் விரும்பப்படுகின்றவள் எம்மங்கை? அவள் தன்னையே மேன்மையளாகக் கருதுகின்றனள் போலும்.

**மின்னனாள்:—** என் மானிடத்தன்மை கொள்கின்றனை.

**பீலிவளை:—** மன்னனால் விரும்பப்பட்டவள் ஒருவேளை என்னினும் பிறள் ஒருத்தி இருக்கலாமோ என ஐயத்தினால் யான் அஞ்சுகின்றனன்.

**வேழம்பன்:—** வழி கண்டு பிடித்தாய்விட்டது. சொல்கிறேன்

**மன்னன்:—** அப்படி என்றால் இயம்பு.

**வேழம்பன்:—** கனாத்தோற்றத்தினை உண்டாக்கும் உறக்கத்தினைக் கைக்கொள். இல்லாவிடில் அப்பீலிவளையின் உருவழகினைச் சித்திரத்தில் எழுதிப்பார்த்துக்கொண்டிரு.

**பீலிவளை:—** (உவகையுடன்) மனமே! கவலைகொள்ளாதிரு.

மன்னன்:— இரண்டும் தக்கவையல்ல. இந்த என் உள்ளம் எப்பொழுதும் காமன் ஐங்கணைகளால் ஆற்ருேயுற்று வெதும்பியுள்ளது. நான் எப்படித்தூங்கிக் கனுவினைக்காண்பது. அவளைப் புணரவில்லையே என வருத்தம் மேம்படுகின்றமையால் என் கண்களில் கண்ணீர்மல்கியுள்ளது. எப்படிநான் சித்திரம்வரைவது.

மின்னனுள்:— அடீ! இதைக் கேட்டனையா?

பீலிவளை:— கேட்டேன் இது என்மனதிற்கு நம்பிக்கைதரவில்லை.

வேழம்பன்:— இவ்வளவுதான் என் மாண்புலமை கண்டு பிடித்தவழி.

மன்னன்:— (நெட்டுயிர்ப்புடன்) அவள் எனது ஆற்றுமைத் துயரத்தினை அறியாதவளாய் உளளோ என்னவோ! ஒருவேளை என்காதலுணர்ந்தும் அவமதித்து இருக்கலாம். போகிறது, அவ் வனங்கன் என்கூடலெண்ணங்களைப் பயன்பெருதனவும் சுவையிலவாகவுஞ்செய்து அவ்வளவில் மேன்மையாளனுகட்டும்.

மின்னனுள்:— அடீ! இது உன் காதிற்பட்டதா?

பீலிவளை:— அடடா! என்னிலையை இவ்வணம் உணர்ந்துளன். இனி இவன் முன்பு நின்று எப்படி மறுமொழி யளிப்பேன். தெய்வசக்தியால் ஒரு தாழைமடலினை வருவித்து அதனில் விடை எழுதி அனுப்ப விழைகின்றனள்.

மின்னனுள்:— எனக்கு அது உடன்பாடே.

பீலிவளை:— (பரபரப்புடன் எடுத்து சொன்னவண்ணஞ் செய்கின்றனள்.)

**வேழம்பன்:—** (நோக்கி) ஹ! ஹ!! ஹா!!! என்னடா! இது!! பாம்புச்சட்டைபோல நம்மெதிரில் விழுந்தது.

**மன்னன்:—** (உற்றுநோக்கி) தாழைமடலில் எழுத்து உள்ளது.

**வேழம்பன்:—** ஒருவேளை பீலிவளை பார்வையிற்படாமல் உனது புலம்புறு துயரினைச் செவியுற்றுக் காதல் நிருபம் எழுதி விடுத்துளளோ என்னவோ!

**மன்னன்:—** எண்ணங்கள் காண இடங்களே இல்லை. (எடுத்துப்படித்து) (உவகையுடன்) அடே! உன்கருத்துப் பொய் யன்று.

**வேழம்பன்:—** இனி நீ இன்பமுற்றிரு. எழுதியுள்ளதைக் கேட்க விரும்புகின்றேன்.

**பீலிவளை:—** நன்று. ஐய நாகரிகனாய் உள்ளனை.

**மன்னன்:—** நன்ப! கேள். (படிக்கிறான்)

1 கொடுங்குழையாளோலை இளங்காளை காண்க
அடுந்துயரமுள்சுட வெந்தாற்றுதேனுற்ற
விடுந்தசிறுமடலால் விம்மனேய்தீர்ந்தேன்
நெடுங்கணைன்றானும் நினைவகல்வானாக.

2 உய்யுமாறுரை உன்னையலாவிலேன்
ஐய நின்னடித்தாமரை பற்றினேன்
செய்தவம் புரியாச் சிறியார்கள்போல்
நைய வெங்காமத்திற் கையறவெய்தினேன்.

3 கண்ணும் வாளற்ற கைவளை சோருமால்
புண்ணும் போன்று புலம்புமென் னெஞ்சரோ
எண்ணில் காமமெரிப்பினும் மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணலதில்லையே.

**பீலிவளை:—** இப்பொழுது என்னியம்பப் போகின்றனன்.

**மின்னனுள்:—** தாமரைத்தண்டுபோன்ற உறுப்புக்களாலேயே அறிவிக்கப்பட்டது. இன்னும் உனக்கு மெய்ம்மயிர் சிலிர்ப்பது தெரியவில்லையா?

**வேழம்பள்:—** பசித்திருந்த நான் காணிக்கை யுணவு பெற்றதுபோல் நீயும் மனவமைதியுற்றுவிட்டனே.

**மன்னன்:—** மனவமைதிமாத்திரம் என்று சொல்கின்றனேயே. ஒத்த காதலைக்குறிப்பதும், பொருட்சுவை யழகிதும் ஆய இக்கடிதம் என்முகத்துடன் கலந்த அக்கயற்கணிமுகம் போன்றல்லவா உளது.

**பீலிவளை:—** இப்பொழுது நம்மிருவரது காதலும் சமனளவினதானது.

**மன்னன்:—** பாங்க! நூல்புடைத்தாற்போற்கிடந்த வித்தகஞ்சேர் நுண்வரிகள் விரல்வியர்வையினுல் அழியப்போகின்றன. இந்தக் காதற்கடிதத்தினை பத்திரமாய் வைத்துக்கொள்.

**வேழம்பன்:—** (வாங்கி) என் இப்பொழுது அம்மாதாசியாய பீலிவளை உன் உட்கோள்களைப் பூக்கச்செய்து கனிபெறச் செய்யாமல் இருக்கின்றனள்.

**பீலிவளை:—** அடீ! மனதைத் தேற்றிக்கொள்வதற்குள் நீ மன்னன்முன் வெளிப்பட்டு எனக்கு எது ஏக்கதோ அதனை விளங்க மொழி.

**மின்னனுள்:—** (அப்படியே என்று சொல்லி வெளிப்பட்டு அரசனை யண்மி) சோழமன்னவ! வந்தனம்!! வந்தனம்!!!

**மன்னன்:—** (உவகையுடன்) நல்வரவு! நல்வரவு!!
முகிற்குலம் மின்னலின்றி அழகிதாயிராததுபோல நீயும் அவளின்றி வந்தமையின் என்னுளங் களிக்கச்செய்கின்றிலே.

**மின்னனாள்:—** முதலில் முகிற்குலம் தோன்றும். பின்னர் மின்னற்கொடி.

**வேழம்பன்:—** (அரசனை யண்மி மறைத்துக்கொண்டு) இவள் பிலிவலை யல்லளா? அம்மாதரசியின் ஆருயிர்ப் பாங்கிதான் போலும்.

**மின்னனாள்:—** பிலிவலை தங்கள் திருமுன் வணக்கஞ் செய்து விண்ணப்பஞ்செய்துகொள்கின்றனள்.

**மன்னன்:—** என்ன கட்டளையிடுகின்றனள்.

**மின்னனாள்:—** எனக்கு அவ்வசுரர்களால் துயர்உற்ற போழ்தினில் மன்னரே எனக்குச் சரணயிருந்தனர். அத்தகைய நான் உனது பார்வையால் தோன்றிய காமத்தால் மிகப் பிடிக்கப்பட்டவளாகிவிட்டேன். மீண்டும் தேவரீரே தஞ்சமாகல் வேண்டும்.

**மன்னன்:—** என் ஆருயிர்ச் சகோதரி!

அந்த இன்முகத் தோற்றமுடையளைக் காதனினைவு மிக்கவளாகச் சொல்லுகின்றனை. அந்நினைவு நீக்க அல்லலுழக்கும் நெடுமுடிக்கிள்ளியைப் பாராதிருக்கின்றனை. இருபாலும் உள்ள காதல் சமனாகியுளது. காய்ச்சிய இருப்புடன் காய்ச்சிய இரும்பே சேர்த்தற்கு இயைவதாகின்றது.

**மின்னனாள்:—** (பிலிவலையை யண்மி) தோழி! வா. உன்னினும் மிகக் காமநோய் உழக்கும் உன்காதலைப்பார்த்து அம்மன்மகனுக்குத் தூதியாக ஆய்விட்டனன்.

**பீலிவளை:—** (திரைமறையினை நீக்கி) அஹஹா! விரைவின் உன்னால் விடப்பட்டவள் ஆகிறேன். உன் துணையிருப்பின் எனக்கென்ன குறைவு.

**மின்னனாள்:—** இன்னு மிரண்டு நாழிகைக்கெல்லாம் யார் யாரைவிடப்போகிறார் என்பதனை அறிவேன். மறந்துவிடாமல் பிற்றை நிலையினைச் செவ்வனே கைக்கொள்.

**பீலிவளை:—** (அரசனை அண்மி நாணத்துடன்)
மாப்பெருமன்னவ! வந்தனம்! வந்தனம்! நீவிர் வெல்க.

**மன்னன்:—** அழகி! நாகமன்னரைவிட்டு வேறு எவரையும் அணையாத இந்த வெல்க என்றமொழி என்னைக் குறித்து உன்னால் இயம்பப்பட்டமையின் யான் எல்லாரினும் மேம்பட்டவனாயினேன்.

(கையாற் பிடித்திவளை அமரச்செய்கின்றனள்)

**வேழம்பன்:—** அரசி! மன்னர்பாங்கனும் அந்தணனும் ஆய என்னை ஏன் வணங்கவில்லை.

**பீலிவளை:—** (புன்னகையுடன் அடிபணிகின்றனள்)

**வேழம்பன்:—** உனக்கு மங்கலம் பொங்குக.

(கண்ணுளர் குடியையுள்)

**நாகதூதன்:—** மின்னல்! பீலிவளையை விரைவினில் வருவி கதம்பமுனிவர் உங்களுக்குக் கற்பித்ததும் ஒன்பான் சுவையுடையதும் அழகுடை அவிநயம் அணிந்ததும் ஆய உமது கூத்தினை நாகவேந்தனார் காண விழைகின்றனர். (அனைவரும் செவியளிக்கின்றனர். பீலிவளை துயரினை அனுபவிக்கின்றனள்.)

**மின்னனுள்:—** நாகதூதன் மொழியினை நம்பாங்கி கேட்டிருப்பாள். மன்னர் உத்தரவு அளித்தல்வேண்டும்.

**பீலிவளை:—** எனக்குச் சொல்வதற்கு நா எழவில்லை.

**மின்னனுள்:—** மன்ன! பிறர்க்குரியர் இம்மக்கள். ஆகையின் இப்பாங்கி நாகர்களிடம் தாம் குற்றவாளியாகா வண்ணம் தங்கள் உத்திரவுபெற்றுப் போகவேண்டுமென விரும்புகின்றனள்.

**மன்னன்:—** (முயன்று பேச்சினைத் தடுமாறுமற்செய்து கொண்டு) ஹுந்தலைவாது ஆணையை மீறும் பகைவனுக யான் ஆகின்றிலேன். இம்மக்கள் நினைவில் இருக்கற்பாலர்.

**பீலிவளை:—** (பிரிவுத்துயரினை அவிநயித்தவளாய்ப் பாங்கியுடன் போய்விட்டனள்)

**மன்னன்:—** (நெட்டுயிர்ப்புடன்) நண்ப! இப்பொழுது எனது கண்கள் பயனிழந்தன.

**வேழம்பன்:—** (கடிதங்காட்ட எண்ணினனுகி) இதோ வுளதென்று (பாதி சொல்லியவுடன் தனக்குள்) அடடா! அந்தத் தாழைமடன் முடங்கல் கையைவிட்டு நழுவிக் கெட்டுப்போனது போலும். அப்பீலிவளையைப் பார்த்த பேராச்சிரியத்தால் கவர்ந்த மனத்தினனாயினேன்.

**மன்னன்:—** ஏதோ சொல்ல விரும்பினை போன்றனையே.

**வேழம்பன்:—** நீ ஆசையோடிரு. அப்பீலிவளை உன்னிடத்தில் மிகக் காதல்வைத்துளாள். அவள் உன் காதனினைவினளாகியே இருப்பள்.

**மன்னன்:—** என் மனதும் இந்த ஆசையைக்கொண்டுளது.

அவள் போம்போழ்து தன்னுடல் நாகமன்னனுக்கு உரியதா யிருந்ததால் அதனைஎற்களிக்காது தன்மனதை என்னிடத்திலேயே சேர்ப்பித்துவிட்டனள். இங்ஙனின்றேல் முலைவிம்மல் உறுவிக்கும் நெட்டுயிர்ப்பினை அவள் கொள்வளா?

**வேழம்பன்:—** (தனக்குள்)என்மனம் இப்பொழுது நடுங்கு கிறது. அந்த முடங்கலினைக் கொண்டுவா என்றால் என்செய்வது.

**மன்னன்:—** இப்பொழுது எவ்வண்ணம் கண்களுக்கு இன்பமூட்டுவேன். (நினைத்து) ஆ! அந்தத் தாழைமடன்முடங்க லினைக் கொண்டுவா.

**வேழம்பன்:—** (துயரினை அவிநயிக்கின்றனன்) அடடா! அது தென்படவில்லை. பீலிவளையது பாதையோடேயே போய் விட்டது போலும்.

**மன்னன்:—** எப்பொருளிலும் இம்மூடன் நினைவில்லா தவன். நன்னர் அதனைத்தேடு.

**வேழம்பன்:—** (எழுந்து)இவண் உளதோ இவண் உளதோ.

(என்று தேடுஞ்செயலை அவிநயிக்கின்றனன்)

---

## நான்காவது களம்.

---

(பூங்குழலாள் பணிப்பெண்களுடன் வருகின்றனள்)

**பூங்குழலாள்:—** அடீ! வித்தகி! நந்தலைவர் மாணியுடன் கொடியில்லத்துட் புகும்பொழுது கண்டேன் என்று நீ சொன் னது மெய்தானா?

**வித்தகி:—** அம்மணீ! தங்களிடம் ஒருவேளையாவது நான் பொய் சொல்லியது உண்டா?

**பூங்குழலாள்:—** அப்படியெனில் இக்கொடியிடை மறைந்து இவரது மறைபொருளுரைகளைக் கேட்கப்போகிறேன். யான் கேட்பின் நீ சொன்னது பொய்யா, மெய்யா, என்பது விளங்கி விடும்.

**வித்தகி:—** எவ்வணம் நுமக்கு விருப்பமோ அவ்வணமே செய்க.

**பூங்குழலாள்:—** (நடந்து) அடீ! வித்தகி! இதுவென்ன நம்மெதிராகப் பழங்கந்தைபோலத் தென்றலாலடிக்கப்பட்டுச் சுருண்டு வருகிறது.

வித்தகி:— (கண்ணுற்று ஆராய்ந்து) அம்மணி! இது தாழைமடலன்றோ சுருண்டு போம்பொழுது எழுத்துக்கள் நன்கு புலப்பட்டன. அடடா! இது தங்களது சிலம்பணி முகப்பில் தொத்திக்கொண்டது. (கையிலெடுத்து) இதைப் படிக்கட்டுமா.

பூங்குழலாள்:— பேசாமல் வாசி. கேட்கத்தக்கதேயாகில் கேட்பேன்.

வித்தகி:— (முடங்கலைப் பிரித்துப்பார்த்து) அம்மணி! அது பழிதரும் பொருளுரைபோல் புலப்படுகின்றது. நந்தலைவரைக்குறித் தெழுதிய பீலிவளையின் காதற்பாக்கள் என எண்ணுகின்றனன். நகைவேழம்பன் கவனமில்லாதிருந்துவிட்டமையால் இது நம் கையிற் சிக்கியது. பார்த்தீர்களா?

பூங்குழலாள்:— அப்படியெனில் இம்முடங்கலது பொருளை உணர்கின்றேன்.

வித்தகி:— (அரசனுன் முன் வாசிக்கப்பட்டவைகளைப் படிக்கின்றனன்.)

பூங்குழலாள்:— இப்பொழுது இதனையே காணிக்கையாக வைத்துக்கொண்டு அந்நீரமங்கையர் காதலனைப் பார்க்கப் போகிறேன்.

(என்றிடம்பிப் பணிப்பெண்களுடன் கொடியில்லத்துட் புகுகின்றனள்.)

வேழம்பன்:— நண்ப! இதென்ன? இச்செய்குன்றினில் காற்றியங்கியவழியே ஒன்று போவதாய்க் காணப்படுகின்றது.

மன்னன்:— (எழுந்து) இளவேனினண்ப! தென்றலிளங்கால்!! நீ பூங்கொடிகளிலுள்ள பூந்தாதுகளைக்கொண்டு போயின் உனக்கு மணப்பேறுஉண்டாம். என் காதலி நிருபத்தினைக் கொண்டுபோனால் உனக்குக் கண்டும் காணுமலும் கிடைக்கின்ற ஊதியங்கள் எவ்வெவை? வீணாக என் செய்கின்றனை. முன்பு நீயும் அஞ்சனையிடத்துக் காதல்கொண்டனை, காதனினைவினை மாற்றுமிக் காதற் கடிதம் முதலியவைகளால் யான் உயிருடையனாய் உளேன் என்பது உனக்குத் தெரியாததல்ல.

வித்தகி:— அம்மணி! இதனைத்தான் இங்குத் தேடிக் கொண்டுளர்.

பூகுழலாள்:— நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

வேழம்பன்:— நான் ஏமாந்துபோய்விட்டேன். அது மயிற்றோகை.

மன்னன்:— சால, நான் உளமழியப்பெற்றேன்.

பூங்குழலாள்:— (முன்வந்து) காதல! பரபரப்பு வேண்டுவதில்லை. ஈதோ உளது அத்தாழைமடல்.

**மன்னன்:—** (பரபரப்புடன்) நண்ப! நம்மரசி வருதுளள். நல்வரவு, நல்வரவு.

**வேழம்பன்;—** முகந்திருப்பிக்கொண்டு) நன்றிலா வரவு இப்பொழுது நேர்ந்தது.

**மன்னன்:—** (மக்களிடை மறைவாக) இதனை எப்படி மாற்றுவது. என்செயல்வேண்டும்.

**வேழம்பன்:—** தடயத்துடன் பிடிக்கு அகப்பட்ட திருடனுக்கு விடைசொல்ல என்ன உள்ளது.

**மன்னன்:—** (முகத்தைத் திருப்பி) மடைய! இது நகையாடும்போழ்து அன்று.

(வெளிப்படை) காதலி! இதனை நான் தேடவில்லை. பிரறைத் தேடிக்கொண்டு யாம் இருந்தனம்.

**பூங்குழலாள்:-** தன் பெருநலமறைப்பின் முயறல், தக்கதேயாகும்.

**வேழம்பன்:—** தலைவியே! இவர் தலைக்கேறிய பித்த மயக்கந் தணிவதற்கு விரைவாக நல்லுணவு அமைவி.

**பூங்குழலாள்:—** அடீ! வித்தகி! தோழர் நம்மந்தணரால் தேற்றப்பட்டனர்.

**வேழம்பன்:—** கடும்பிசாசும் விருந்தூட்டப்படின் இனியதாயிருக்கும்.

**மன்னன்:—** மடைய! என்னை என் வலிந்து குற்றவாளியாக்குகின்றனை.

**பூங்குழலாள்:—** உம்மீது தவறில்லை. யானே நும்மெதிரில் வெறுப்புறுவிக்கும் தோற்றமுடையளாகி நிற்கின்றனன். ஆகையின், யானே பிழை இழைத்தவளாவேன். யான் ஏன் முன்னே நிற்கின்றேன். இங்கிருந்தும் யான் போகப்போகிறேன்.

(என்று வெகுட்சியினை அபிநயித்துப் புறப்பட்டனள்.)

**மன்னன்:—** நான்தான் உனக்குத் தவறிழைத்தவனாவேன். ஏன் என்மீது கோபங்கொள்கின்றனை. இனியளாய் இரு. தலைவர்களே கோபித்துக்கொண்டால் எவ்வணம் ஊழியர் குற்றமிலார் ஆகுவர்.

(என்று கால்களில் விழுந்து மன்றாடுகின்றனன்.)

**பூங்குழலாள்:—** (தனக்குள்) நான் மிக எளியவுள்ளமுடையவளும் அல்லேன். ஊடல் தீர்த்தலையும், பெருமையாக நினைத்துக்கொள்ள மாட்டேன். பிறர் குறிப்பின்படி ஒழுகல் இல்லையே, எனு மிரக்கத்தினால் மிக அஞ்சுகின்றேன்.

(அரசனைவிட்டுப் பணிப்பெண்களுடன் வெளிச்சென்றனள்.)

**வேழம்பன்:—** அரசி கார்ப்பருவத்துப் பெருகும் ஆறுபோல் கலக்கமுற்றாளள். ஆகையின் எழுந்திரு.

**மன்னன்:—** (எழுந்து) நண்ப! இது ஏற்புடைத்தே. ஆய்ந்துபார். ஆடவர் ஊடல் தீர்க்கும்பொழுது மொழியும் இன்மொழிகளனைத்தும், ஔவையுண்ட கனிபோலமிழ்தாவனவாயினும், இயற்கையன்பின்றேல் பெண்டிருள்ளம் புகுந்தினிது விளங்கா.

செயற்கை நிறமூட்டிய மணிகள் பல்கோடி ஞாயிற்றுக்களின் ஒளிவீசுவனவாயினும், மணிநீரோட்டமின்றேல், வைகடிகருள்ளத்தினை இறும்பூது பூக்கச்செய்து சந்தோஷிப்பித்தமை கண்டதுண்டோ.

**வேழம்பன்:—** இவ்வமயத்தில் இது நலம் விளைவிப்பது வேயாம். கண்ணேறுவுற்றவன் விளக்குப்பிழம்பினை எதிர்கண்டு பொறுப்பனோ.

**மன்னன்:—** இப்படிச்சொல்லுதல் வேண்டாம். பீலிவளையாற் கவரப்பட்ட மனத்தேனாக யான் ஆயினும் முன்பு போலவே எனக்கு இப்பொழுதும் அவ்வரசியிடத்துப் பேரன்பு மிகுந்துதான் உள்ளது. என் வணக்கத்தை உடன்படாமல் அவள் போயினமையின் யான் அவளிடத்து வழிச்சேறலின்றி உறுதிநிலைகொளப்போகின்றேன்.

**வேழம்பன்:—** இது இருக்கட்டும். அஞ்சாமைக்கதை. பசி வந்திடப்பெற்ற பார்ப்பனனுயிரைப் பிழைக்கச்செய். நீராடி உண்பதற்கு ஆம் பொழுதுவந்துவிட்டது. அப்புறம் உன்கதையை அளக்கலாம்.

**மன்னன்:—** (மேல்நோக்கி) பகற்பாதி போய்விட்டது. 12-க்குமேல் ஆய்விட்டது. இம்மயில் வெம்மையைப் பொறுக்க முடியாமல் தண்ணிய இம்மா நீழற்பாத்தியுள் உட்காருகின்றது. வண்டுங்கூடக் கோங்குமுகையினைத் தளையவிழச்செய்து உட்புகுந்து இதழ்களின்ஊடே மறைந்துகொள்கின்றது.

இவ்வன்னமும் வெயிலாற் கொதித்த நீரைவிட்டுக் கரையினில் உள்ள நிலத்தாமரைச்செடியின்கீழ் வந்துறைகின்றது. இவ்விளையாட்டறையில் உள்ள சிறைபடுகிளிகள் வெயில்வாட்டமுற்று உலர்ந்த நாக்கினவாய் நீர்வேட்கையுற்றுத் தண்ணீர், தண்ணீர் என்கின்றன. பார்த்தனையா இப்பகலவன் படுத்துங் கொடுமையை;

(என்றனைவரும் வெளிச்சென்றனர்)

இரண்டாவது அங்கம்
முற்றிற்று.

# பீலிவளை மணம்
## மூன்றாவது அங்கம்
### முதற்களம்.

THE MADURA TAMIL SANGAM

(கதம்பமுனிவர் மாணவர் வருகின்றனர்.)

**காந்தன்:—** நண்ப! வயந்த! நம்மாசிரியர் நாகவேந்தனரண்மனைக்குப் போம்பொழுதினில் நீ அவருடன் திருவிருக்கை மனையைத் தூக்கிக்கொண்டு போயினை. வேள்வித் தீயரைக்காவலாளனாக நான் இங்கிருந்துவிட்டேன். ஆகையின் உன்னைக் கேட்கிறேன். ஆசிரியாது அவிநயக்கல்வி பயில்விப்பு, நாகர் அவையினை மகிழ்வித்ததா?

**வயந்தன்:—** காந்த! களிப்பித்ததா, இல்லையா என்பதை யானறியேன். அக்கலைமகளாற் செய்யப்பட்ட எழிற்கண்ணி திருமணம் எனும் நாடகமாடு மமையத்து அவ்வப்பொதுவறு சிறப்புடைச்சுவைகளுள் அவ்வவை அவ்வந்நிலையொருமையதாயிருந்தது.

**காந்தன்:—** உனது சொற்குறைவு குற்றமிடைகொண்டுளதுபோலு மிருக்கின்றதே.

**வயந்தன்:—** ஆம் அத்திருமணத்தில் பீலிவளையதுமொழி வேற்று நினைவினால் மாற்றமுற்றது.

**காந்தன்:—** எவ்வணம் பிறிது நிலையுற்றது.

**வயந்தன்:—** வண்ணக்கிழத்தியின் கோலம்பூண்ட ரோஜா எழிற்கண்ணியின் கோலமணிந்த பீலிவளையை நோக்கி "அடீ! இங்கு மூவுலகிற் சிறந்த இளந்தோன்றல்களும், நாகவேந்தன்

முதலியோரும் உலகிறைவர் யாவரும் ஒன்றுசேர்ந்து கூடியுள் ளனர். இவர்களுள் எம்மஹானுவானிடத்து உனது உட்கோள் கலந்துள்ளது'' என்று கேட்டனள்.

**காந்தன்:—** அதன்பின்.

**வயந்தன்:—** பின்னர் பீலிவளை நெடுமுடிநாகன் என்று சொல்வதற்கு மாருக நெடுமுடிக்கிள்ளி என்று உரைத்தனள்.

**காந்தன்:—** இந்திரியங்கள் எண்ணியபொருளை விடாது நினைத்திருப்பனவன்ருே அவளிடத்து ஆசிரியர் மன்னங்கன்றிச் சினங்கொள்ள வில்லையா?

**வயந்தன்:—** அவளை ஆசிரியர் சபித்துவிட்டனர். பின் நாகவேந்தன் அவளுக்கு அவ்வசைமொழிப்பயன் சிறிதுபடுமாறு செய்தனன்.

**காந்தன்:—** எவ்வண்ணம்.

**வயந்தன்:—** எதனுல் நீ நான் கற்பித்தபடி அவிநயஞ் செய்திலையோ அதனுல் உனக்கு நாகருலகினில் உறைவு இல்லாமற் போவதாக என்று ஆசிரியர் சபித்தனர். நாகமன்னர் காட்சிமுடி வினில் தன்முன் வணங்கி வெட்கத்துடனின்ற பீலிவளையைநோக்கி எவனிடத்தில் நீ காதல்கொண்டனையோ, அந்த நம்பாங்கனுய மன்னனுக்குப் பெருநலஞ்செய யாம் கடமைப்பட்டுளேம். ஆகையின் மகப்பேறுண்டாகும்வரை உன் விழைவின்படியே அம்மன்னனுடன் உடனுறைவுற்று இன்பந்திளைப்பாயாக என அருள்புரிந்து பகர்ந்தனர்.

**காந்தன்:—** பிறருள்ளக்குறிப்பு உணர்பவனல்லவா அந் நாகமன்னன்.

**வயந்தன்:—** (ஞாயிற்றினைப்பார்த்து) ஆசிரியர் நீராடும் போழ்து வந்துற்றது. பிந்திப்போனால் பிழையாளர் ஆவோம் கதை பேசிக்கொண்டே இருக்கக்கூடாது. ஆகையின் வா. ஆசிரியர் உழையினராக ஆவோம்.

(என்றியம்பிப் போய்ச்சேர்ந்தனர்.)

(பக்குடுக்கையன் வருகின்றனன்.)

**பக்குடுக்கையன்:—** அனைவரும் இளமையில் பொருள் வளமாக்க முயல்கின்றனர். மூப்பினில் தம் பிள்ளைகளிடத்துக் குடிக்காப்புச் சுமையை ஒப்புவித்துக் களைப்பாறுகின்றனர். இம் மாதிரி புண்ணியஞ் செய்தார்களுடைய மூப்பு, அவர்க்கின்பஞ் செய்கின்றது. நம்மனோருக்கோ இம்மூப்பு உடன்மெலிவிக்கும் ஊழியச் சிறையாகித் துன்பஞ் செய்யாநின்றது. போதாத தற்கு இப்பெண்களிடம் பணிவிடைசெய்வது பெருந்தொல்லை யன்றோ. இது நாடோறும் ஒழியாதது.

(நடந்து) நோன்புபூண்ட பாண்டியன் மகளார் நம்மை நோக்கி, "நான் முன்னமே வித்தகிவழியாகத் தலைவரை நோன்பு நிறைவேற்றற்பொருட்டு, எழுந்தருளவேண்டுமென இரந்துள்ளேன், ஆகையின் அதனை மன்னர்பிரானுக்குத் தெரிவி" எனக் கட்டளையிட்டிருக்கின்றனள். இப்பொழுது மாலையந்தி வழிபாட்டினை நம்மன்னர் முடித்திருப்பர். போய்ப்பார்க் கின்றேன். (நடந்துபோய் நோக்கி.)

அரண்மனையில் மாலைப்பொழுது நிகழ்ச்சி அழகிதாக உளது. இங்கொருபால், தூண்களில் ஏறிநின்று தூங்குகின்ற மயில்கள் கல்லுருவமயில்கள்போன்று காணப்படுகின்றன. நற் புகைசூழ்ந்த குறியிறப்பைகள், புறாக்களோவெனச் சந்தேகத்தினை உண்டாக்குகின்றன. இந்நகர மூதாட்டிகள், நற்றாய்மை உடை யாராகி, வழிபாடணைந்த இல்லுறை கடவுளது நல்லிடங்களில் அவ்வந்நல் விளக்குகளை வகைபுறவேற்றி, அமைக்கின்றனர்.

(கண்ணுளர் குடிலைக்கெதிராக நோக்கி)

இவ்வழியாகத்தான் இறைவர் வருகின்றனர். விளக்கேந்திய கையராய, நங்கையரால் சூழப்பட்ட நம்மன்னர், மலர்ந்த கோங்குமலர்ச் சாரல்களையுடைய இயங்குமலையின் தோற்றமுடையராகிக், கண்களுக்குக் கவினியவனப்பளித்து இன்பத்தினைப் பெருக்குகின்றனர். ஆகையின் இறைவனைப் பார்த்தற்கு ஏற்ற வழியில் நின்று எதிர்பார்க்கிறேன்.

(முன்னர்க்குறித்த தோற்றமுடைய மன்னனும், மாணியும் வருகின்றனர்.)

மன்னன்:— (தனக்குள்) பகலில் முறைகேட்டலும் அது தீர்த்தலும், குறை நிறைவித்தலும், முதலாயின பலசெயல்களிருக்கின்றமையின் மிகவருத்தமின்றிப் பொழுதுபோக்கிவிடுகின்றனன். பொழுதுபோக்குதற்கேற்ற பொருள்கள் இன்மையின் இவ்விரவுமாத்திரம் நீண்ட யாமங்களுடையதாகின்றது. இது எவ்வணம் போக்கற்குரியது.

பக்குடுக்கையன்:— (வந்து) மன்னவர் வெல்க! வெல்க!! மன்ன! அரசி விண்ணப்பஞ்செய்கின்றனள். மணிமாளிகையது நிலாப்புறமாடத்தினில் நிறைமதி, நிறையழகுடன், நிலாவெறிந்து இனியகாட்சி யளியாநிற்பன். அத்திங்கள் உரோகிணியணவுமுன் தாங்கள் அங்கு எழுந்தருளியிருக்கவேண்டும் என்பதாகும்.

மன்னன்:— ஐய! தத்த! அவ்வணமே நடக்கிறேன். என்று நீ அவ்வரசியிடந் தெரிவி.

பக்குடுக்கையன்:— தேவரீர் உத்திரவின்படியே யான் செய்கிறேன்.

மன்னன்:— நண்ப! என்ன உண்மையாகவே அரசி நோன்பினைக் கைக்கொண்டிருப்பளா?

**வேழம்பன்:—** நோன்பு என்பதொன்றனைத் தொடங்கி அவ்வடிபணிவுமீறிய தவற்றினைப் போக்கிக்கொள்ளவேண்டுமென நினைத்துப் பிறகு மன்னவி பிழைசெய்ததற்குப்பின் இரங்கி இருக்கலாமென்று எண்ணுகின்றனன்.

**மன்னன்:—** நீ எண்ணுகிறது பொருந்துகின்றது. இவ்வண்ணம் தவறுசெய்த பெண்டிர் தன் வெட்கத்தினை வெளிப்படுத்தமாட்டார்கள். ஆகையின் நிலாப்புறமாடத்திற்கு நீ வழிகாட்டு.

**வேழம்பன்:—** இவணிவண் வருக. கங்கைநதியலை யழகினை உடைய இப்பளிங்குப் படிகட்டுவழியாக, நிலாப்புறமாடத்திற்கு ஏறுக.

**மன்னன்:—** முதலில் நீ ஏறு.

(அனைவரும் ஏறும் அபிநயத்தினைக் காட்டுகின்றனர்.)

**வேழம்பன்:—** (கண்ணுற்று) பூர்ணசந்திரன் காணப்பட்டிருத்தல்வேண்டும். இருள்நீங்கப்பெறும் இக்கீழ்த்திசைப்பாகம் பார்ப்பதற்கு வெகு அழகாயுள்ளது.

**மன்னன்:—** இச்சந்திரனாகிய காதலன் இக்கீழ்திசை காதலியின்முகம் சுருள் அவிழ்குழலாள் மறைக்கப்பட்டமைகண்டு முகத்தைக்காண எண்ணி இக்காரிருட்கூந்தலை முடித்திட்டனன் ஆகையின் இவளது முகம் என்கண்களைக் கவர்கிறது.

**வேழம்பன்:—** ஹி ஹி ஹீ இதோபார் இச்சந்திரன் பாதிக் கொழுக்கட்டையைப்போல அழகாகத் தோன்றியுள்ளான்.

**மன்னன்:—** (புன்னகையுடன்) எங்கும் வயிற்றன்பனுக்கு உணவுதான் நினைவு. (குவிகையுடன் வணக்கஞ்செய்து) இறைவ!

இராமனுள! நீயே மாதொருபாகன் முதலியோரால் நன்கு மதிக்கப்பட்டுள்ளனை.

நாண்மீனிறைவ! என் வணக்கங் கைக்கொள்.

(என்று திங்களைத் தொழுகின்றனன்)

**வேழம்பன்:—** நண்ப! உன்குலந்தொழு கடவுளது தோழனிடத்தில் அனுமதிபெற்றுள்ளனை. நீ உட்காரு யானும் அவனும் ஒத்தபெயருடையேம். ஒத்த நட்புடையேம். அவன் உன்னை நல்லனென்றே நினைப்பன். நீ உட்கார்ந்தாயேயாகில் யானும் இனிது அமர்ந்திருப்பேன்.

**மன்னன்:—** (வேழம்பனுரைகேட்டமர்ந்து) (பணிப்பெண்களைநோக்கி) நிலா இருக்கும்பொழுது விளக்குவெளிச்சம் வீண்தானே. ஆகையின் நீவிர் சிறிது களைப்பாறுமின்.

**ஊழியமக்கள்:—** எப்படி மன்னர் ஆணையோ அப்படியே.

**மன்னன்:—** (சந்திரனைப்பார்த்து) இன்னும் ஒருமுழுத்தங் கழிந்தபின் அரசி வருவள். இப்பொழுது ஒருவருமில்லை என்னிலையை யானியம்புகின்றேன்

**வேழம்பன்:—** அவள்தான் காணப்படுகின்றனளே அத்தகைய காதலை நீ அறிந்தனை. ஆசையோடு உயிருடனிருத்தற்கு இயலுமே.

**மன்னன்:—** இது இத்தன்மையதுதான். ஆனால் எனது காதனினைவு அளவிறந்தது. கல்லிடைப்பட்ட காட்டாறு நூற்றுக்கிளைவழியாகப் பெருகுவதுபோலத் தடைப்பட்ட கூடலின்பமுடைய காமம் நூற்றுக்கிளைவழியாகப் பெருகுகிறது.

**வேழம்பன்:—** நீ மேனி இளைக்கப்பெறினும் அழகனுயிருக்கின்றனை. காலந் தாழ்த்தலின்றி விரைவின் அவள் உன்னைக் கூடுவள் என எண்ணுகின்றேன்.

**மன்னன்:—** (நற்குறிகாட்டி) நண்பா! இந்தவல்லுகை ஆசையுண்டாகப்பேசும் உன்னைப்போலவே துடிக்குங்குறிகளால் துயர்க்கடலுள் ஆழ்ந்த என்னைத் தேற்றுகின்றது.

**வேழம்பன்:—** பார்ப்பனன் மொழி மாறுபடுமா?

(அரசன் வருவான் என ஆவலுடன் இருக்கின்றனன்)

(இரவியங்குமாதர் கோலம்பூண்ட பீலிவளையும்)

மின்னலும் வானவூர்தியேறி வருகின்றனர்.

**பீலிவளை:—** (தன்னழகைப்பார்த்து) அடி! மின்னல்! இந்தக்கோலம் கண்ணுக்கு நன்றாக வுள்ளதா. இன்றியமையாக் கலன்களை அணிந்துள்ளேன். இந்தக் கறுப்புப்புடைவையினைக் கட்டிக்கொண்டிருக்கிறேனே.

**மின்னலாள்:—** மிகப்புனைந்துரைத்துப் புகழ எனக்கு நல்ல பாண்டித்தியம் இல்லை. இவ்வணம் நினைக்கின்றேன். நெடுமுடிக் கிள்ளியாக யான் ஆவேனா.

**பீலிவளை:—** மன்மதனல்லவா உனக்குக் கட்டளையிடுகின்றனன். அம்மன்னனரண்மனைக்கு விரைவின் என்னைக் கூட்டிக் கொண்டு செல்.

**மின்னலாள்:—** வெள்ளிமலைமுடியை வேறுவடிவாக்கினாற் போலுள்ள உன்னுடைய நாயகனது அரண்மனை வந்துசேர்ந்தோம்.

**பீலிவளை:—** ஆனால் அந்த என்மனங்கவர்ந்த கள்வன் எங்குளன் என்பதனையும் என் செய்கின்றனன் என்பதனையும் தெய்வீகசக்தியால் உணர்ந்துகொள்.

**மின்னலாள்:—** (நினைத்து தனக்குள்) இருக்கட்டும், இவளைச் சிறிது நகையாடிக் கேலிபண்ணுகிறேன். (வெளிப்படை) அடி! நினைப்பிற் கிடைத்த காதலியுடன்கூடி இன்பநுகர்ந்து கொண்டு கூடநிலையினில் அம்மன்னன் இருக்கின்றனன்.

**பீலிவளை:—** (துன்பமுற்றோ ளவிநயஞ்செய்கின்றனள்)

**மின்னனுள்:—** அடீ! உன்னைத்தவிர அவனுக்குக் காதலியாக யாவள் உளள். நீ பேதையா.

**பீலிவளை:—** (பெருமூச்சுடன்) ஐயமுறத்தக்க மொழியைக் கேட்டு என் மனம் ஐயுறுகின்றது.

**மின்னனுள்:—** (பார்த்து) இதோபார் நிலாமாடத்தில் மாணியைமாத்திரம் துணையாக வைத்துக்கொண்டு மன்னன் பேசிக்கொண்டுளன். ஆகையின் வா போவோம்.

(இருவரும் இறங்குகின்றனர்.)

**மன்னன்:—** நண்ப! இரவுடன் காதனோய் நீடித்து வளர்கின்றது. என்செய்வது

**பீலிவளை:—** பொருள் நன்கு விளங்காததால் என்மனம் துணுக்குகின்றது. நம்மிருவரும் ஐயந்தீரும்வரை இவண் ஒளிந்திருந்து இவனது விருப்பமுறும் மொழிகளைக் கேட்டுக்கொண்டிருப்போம்.

**மின்னனுள்:—** எப்படி உனக்கிஷ்டமோ அப்படியே.

**வேழம்பன்:—** நண்ப! அமிழ்துபோன்ற இந்நிலவின் இன்பத்தினை நுகர். கவலை நீங்கும்.

**மன்னன்:—** துணைவ! இதுபோன்ற மருந்துகளால் என் காமவெப்புநோய் தீர்த்தற்கியலாது. பார். புதுப்பூவணையும், நிலவின் கதிர்களும், மணிமாலைகளும், கலவைச்சந்தனங்களும் இவைபோன்றன பலவும் இந்நோய் தீர்த்தற்குத் தகுதியுடைய ஆற்றலில்லாதன. அந்நாகநங்கையின் வாயமிழ்தாவது, இந்நோயினை விரைவின் வேருடன் போக்கும் பான்மையதாம்.

**பீலிவளை:—** வேறொரு நங்கையின் வாயமிழ்துகூட உள்ளதுபோலத் தோன்றுகிறது.

**மன்னன்:—** அந்நாகநங்கையினைப்பற்றிய கதையாவது தனித்துழிஇருந்து கேட்கபடில் இந்நோய் நீங்கலாம்.

**பீலிவளை:—** மனமே! இப்பொழுது என்னைவிட்டு இம்மன்னனிடத்துப்படர்ந்த நீ வேண்டியவாறு பரிசில் பெற்றுவிட்டனை.

**வேழம்பன்:—** ஆம், ஆம் எனக்கு எப்பொழுது அல்வாவும், மாம்பழமும் கிடைக்கவில்லையோ, அப்போதெல்லாம் அவைகளை வேண்டுமென நினைத்துப் பெயர்களைமாத்திரம் அடிக்கடி சொல்லிக்கொண்டு சிறிது சிறிது மனத்தெளிவடைவேன்.

**மன்னன்:—** உன்விருப்பம் நிறைவேறிப்போய்விடும்.

**வேழம்பன்:—** நீயும், விரைவினில் அவளை அடைவாய்.

**மன்னன்:—** பாங்க இப்படி எண்ணுகின்றேன்.

**மின்னனாள்:—** அடீ! கேள், கேள் இன்பமுறவில்லையே.

**வேழம்பன்:—** எப்படி எண்ணுகின்றனை.

**மன்னன்:—** அன்ப! அன்று தோணி அசைந்தபோது அவளது தோளுடன் என்தோள் கலந்து இன்பமுற்றதாகச் சொல்லி இருக்கிறேன் அல்லவா. அவ்வணம் இன்பமுற்ற இத்தோளே உறுப்புக்களுள் மாப்பேருயர் நிலையுற்று நற்பேறெய்தினது. ஏனைய மண்ணகமடந்தைக்குச் சுமைபோல்வனவேயாகும்.

**மின்னனாள்:—** அடீ! இப்பொழுது என் காலதாமதம் பண்ணுகின்றனை.

**பீலிவளை:—** (விரைவாக அரசனையணுகி) அடி! நான் அவன்முன் அணுகியுங்கூட அவர் என்னைக் கண்ணெடுத்துப் பாராமலுளர்.

**மின்னனுள்:—** (புன்னகையுடன்) என்ன பாபாப்பு நீ மாயத்திரையை நீக்காதிருப்பின் 'அவர் உன்னைப் பார்த்தற்கு எவ்வண்ணமியலும்.

(கண்ணுளர் குடிஞையுள்)

இவணிவன் வருக இறைவி!

(அனைவருங் கேட்கின்றனர். பீலிவளையும், மின்னனுளும் துன்பமுற்றனர்.)

**வேழம்பன்:—** அடடா! அரசி வந்துவிட்டனள். ஆகையின் பேசாமல் இரு.

**மன்னன்:—** நீயும் மெய்ந்நிலையையும், மனக்குறிப்பையும் மறைத்துக்கொள்.

**பீலிவளை:—** அடீ! இப்பொழுது என்ன செய்வது.

**மின்னனுள்:—** பீலி! என் அவசரப்படுகின்றனை இருவரும் மறைந்துள்ளோம். அரசி பட்டினி கிடந்தவளைப்போலவும், நோன்பினளைப்போலவும் காணப்படுகின்றனள். ஆகையின் இவள் இங்கு நெடுநேரம் நிற்கமாட்டாள்.

(பூசைக்குரிய பொருள்களைக் கைக்கொண்ட பணிப்பெண்களுடன் அரசி வருகின்றனள்.)

**பூங்குழலாள்:—** அடீ! வித்தகி! திங்களஞ்செல்வன் உரோகிணியுடன் சேர்ந்து மிக விளங்குகின்றனன்.

**வித்தகி:—** அரசியுடன் கூடிய அரசரும் நன்னர் விளங்குகின்றனர்.

(என்று நடந்து செல்கின்றனர்)

**வேழம்பன்:—** (பார்த்து) எனக்குப்பூசைமுடிவில் காணிக்கையை அவள் அளிப்பளோ, அல்லது தான் கோபம் நீங்கப் பெற்று நோன்பு என்று பேர்வைத்துக்கொண்டு கொழுநன் வழிபாடு மீறற்குற்றத்தினைப் போக்க விருப்பமுற்றிருப்பளோ? இப்பொழுது அம்மன்னவி என் கண்களுக்கு இன்னேக்கு அளித்தனள்.

**மன்னன்:—** (புன்னகையுடன்) இரண்டும் பொருந்தலாம். இருந்தாலும் உன்னால் பின்னர் எது சொல்லப்பட்டதோ, அது என்னைக்குறித்தது என்பது விளங்குகின்றது பார். இவ்வரசி தூவெள்ளாடையினையும், மங்கல நகைகளையும் அணிந்து தம் குழலில் அறுகம்புற்களைச் செருகிச் செருக்கொழிந்தனளாகி நோன்பு பூண்டு எனக்கு இனியளாய்த் தோன்றுகின்றனள். இவள் மேனியே உள்ள இனிமையைப் புலப்படுத்துகின்றது.

**பூங்குழலாள்:—** (அரசனையண்மி) வெல்க நங்கொழுநர் வெல்க.

**பணிப்பெண்கள்:—** மன்னவ! வந்தனம், வந்தனம்.

**வேழம்பன்:—** உனக்கு மங்கலம் பொங்குக.

**மன்னன்:—** இறைவி! நல்வரவு நல்வரவு (கையினைப் பிடித்தினிது அவளை உட்காரவைக்கின்றனன்)

**லீலவதி:—** இவள் இறைவி என்ற மொழியால் முகமலியம்பப்படுகின்றனள்.

எழிற்கண்ணியினும் இவள் தாழ்வுற்றவளல்லள்.

**மின்னனாள்:—** நன்று அழுக்காறின்றி அமர்ந்து பகர்ந்தனை

**பூங்குழலாள்:—** தங்களை முன்வைத்து ஒரு நோன்பு நிறைவேற்றற்பாலது. ஆகையின் மூக்கான்மணிநேரம் தங்களுக்குத் தடை ஏற்படலாம்.

**மன்னன்:—** இவ்வணஞ் சொல்வது தண்ணளியன்றோ! தடையில்லையே.

**வேழம்பன்:—** பூசைக்காணிக்கை உடைய இத்தகைய தடைகள் பலமுறை உண்டாகுக.

**மன்னன்:—** இவ்வரசியின் நோன்பின் பெயர் என்ன?

**பூங்குழலாள்:—** வித்தகியைப் பார்க்கின்றனள்.

**வித்தகி:—** கணவன் மனமகிழ்விப்பு எனப்பெயரியது இஃது.

**மன்னன்:—** (அரசியைப்பார்த்து) இவ்வணமேயாகில் இதற்கு ஏன் இன்னல் தருவதான இந்நோன்பு பூண்டு காரணமின்றி உடலிளைத்துப் போகவேண்டும். எவன் உன்னிடத்தில் காதல்கொண்டு தண்ணளி வேண்டுகின்றனனோ, அவ்வேவலாளன் உன்னால் மகிழ்விக்கப்படலும் வேண்டுமோ.

**பீலிவளை:—** இவளிடத்துள்ள அன்பு அளவிறந்ததாய் உள்ளது.

**மின்னல்:—** அடீ! பேதாய்! பிறமங்கையர் காதலுற்ற நாகரிகர் மிகத் தன்மனையாள் வழிச்சேருபவராவர்.

**பூங்குழலாள்:—** (புன்னகையுடன்) இந்நோன்பு கைக்கொண்டதன் காரணம், தலைவரை இனிமையாகப் பேசச் செய்ததுதான்.

**வேழம்பன்:—** நீ பேசாதிரு இன்மொழியை மறுப்பது கூடாததாகும்.

**பூங்குழலாள்:—** பெண்காள்! பூசனைக்குரிய பொருள்களைக் கொண்டு வம்மின் மணிமாடத்துள்ள நிலவின்கதிர்களை வழிபடுகின்றேன்.

**பணிப்பெண்கள்:—** அம்மணி! இதோ சந்தனம், பூ முதலான பொருள்கள் உள்ளன.

**பூங்குழலாள்:—** (நிலவினை வழிபடுதல்போல அவிநயஞ் செய்து) அடி! கடவுளுக்கு அமுதுசெய்வித்த இக்கொழுக்கட்டைகள் அனைத்தையும் மாணி ஐயருக்குக்கொடு.

**பணிப்பெண்கள்:—** ஐயன்மீர்! அம்மணி இவையனைத்தையும் தங்களிடங் கொடுக்கச்சொல்லி எமக்குக் கட்டளையிட்டிருக்கின்றனள். (கொடுக்கிறார்)

**வேழம்பன்:—** (குழக்கட்டைப்பானையை மடியில் வைத்துக் கொண்டு) உனக்கு மங்களம் பொங்குக. உன் பட்டினி மிகப் பயன் தருவதாகுக.

**பூங்குழலாள்:—** என் தலைவ! இவண் வருக.

**மன்னன்:—** இதோ இருக்கிறேன்

**பூங்குழலாள்:—** (மன்னன் பூசையை அவிநயித்துக் குவிகையுடன் வணங்கி) உமது ஆருயிர்த் தலைவியான நான் இவ்வுரோகிணி யணவிய சந்திரனைக் கண்ணெதிரில் வைத்துக் கொண்டு, தங்களை மகிழ்விக்கின்றேன். இதுமுதல் எம்மங்கையைத் தலைவர் காமுறுகின்றனரோ, எந்நங்கை தலைவருடன் கூட்டத்தை விழைகின்றனளோ, அவளுடன் என்னோடு நட்பாடி அன்புபூண்டு நந்தலைவர் ஒருமைபூண் மனத்தர் ஆகுக.

**பிலிவனே:—** இவளிவ்வாறு சொல்லுவது என்பொருட்டு எனத் தெரியவில்லை. எனக்கோ மனது தெளிவுற்றுவிட்டது.

**மின்னனுள்:—** உன் தலைவன் கூட்டம் கற்பாசி உடன் படப்பட்டதும், இடையூறில்லாததும் ஆக ஆகப்போகின்றது.

**வேழம்பன்:—** (அரசனை யண்மி ஒருகையான் மறைத்து) தூண்டிலினின்றும் மீன் துள்ளிப்போனபோது வருத்தமுற்ற செம்படவன் "நல்வினைப் பயன் எனக்குவரும்" என்று சொல்கின்றனன். (வெளியாய்) மன்னவி! அத்தகைய ஆடவனு உனக்கு நாயகனுயினன்.

**பூங்குழலாள்:—** மடைய! நானே என்னின்பந்துறந்தாவது தலைவனை இன்புறுவிக்கவேண்டுமென நினைக்கின்றனன். இம்மட்டுஞ் சொல்லினமையின் அவன் அன்பனு இல்லையா என்பது தெரியவரும், எண்ணிப்பார்.

**மன்னன்:—** மானே! நீ ஊழியனுகிய என்னைப் பிறள் ஒருத்திக்கு அளிக்கவும் அளிக்கலாம். அவளினின்றும் நீக்கவும் நீக்கலாம். நானே நீ நினைத்த நிலையினனுக இல்லை. நான் என்றும் நின் ஊழியனே யாவேன்.

**பூங்குழலாள்:—** எனக்கென்ன? இரு, இல்லாமற்போ. முன்னெண்ணிய இந் நோன்பு நிறைவேற்றப்பட்டது. பெண்காள்! வம்மின். போவோம். (அரசி புறப்பட்டனள்)

**மன்னன்:—** அன்பிற் சிறந்த என் இன்பக்கனியே! என்னைப் பிரிந்து நீ சென்றிடில் யான் மகிழ்விக்கப்பட்டவனுக மாட்டேன்

**பூங்குழலாள்:—** அன்ப! என்னுல் ஒருபொழுதும் நோன்பு கைவிடப்பட்டதன்று.

(பணிப்பெண்களுடன் அரசி வெளிச்சென்றனள்)

பீலிவளை:— அடீ! நம்மன்னர் காதலுற்ற மனைவியுடையர். எனக்கோ மனதை மீட்டுக்கொணர்தற்கு இயல்வில்லை.

மின்னனாள்:— நீ என் ஆசையற்றவளாகி மனதை மீட்கின்றனை.

மன்னன்:— (இருக்கையினை அணமி) நண்ப! அரசி சேய்மையிற் போயினளோ.

வேழம்பன்:— எதைச்சொல்ல விரும்பினையோ அதை அச்சமின்றிச் சொல். வைத்தியன் பிணியை அசாத்தியமென்று விட்டுப்போவதுபோல அரசியும் உன்னைவிட்டுப் போயினள் இனி உன் விருப்பத்திற்குக் கொண்டாட்டம்.

மன்னன்:— என்ன! பீலிவளையா.

பீலிவளை:— இப்பொழுது நற்பேறு பெற்றனள் ஆவள்

மன்னன்:— என் காதலிதான் ஒளிந்து வந்து தன் சிலம்பு அரற்றொலியினை என் செவியுறச் செய்வளா? பின்னர் மெதுவாக என்னிடம் வந்து என் கண்களைக் கைகளாற் பொத்துவளா? அம்மின்னனாள் அச்சமுற்றுத் தடையுற்ற நடையுடைய பீலிவளையை மெதுவாக என்னண்மையில் அழைத்துவருவளா?.

பீலிவளை:— அடீ! இவன் விருப்பத்தினை நிறைவேற்றுகின்றேன்.

(முதுகுபக்கத்திற்போய் அரசன் கண்களைப் பொத்துகின்றனள்)

மின்னனாள்:— (வேழம்பனைப் பார்த்துக் கண்ணைக்காட்டி உணர்த்துகின்றனள்.)

**மன்னன்:—** (தடவிப்பார்த்தலை அபிநயஞ்செய்து) நண்ப! அவள் வளைவணன் புதல்வியாய பீலிவளையே.

**வேழம்பன்:—** எப்படி உனக்குத் தெரிந்தது.

**மன்னன்:—** அறியவொண்ணாதது என்ன உள்ளது. பீலிவளையைத்தவிர எவட்கு வெம்மையுற்ற என்னுறுப்பினைக் கையாற்றொட்டு இன்புறுத்தமுடியும். ஆம்பல் சூரியன் கிரணங் களால், அலர்கிறதில்லையே. நிலவின் கதிர்களால்தானே மலர் கின்றது.

**பீலிவளை:—** (கையை எடுத்துச் சிறிது அப்பாற்சென்று) மன்னவர் வெல்க.

**மன்னன்:—** அழகி! நல்வரவு. (தன்னிருக்கையில் உட்காரு விக்கின்றனன்)

**மின்னனாள்:—** நந்தோழர் நலத்தினர்தானே.

**மன்னன்:—** நலம் நிறைந்துள்ளது.

**பீலிவளை:—** அடீ! எனக்கு அவ்வரசியால் கொடுக்கப்பட் டனர் மன்னர். ஆகையின் அவளுடைய தோழியைப்போல மெய்தொட்டுப் பயின்று இன்புற்று இருக்கின்றேன். குற்ற மெடுத்துக்காட்டி. நீ ஒன்றும் என்னைப் பழிக்கு ஆள் ஆக்காதே.

**வேழம்பன்:—** நீவிர் இருவீரும் இங்கு இருக்கும்போதே சூரியன் கடலுண் மறைந்து அஸ்தமித்துப் போயினனே?

**மன்னன்:—** (பீலிவளையை நோக்கி) எனக்கு அரசி அனுமதி தந்தனளென்று மெய்தொட்டுப்பயின்று தழுவிக்கொள் கின்றனையே. முதன்முதலில் யாரிடம் அனுமதிபெற்று என் மனதை நீ கவர்ந்தனை.

**மின்னனுள்:—** நண்ப! மறுமொழி சொல்லற்கியலாதவள் இவள். இப்பொழுது என் விண்ணப்பத்தினைக் கேட்டருளல் வேண்டும்.

**மன்னன்:—** ஒருமைப்பட்ட மனதுடையேனுக இருக்கின்றேன்.

**மின்னனுள்:—** முதுவேனிற் பருவத்தில் இறைவனுன அவ்வண்ணன் என்னுல் வழிபாடுசெய்து வணங்கத்தக்கவன். ஆகையின் என்னருமைப் பாங்கி நாகர் உலகினை நினையாதவாறு நீ இவளை வைத்துக்கொளல்வேண்டும்.

**வேழம்பன்:—** தலைவி! நாகருலகினில் நினைக்கத்தகுந்தது என்ன உள்ளது. அங்குத் தின்பதுமில்லை, குடிப்பதுமில்லை, கொடுப்பதுமில்லை, வாங்கலுமில்லை, எல்லோரும் மீனைப்போலவும், பாம்பைப்போலவும் உளர்.

**மன்னன்:—** இத்தன்மையதென்று எடுத்துக் காட்ட வொண்ணு இன்பந்தருவது அந்நாகருலகே. எவன் அதனை மறந்துவிடுவன். பீலிவளையைத்தவிர மற்றமங்கையர்க்கு எளியனுக இந்நெடுமுடிக்கிள்ளி ஆகமாட்டான். அடிமைப்பட்ட ஊழியனல்லவா இவன்.

**மின்னனுள்:—** யான் தண்ணளிபெற்றனன் அடீ! பீலி! பயப்படாமலிரு போவதற்கு அனுமதி கொடு.

**பீலிவளை:—** (மின்னலைத் தழுவி) அடீ! என்னை மாத்திரம் மறந்துவிடாதே.

**மின்னனுள்:—** நீதான் தோழனுடன் சேர்ந்தனை. ஆகையின் இது என்னுல் இரந்து கேட்கத்தக்கது.

(என்றரசனை வணங்கி வெளிச்சென்றனள்)

வேழம்பன்:— உன்னெண்ணம் நிறைவேறினமையின் மேம்பட்டு விளங்குகின்றனை.

மன்னன்:— இதுதான் எனது மாப்பெரும் பாக்கியம் ஆகும். நிலவுலகனைத்தும் ஒரு வெண்குடைக்கீழ் ஆளும் நிலை இழந்ததுவேயாகும். இவள் திருவடிகட்கு நன்கு ஊழியஞ்செய்து கொண்டிருக்கும் இந்நிலையே, பொதுவறு சிறப்புடைய தாய்ப் புகழ் மேம்பட்டு விளங்குவதாகும்.

பீலிவளை:— இதனைக்காட்டிலும் இனிமையாய் அமிழ்தம் எனப்பேச எனக்கு வியத்தகு புலமை எள்ளளவும் இல்லை.

மன்னன்:— (பீலிவளையைக் கையாற்பிடித்து) அ அ ஆ! நான் விரும்பியதைப் பெற்றமையின், பொருள்கள் மாறின நிலையினை விட்டு இயற்கை நிலையினை அடைந்தன. அந்த நிலவின் கதிர்களும் அவ்வைங்கணையாளனது அம்புகளும் எனது உடலினை இன்புறச் செய்கின்றன. எவ்வெவை, கடுந்தன்மையனவாகி இருந்தனவோ; அவ்வவை இப்பொழுதுன்னைக் கூடினமையின் மென்தன்மையனவாகி இன்புறுவிக்கின்றன. பிறழ்கயற்கண்ணி இவையனைத்தும் இம்மாற்றம் அடைந்தன.

பீலிவளை:— இவ்வளவுநேரமாக மன்னரது நற்பொழுதினை வீணாக்கிப் பிழையாளியானேன்.

மன்னன்:— கட்டழகி! நிழலருமை வெய்யிலிற்றெரியும் என்பர். ஆகையின் துயருழந்து பின்னர் நுகர்ந்த இன்பமே சுவைமிக்கதாகின்றது.

வேழம்பன்:— மன்ன! நிலவின்பம் நுகரப்பட்டது. உன்னுறைவிடத்திற்குப் போகுஞ் சமயம் வந்துவிட்டது

மன்னன்:— அப்படி எனில், உன்தோழிக்கு வழிகாட்டு.

**வேழம்பன்:—** இறைவி இவணிவண் வருக.

(என்றனைவரும் செல்கின்றனர்)

**மன்னன்:—** அழகி! இதுதான் எனது வேண்டுகோளாகும்.

**பீலிவளை:—** என்னது?

**மன்னன்:—** பிறைநுதால்! உன்னை மணக்குமுன் இவ்விரவு நூற்றுக்கணக்காகப் பெருகியதுபோலப் போயது. உன்னை மணந்த நேரத்தும் இவ்விரவு அவ்வணமேதான் போகின்றது. ஆகையின் மேலோனாகை யான் ஆயினன். உன்னைக் கூடின பொழுது இரவு நீடிப்பின் நன்றாகும்.

(என்றனைவரும் வெளிச்சென்றனர்.)

மூன்றாமங்கம் முடிந்தது.

நலம்

## பீலிவளை மணம் எனும் நாடகம்
## நான்காவது அங்கம்.

(மின்னனுளும், சம்பங்கியும், வருகின்றனர்.)

சம்பங்கி:— (மின்னனுளைப்பார்த்து) அடீ! வாடிய தாமரைப்பூப்போலவுள்ள, உன் முகத்தினது ஒளி மங்கியநிலை மனக்கவலையைக் குறிப்பிடுகின்றது. அக்கவலையின் காரணத்தை என்னிடஞ் சொல்லலாகாதா? நானும் சமமாகத்துயர் உழப்பதற்கு விரும்புகிறேன்.

மின்னனுள்:— நாகமங்கையாது திருப்பணிமுறை எனக்கு வந்து சேர்ந்தமையின் இங்கு யான் வண்ணக்கடவுளது வழிபாட்டினிற் பொருந்தியவளாகியுள்ளேன். அடீ! எனக்கோ அவளைப் பாராதிருக்கின்றமையின், அடிக்கடி அவள் நினைவு வந்துகொண்டுளது.

சம்பங்கி:— உங்களிருவரது உழுவலன்பினை யான் அறிவேன். பின்னர் என்ன?

மின்னனுள்:— பின்னர் இந்நாட்களில் அங்கு என்ன செய்தி நிகழ்ந்திருக்கலாம் எனக், கடவுளுணர்வினுல் யான் அறியும்பொழுது அடாப் பேரச்சத்தினை உண்டாக்கும், ஓர் பெருந் துன்பச்செய்தி உணரப்பட்டது.

சம்பங்கி:— (பரபரப்புடன்) எத்தன்மையது.

மின்னனுள்:— பீலிவளை இன்பத்துணைவனுன அம்மன்னனை அரசியல்வேலைகளை அமைச்சரிடம் அமையுமாறு ஒப்புவிக்கச் செய்து அவனை அழைத்துக்கொண்டு புகாஅர் நகர்க்கழிக்கானற் சோலையில் விளையாடப் போயினள்.

**சம்பங்கி:—** அத்தகைய விடங்களிற் பெறும் இன்ப நுகர்ச்சியே மாப்பேருயர்வு பூண்பதாகும். அப்புறம் என்ன?

**மின்னனுள்:—** அங்குக் காவிரி யாற்றினது மணற்குன்றுகளில் மண்ன்முட்டு விளையாட்டயர்ந்த இயக்கர் சிறுமியாய காணெழிலாள் என்பவள் அம்மன்னனுல் நெடுநேரம் கடைக்கணிக்கப்பட்டாளென்று பீலிவளை மன்னனிடத்து ஊடலுற்றனள்.

**சம்பங்கி:—** ஊழ்முறைதானே. கடுநட்புப்பொறுதது. பின் என்ன?

**மின்னனுள்:—** பிறகு தன் கொழுநனது இன்மொழிகளை உடன்படாளாய், ஆசிரியர் சாபத்தினுல் மயக்குற்ற உள்ளத்தளாய்க், கடவுளது மேற்கோளினை மறந்தவளாய்ப் பெண்டிர் புகவொண்ணுத இளமையோன் வனத்துட் புகுந்தனள். புகுந்த பின்னர் பீலிவளையது வடிவம் கானகத்துக்கொடி உரு உற்றது.

**சம்பங்கி:—** ஒருவராலும் ஊழ்கடக்கற்பாலதன்றே. அக் காதற்கு இதுவே ஒருங்குடன்வந்த இத்தகைய தீங்காயிற்று. பின் அம்மன்னர் எத்தன்மையராயினர்.

**மின்னனுள்:—** அந்தக் காட்டிலேயே தன் காதலியைத் தேடிக்கொண்டு பகலிரவுகளைக் கழிக்கின்றனர். இதோ இன்புற்றவரையும், மயக்குறுவிப்பதாய மேகமும் தோன்றியது. இனி அவர் பொறுக்கவொண்ணுப் பெருந்துயருக்கு ஆளாவர்.

**சம்பங்கி:—** அட! அத்தகைய பொதுவறு வடிவிற் சிறந்தவர் நீடித்துத் துயருழப்பவர்ஆகார். மீண்டும் எதிர்பாராவொரு பெருந்தண்ணளியின்பொருட்டுக் கூடற்காரணம் நேரிட்டுப் போகின்றது. இது வலிதுதான். ஆகையின் வா. வண்ணனுக்கு வழிபாடுசெய்வோம்.

(என்று வெளிச் சென்றனர்.)

(பித்தர்கோலம் அணிந்த மன்னன் வருகின்றனன்.)

**மன்னன்:—** அடே! போக்கிரி! இராக்கதப் பயலே! இரு இரு. எங்கே என் காதலியைக் கவர்ந்து செல்கின்றனை? அடடா! திடீரென வானத்திற்பாய்ந்து என்மீது அம்புமாரி பொழிகின்றனன். (உற்றுநோக்கி) இதோ எதிரிற் காணப்படுவது புது முகில்தான். மெய்க்கவசம் அணிந்த இறுமாந்த இராக்கதனன்று இது வானவில்தான். காதுவரை நாணிழுக்கப்பட்ட வில்லன்று. இது மழை நீர்த்துளிக்கம்பிதான். அம்புமாரியன்று. இதோ பொன்னுறை கோட்டினைப்போல அழகாகக் காணப்படுவது மின்னல்தான். என் காதலியாய பீலிவளை அன்று.

(ஆராய்ந்து) எங்கு அப்பீலிவளை போயிருப்பள். கோபங் கொண்டு ஒருவேளை தன் தெய்வ வாற்றலால் மறைந்திருப்பளோ. ஆனால் அவள் நெடுநேரம் சினங்கொண்டிராள். ஒருவேளை நாக நுலகுசென்றனளோ. ஆனால், அவளது மனம் என்மீது உழுவலன்பு பூண்டது. என்முன்னிருப்பவளான அப்பீலிவளையை அவ்வசுரரும் கவர்ந்தேகும் ஆற்றலுடையவரல்லர். அவளும் என் கண்முன் படாது மறைந்தனளே. இது எப்பாலதான ஊழ்.?!

(திசைகளை நோக்கி) (நெட்டுயிர்ப்புடன்) போகூழ் உடையவர்களது துன்பம் துன்பத்தையே தொடர்வது எனெனில், கார்காலமும் வந்துற்றது. என் மனையாளது பிரிவும் இப்பொழுதே எய்தினது. முனிவர்களும் காலத்திற்குக் காரணம் அறையனே எனச் சொல்கின்றனர். ஆகையின், யான் என் மேகத்தினை மறுத்துக் கார்ப்பருவத்தினை மாற்றுதிருக்கின்றனன். மறுக்கவேண்டாம். இக்கார்ப்பருவக் குறிகள், எனக்கு அரசர் பெருமைப் பொருள்களாகவே உள்ளன.

இம்மின்னல்களாய பொற்கம்பிகளான் அழகிதாக வுள்ள இம்முகில் எனக்குப் பொலிவுடையமேற்கட்டி கட்டினது போன்றுள்ளது. இவ்வாகைமரங்கள் பூங்கொத்துக்களாய

சாமரைகளை வீசுகின்றன. இம்மயில்கள், கார்ப்பருவத்து இன்னிசையர்க அகவுகின்றமையின் இவையே வைதாளிகர் ஆகிவிட்டன. இந்நீர்த்துளிகளாய பெரும் பொருள்களை இட்டும் இம்மலைச்சாரல்களே வியாபாரிகள் ஆய்விட்டன. இருக்கட்டும் தற்புகழ்ச்சியின் என்ன பயன்? இக்கானகத்தில் அக்காதலியைத் தேடுகின்றனன். (பார்த்து) என் உட்கோளைப் பொங்கச் செய்கின்றதாகிவிட்டது

இப் புதுவாழை சுற்றிலுஞ் சிவந்த கோடுகளை உடைய நீருட்கொண்ட தன் பூக்களால் என் உள்ளத்தை அக்காதலியது உள்மல்கிய கண்ணீருடைய கண்களை நினைக்கப்பண்ணுகின்றது. இவ்வழியாகத்தான் போனளென்று எவ்வணம் யான் எண்ணுவேன். அவள் இவ்வழியே போயிருப்பின், பின் அழுந்தியதும் செம்பஞ்சுக் குழம்படையாளமுடையதும் ஆய, அவ்வழகிய காற்சுவடுகள் இம்மணற்பாங்கான கானகத்தரைகளில் காணப்படுமே. (நடந்துபார்த்து) (உவகையுடன்) ஊடல்கொண்டு அவள் போன வழி உய்த்துணரப்பட்டது. இதோ உள்ள கிளிவயிற்றுப்பச்சை மேலாடை, அவள் மார்பினின்றும் நழுவி விழுந்து கிடக்கின்றது போலும். கோபத்தினுல் கோணிய நடைகொண்டு போம்போழ்து அவளது கண்ணீர் உதட்டினிலுள்ள செம்பஞ்சினை யழித்துக் கொண்டு முலையிடைப்பட்டுத் தொப்புளிற்றங்கி அங்கிருந்தும் இவ்வாடையில் வழியப்பெற்று இருந்தமையினுல்தான் இத்துணி சிவப்புநிறமுற்றுள்ளது.

(உற்றுநோக்கி) இப் புதுப்புற்றரை எவ்வணம் தம்பலப் பூச்சி உடையதாயிற்று. எவ்வாறு காதலியின் நிலையினை மனிதர் நடமாடாத கானகத்தில் அறிவது. (பார்த்து) அடே! நீர்த்துளிகளால் கண்ணீர்மல்கப்பெற்று இருப்பது போன்றுள்ள இம்மலைச் சாரலிடை இருக்கின்ற இப்பெருங்கல்லில், இம்மயில் ஏறிக் கொண்டு நின்றது. இது எதிர்வருங் காற்றினுல் கொண்டையசையப்பெற்று உயரத்தூக்கிய கழுத்துடையதாகி மேகங்களைப் பார்க்கின்றது.

இதையண்மிக் கேட்கிறேன். (அண்மையிற் போய்) மணிக்கழுத்து மயிலே! வெண்கடைக் கண்ணினாய்! இவ்வனத்தில் நீ சங்குக் கழுத்துடையவளும், நீண்ட கண்களை உடையவளும் ஆய மங்கையைக் கண்டனையோ. ஒருவேளை உன் கண்ணிற் பட்டிருப்பாளென்று எண்ணினேன். பார்ப்பதற்கு அவள் இன்சாயலுடையள். என்ன, இது மறுமொழி சொல்லாமலே ஆடுதற்குத் தொடங்கியது.

இதற்கு இவ்வளவு உவகை உண்டாகக் காரணம் என்ன? (ஆய்ந்து) இருக்கட்டும், தெரிந்தது. இம்மயிலது அழகிய முகிற்றோகை இளங்காற்றினால் விரியப்பட்டு, என் காதலி மறைந்தமையின் பகையில்லாமல் இனிது விளங்குகின்றது. அப்பேலிவளையது, முயக்கினில் அவிழ்ந்த முடியுடைய அக்கூந்தல் பூவுடன் இருப்பின் இம்மயில் என்ன செய்யும். இருக்கட்டும். தெரிந்தது. பிறர் துன்புறத் தான் இன்புற்ற மயிலைக்கேட்பதில் என்ன பயன்? (திரிந்து நடந்து) இக்குயில் கோடைபோயினமையின் மதர்த்து இந்நாகமரத்துக் கிளையில் உட்கார்ந்துகொண்டுளது. பறவைகளுள், இது புலமையுடைய இனமாகும். இதனைக் கெஞ்சிக் கேட்கிறேன். தலைவியே! காதலரனைவரும் உன்னைக் காமதூதி என்றியம்புவர். நீதான் பெண்களது ஊடலினை நீக்குவதில் இணையற்றவள். ஆகையின் அவளை என்னிடமாவது கொண்டுவந்து விடு. என்னை அவளிடமாவது கொண்டு போய் விடு. இன்மொழியாளே! இது பேருதவியாகும். காதலனை உன்னை என் அவள் விட்டுப்பிரிந்தனள், என்று கேட்கின்றனையா?

கேள். அவள் ஊடல்கொண்டனள். நான் ஒரு குற்றமும், ஒருதடவையுங்கூடச் செய்ததாகத் தெரியவில்லை. ஆடவரிடத்தில் பெண்களது, உயர்நிலை நட்புத் தடைகளைச் சிறிதும் விழைவதில்லை. இது என்ன விடையளியாமல், தன்செயலையே நோக்குகின்றது. பிறர் துன்பம் மிக்கதாயினும், அது பிறர்க்கு இன்பமுறுவிக்கும் என்று ஆன்றோர் கூறுவர். துன்புற்ற என்

வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல், இது மதர்த்து வாய்ச் சுவைபோலக் கனிந்த நாகப்பழத்தினைச் சுவைக்கத் தொடங்கியது. இது எவ்வணமிருப்பினும் என் காதலிபோல இன்குரலதா யிருக் கின்றமையின், இதனிடத்து எனக்குக் கோபம் சிறிதும் இலது.

இவ்வழி நாம் போவோம். (நடந்து காதுகொடுத்து) அடே! தென்புறம் என் காதலியின்னடி பெயர்கின்றதைச் சொல்லுகிறதாக இச்சிலம்பின் இன்னொலி கேட்கின்றது. இவண் போகலாம். (நடந்து) துன்பம். துன்பம் கார்ப்பருவ வரவினைக் கண்டு மானசப் பொய்கை போக விரும்பிய அரசன்னங்களது இன்குரலேயாகும். இது சிலம்பினது இன்னொலியன்று. இவை போவதற்குள் இவற்றினிடமிருந்து, காதலியின் நிலையினை உணர்ந்துகொள்ளலாம். (அணுகி) நீர்ப்பறவையரசே! எனக்கு விடையளித்தபிறகு மானஸம் போகலாம். மூக்கினிடையுள்ள தாமரைத்தண்டு நூற்பொதி சோற்றினைக்கீழ் வைத்துவிடு. பின் எடுத்துக்கொள்ளலாம். என் துயர் நீக்கலாகாதா? அவளைக் கண்டனையா? நல்லோர்க்குத் தன் காரியத்தினும் நண்பர் தம் பொருளே பெரிதன்றோ! பொய்கைக் கரையில், என் காதலியைப் பார்க்காவிடில் உனக்கு எவ்வணம் இவ்வழகிய நடைவரும். திருட்டுப்பயலே! அழகனைத்தையுங் கவர்ந்தனை.

அன்னமே! என்காதலியை என்னிடம் திரும்பவும் சேர்த்துவிடு. நடையழகினைக் கவர்ந்தவன் நீயே; உறுதிகொளப் பட்ட ஒரு சிறு திருட்டுப்பொருளால் ஏனைப்பொருள்களும் கொடுக்கத்தக்கவையாகின்றன. (சிரித்து) என்னைத் திருடரை ஒறுக்கும் அரசரென எண்ணி அச்சமுற்று மீது பறந்துசென்றது. (நடந்து) இதோ துணைதழுவி யின்புற்றமர்ந்த யானைக்குருகினை வினவுகின்றேன். சக்கரம்போன்ற வட்ட அல்குலினையுடைய பிடிவனையைப் பார்த்தனையா? ஏன் வாளா இருக்கின்றது? இருக் கட்டும். இதை இழுத்துப் பேசுகின்றேன். உன்காதலி தாமரை இலையான் மறைக்கப்பட்டிருக்கும்போழ்து நீ நம்மைப் பிரிந்தனள் என்றெண்ணிக் காதலுடன் மிகுமிகக் கூவியழைக்கின்றனை. இதனி

னிலிருந்தே, உனக்குக் காதலிமாட்டுப் பேரன்பு இருப்பதனால் பிரிவச்சம் ஊன்றியுள்ளது என்பது தெரியவரும். என்மீது சிறிதும் உனக்கு இரக்கமின்றுபோலுள்ளது. இது மாறின நற் பேற்றின் விளைவேயாகும். சிறிது அப்பால் போகின்றேன். (சிறிது நடந்து) இருக்கட்டும். போவதில்லை.

இவ்விரோஜாமலர் வண்டுகளொலிக்கும் அகவிதழ் உடையதாகிச் சுவைகொளப்பட்ட வாயுடையதும், சீத்தெனங் குரலுடையதும் ஆய அவளது முகத்தைப்போல என்னை யணுகாமல் தடுக்கின்றது. இருக்கட்டும். இம்மலரினில் உள்ள வண்டினிடத்தில் நட்புச்செய்கிறேன். வண்டே! அப்பேலிவலையின் நிலையினை எனக்குச்சொல். இல்லாவிடில் நீ அவளைப் பார்க்க வில்லையா. அவள் முகத்ததாய மணத்தினை நுகரப்பெற்றுயாகில் இவ்விரோஜாமலரினில் உனக்கு இத்துணை விருப்பமுண்டாகாதே! போவோம். (நடந்து நோக்கி) இதோ கடப்பமரக்கிளையைப் பிடித்துக்கொண்ட துதிக்கையுடைய யானைஅரசு பிடியுடன் நிற்கின்றது. இதனிடத்திலிருந்து காதலி நிலையினை நாம் உணரலாம்.

(பார்த்து) பரபரப்பு வேண்டுவதில்லை. இவ்வியானை புதுத்தளிருடையதும், கள்ளின்ப முறுவிப்பதும், தன் பிடியின் கையினுல் கொணரப்பட்டதும் ஆய யாமரக்கிளையினை நுகரட்டும். (நொடிப்பொழுது நின்று பார்த்து) யானை உணவினை முடித்துக் கொண்டது. இருக்கட்டும் கேட்கிறேன். உன்னால் அவள் சேய்மையிற் காணப்பட்டனளா? (கேட்டு உவகையுடன்) இப் பிளிற்றொலியால் தேற்றப்பட்டேனுகின்றேன். நம்மிருவர் நிலையும் சமனுகவிருப்பதால் உன்னிடத்தில் எனக்குப் பேரன்புள்ளது. யானே இம்மண்ணுளும் மன்னர்மன்னன். நீயோ யானையரசன். உனக்கும் எனக்கும் தானநீர்ப்பெருக்கு உள்ளது. என் காதலியும் மங்கையர் அணிகலம். உன்காதலியும் பிடிகளுள் உயர்ந்தவள். எல்லாவற்றிலும் என்னை ஒத்துள்ளனை. பிரிவுத்துன்பத்தினை மட்டும் நீ அடையவில்லை. நீ இன்பமுற்றிரு. நாம் போகிறோம். (நடந்து) (பக்கங்களில் பார்த்துக்கொண்டு)

அடே! மணமுழை என்னும் பெயரியமலை கண்முன் தோன்றுநின்றது. இது நாகமங்கையர்க்கு விருப்பந்தருவது. இம்மலைச்சாரலில் அவள் கண்முன் புலப்படுவளா! (நடந்து பார்த்து) என் தீவினையாலன்றோ முகிலும் மின்னலிழந்தது. இருந்தாலும் இம்மலையைக் கேளாமல் திரும்பப்போவதில்லை. அவள் இக்கானகம் உற்றனளா? என்ன பேசாமல் உளது. சேய்மையில் இருத்தலால் காது கேட்கவில்லைபோலும். அண்மையிற்போய் வினவுகின்றேன். (நடந்து) மலைமன்ன! அக்கட்டழகி உன்னால் பார்க்கப்பட்டனளா? (கேட்டு உவகையுடன்) என்ன பார்த்தேன் என்கிறதா? இனி நீயும் இனியது கேள் என்கிறதா? அப்படிஎனில் எங்கே என்காதலி இருக்கின்றனள்

(கண்ணுளர் குடிநையுள்)

(அதனையேகேட்டு) ஆ! ஆ! துன்பம்! பெருந்துன்பம்! எனது எதிரொலியேயாகும். (துன்பத்தினை அபிநயித்து) களைப்புற்றுளேன். இம்மலையினில் இழிந்துவரும் ஆற்றினது கரையில் அமர்ந்து அலைக்காற்றின்பம் நுகர்கின்றேன். இப்புது நீர்ப் பெருக்குடைய ஆற்றினைப்பார்க்கும் என்மனம் இன்புறுகின்றது. இந்த வாறு அவளைப்போலவே அலைப்புருவ நெறிப்பு உடையதாகியும் நிலைமாறிய பறவைத்திரள் மேகலையுடையதாகியும் கோபத்துலவிழ்ந்த துணி நுரையினை இழுப்பதாகியும், தடைகளையுறுவதாயும், கோபமுடையதாகிக் கோணியே பெருக்கெடுத்து ஓடுகின்றது. இருக்கட்டும். இதனை இரந்து கேட்கிறேன் (குவிகையுடன்)

ஊழியனைக் கைவிடுவது தகுதியா? என்மீது எக்குற்றங் காண்கின்றனை. ஒகோ! இது உண்மையாக ஆறேதான் போலும். ஊர்வசி என்னைவிட்டுக் கடலரையனை (சமுத்திர ராஜன்) அணுகுவளா? இருக்கட்டும். செல்வங்கள் இன்புற்றோரால் எய்துதற்பான்மையன. எங்கு அவள் மறைந்தனளோ, அங்குப் போகிறேன். (போய்ப் பார்த்து)

இம்மானைக் கேட்கின்றேன். இவ்வனத்தினது வனப்பினைக் காண்பது போன்றுள்ளது இது. வனலக்ஷ்மி எனப்படும். கானுறை செல்வியது, கடைக்கண்ணினைப்போல் கருமைநிறமுற்று விளங்குகின்றது. என்னைப் பொருட்படுத்தாததுபோல அப்புறம் தன்முகத்தைத் திருப்பிக்கொண்டது. (பார்த்து) மான்குட்டியால் மறிக்கப்பட்ட பெண்மானை இம்மான் பார்த்துக்கொண்டிரா நின்றது. நீ என் காதலியைப் பார்த்தனையா? நான் அவளது மேனியழகை இயம்புகின்றேன். உன் காதலியைப்போலவே அவளும் அகன்ற கண்களை உடையவள். என்பேச்சைப் பொருட்படுத்தாது தன் காதலியது முகத்தினெதிர் இராநின்றது. இது ஏற்பதாகும். நிலைமாற்றம் பழிக்கிருப்பிடம் ஆகும். இவ்வழியாக யாம் போவோம்.

என்ன இது கற்பிளவிடை மிகவுஞ் சிவந்ததாகக் காணப்படுகின்றது. இது ஒளியதாயுள்ளது. ஆகையின் இது மானிறைச்சியன்று. மழை பெய்து ஒழிந்தது. ஆகையின் இது நெருப்புப்பொறியன்று. (உற்றுநோக்கி) அடே! இம்மணி அசோகப் பூங்கொத்தினைப்போலச் சிவந்துள்ளது. இதனை எடுப்பதற்குச் சூரியன் தன்கிரணங்களை நீட்டுகின்றனன்போலும். இம்மணி என் மனதைக் கவர்கின்றது. இதனை எடுக்கின்றேன். இவ்விரத்தினம் அவளது முடியினில் வைக்கத்தக்கது. அவளோ இப்பொழுது அரியள். எனிதனைக் கண்ணீரால் ஒளிமழுங்கச் செய்கின்றேன்.

(கண்ணுளர் குடிலையுள்)

குழந்தாய்! எடுத்துக்கொள். இக்கூடன்மணி மலைமகளது திருவடிச் செம்பஞ்சினின்றும் பிறந்தது. ஆகையின் இதனை நீ அணிந்துகொள். அணியின் உன்னைக் காதலியுடன் இம்மணி சேர்த்துவிடும். (திசையை நோக்கி) அடே! நாகசாரணன் என்மீது அன்புவைத் தியம்பினன். அன்ப! நீ இனிது வாழ்க (மணியை எடுத்து) என் காதன்மணியே! அவளுடன் என்னைக் கூட்டிடில் உன்னைத் தலையணியாக யான் மேற்கொள்வேன்

(நடந்து பார்த்து) பூ இல்லாதிருந்தும் என் மனதை இக்கொடி கவர்கின்றது. தக்கதுதான். இது என்மனது இன்புறுவிக்கின்றது. இது நீர்த்துளியால் நனைந்த தளிர் உடைமையின் சிவப்பு நீங்கிய வாயுடையள்போலுளது. பூ உதிரப்பெற்றமையின் நகை அணிந்துகொள்ளா மேனியள்போலுளது. வண்டுகளொலி இன்மையின் வாய்பேசாதிருப்பவள் போலிருக்கின்றது. வணங்கி இருக்கின்றமையின் என்மீதிரங்கியவள் போலிருக்கின்றது. ஆகையின் என் காதலியினை ஒத்த உன்னைத் தழுவி இன்புறுகின்றேன். (என்று கொடியைத் தழுவுகின்றனன்) (அவ்விடத்திலேயே பீலிவளை தோன்றுகின்றனள்.)

**மன்னன்:—** (கண்ணைமூடி ஊற்றின்பம் நுகர்ந்து) பீலிவளை மெய்பட்டதுபோல என்னுடல் இன்புற்றது. எனினும் நம்பிக்கை நிறையுறவில்லை. ஏனெனில் எவைகளை யான் எண்ணுகின்றனனோ அவை ஒரு நொடியினில் வேற்றுருவடைகின்றன. ஆகையின் ஊற்றின்பத்தினால் உறுதிகொளப்பட்ட இல்லக்கிழத்தியனைவிரைவின் கண்களைத் திறக்காதிருக்கின்றேன். (மெல்லக் கண்ணைத்திறந்து) என்ன உண்மையாகவே நங்காதலிதானோ?

**பீலிவளை:—** (கண்ணீர்விட்டு) மன்னவர் வெல்க.

**மன்னன்:—** இறந்தவன் பிழைத்து உயிர்பெற்றதுபோலத் தெய்வத்தால் நானுன்னைக் கூடப்பெற்றேன்.

**பீலிவளை:—** உள்ளினுள் மறைந்த பொறியுணர்வு உடையளாயிருந்த யான் தங்கள் நிலையினைக் கண்ணுற்றனன்.

**மன்னன்:—** உள் மறைந்த பொறியுணர்வினள் என்ற உன் மொழியது பொருளை யான் நன்கு உணர்ந்திலேன்.

**பீலிவளை:—** சொல்லுகிறேன். தண்ணளிசெய்க. நான் கோபங்கொண்டமையின் இந்நிலையடைந்தனன்.

**மன்னன்:—** நலத்தவளே! தண்ணளிபுரிவோன் யானல்ல. உன்னைப்பார்த்தமையால் என்மனம் இனியதாயிற்று. எவ்வணம் என்னைப் பிரிந்து இத்துணைப்பொழுது இருந்தனை.

**பீலிவளை:—** எம் ஆருயிர்த்தலைவ! இறைவனுன இளமையோனுல் இளமைநோன்பு கொளப்பட்டது. இப்பூட்கை பூணப் பட்டது. அவர் இக்கழிக்கானற்சோலையிலே தவஞ் செய்கின் றனர்.

**மன்னன்:—** அம்மேற்கோள் எத்தகையது?

**பீலிவளை:—** இவ்விடத்தில் எம்மங்கை வருவளோ அவள் கொடியாக மாறுவாள் என்பதாகும். இக்கூடன்மணி இன்றேல் யான் இக்கொடியுருவம் நீங்கப்பெறப் போவதில்லை. அத்தகைய நான் ஆசிரியர் கோபத்தினுல் மயக்குற்ற உள்ளத்தளாய்க் கடவுள் மேற்கோளினை மறந்து தங்களது இன்மொழிகளைப் புறக்கணித்து இளமையோன் வனத்துள் புகுந்தனன். புகுந்தபின் மாதவிக் கொடியாக மாறினேன்.

**மன்னன்:—** எல்லாம் பொருந்துகின்றன. தோள் மாறுபடப் புணர்ந்து களைப்புற்று யான் உன்பக்கத்தில் தூங்கும் பொழுதே நீ என்னைப் பிரிந்தவனுக நினைத்துக் கவலையுறுவாய். அத்தகைய நீ எனது நெடுநாட்பிரிவினை எவ்வணம் பொறுத் திருப்பாய்? இது உன்னுல் உண்மையாகக் கூறப்பட்டது. உன்னைக் கூடுவதன்பொருட்டு அச்சாரணன் வழியாக நிகழ்ச்சி உணர்ந்து மணிப்போாற்றலால் யான் உன்னைக் கூடப்பெற் றனன்.

(என்று மணியைக் காட்டுகின்றனன்)

**பீலிவளை:—** அஹஹ! கூடன்மணி இம்மணி. ஆகையி னுல்தான் தாங்கள் தழுவிக்கொண்டபோதே இயற்கைவடிவினை யான் உற்றனன்..

(மணியை எடுத்துத் தலையில் சூடிக்கொள்கின்றனள்)

**மன்னன்:—** கட்டழகி! இவ்வணமே நொடிப்பொழுது என்முன் நில். நெற்றிச்சுட்டியாக அணியப்பட்ட இம்மணியது சிவப்புக்கதிர்க்கம்பிகள் பூசப்பட்டுள்ள உன்முகம் இளவெயிலில் அலர்ந்த செவ்விரோஜா மலரினியற்கை யழகினைக் கவர்ந்து இனிது விளங்குகின்றது.

**பீலிவளை:—** இன்மொழியோய்! புகாஅர் நகர்விட்டு வெளி வந்து நெடுநாள் ஆகின்றது. அரசியலார் என்னிடத்தில் பழி சாட்டப்போகின்றனர். ஆகையின் வா. போவோம்.

**மன்னன்:—** நீ எப்படிக் கட்டளை யிடுகின்றனையோ? அப்படியே நடக்கின்றேன்.

**பீலிவளை:—** என்ன? மன்னவர் போவதற்கு விரும்பு கின்றனர் போலும்.

**மன்னன்:—** வானவூர்தியைப்போல மின்னலைக்கொடியாக உடையதும், வானவில்லையே புதுச்சித்திரமாக வுடையதும், அழகாகச் செல்வதும்ஆய இம்முகிலின்மீது என்னுடனமர்ந்து அரண்மனைக்கு என்னைக் கொண்டுபோய்விடு.

அனைவரும் வெளிச்செசென்றனர்.

நான்காவது அங்கம் முற்றிற்று. நலம்! நலம்! நலம்!

---

## பீலிவளை மணம் எனும் நாடகம்
## ஐந்தாவது அங்கம்.

வேழம்பன்:— எனக்கோ ஆனந்தம் மிகமிகப் பொங்குகின்றது. இம்மாதிரியான ஆனந்தம் வெங்காயசாம்பாருடன் இட்டிலி எட்டுத்தின்றாலும் வாராது. அல்வாதுண்டம் ஐந்து தின்றாலும் வாராது. புகையப்புகைய கெட்டி டிகாஷன் கலந்த பால்காபி ஒரு கோப்பை சாப்பிட்டாலும் வாராது. இது பிர்மானந்தம் அன்றோ. நம்மருமைப் பாங்கன் நெடுநாள்வரை பீலிவளையைத் துணையாக அழைத்துக்கொண்டு என்னிடத்திலுமொன்றுஞ் சொல்லாமல் கழிக்கானற்சோலை முதலிய கடவுட் கானகங்களில் விளையாடிவிட்டு மீண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தனன்.

இப்பொழுது நன்றியழைப்பு முகமன் முதலியவற்றால் வரவேற்ற குடிமக்களால் மகிழ்விக்கப்பட்டவனாகி இனிது அரசாள்கின்றனன். மகப்பேறின்மையைத்தவிர வேறொரு குறையு மிவனுக்கிலது. இன்று நன்னாளென்று காவிரி கடலுடன் கலக்கும் சங்கமுகத்துறையில் தனது மனைவிமார்களுடன் இனிது நீராடி இப்பொழுது கூடாரத்துள் உறைகின்றனன்.

(என்று சொல்லிக்கொண்டு நடந்து செல்கின்றனன்.)

(கண்ணுளர் குடிலையுள்)

ஆ! ஆ! துன்பம்! துன்பம்! வெண்பட்டுடை உறை உடைய விசிறியில் இறைவிமுடிமணியாகற்பாலதான அக்கூடன் மணி என்னால் வைக்கப்பட்டது. அதனை எடுத்துவரச் சொல்லும் போழ்தினில் கண்கூடாக அதனை ஒருகழுகு இறைச்சி என்றெடுத்துப் பறந்ததனைப் பார்த்தனன். அது மிக உயரப்பறந்து போய் என் கண்களிற்படாமல் மறைந்துவிட்டது.

**வேழம்பன்:—** (காதுகொடுத்து) பெருந்துன்பம் நேர்ந்தது நம்மருமைத் தோழனது மனதிற்கு இனியதன்றோ அப்பெறலருங் கூடன்மணி, ஆகையின் தன் உடுப்பினை முற்றும் அணியாதாகி நம் நண்பன் இருக்கையைவிட்டெழுந்து இவனையே வருகின்றனன். இவனையண்மி யானிருக்கின்றனன்.

(மன்னன் பரபரப்புடைய ஊழியமக்களுடன் வருகின்றனன்.)

**மன்னன்:—** அத்திருட்டுக் கழுகு தனக்கே இன்னுமை வேண்டிற்றுப்போலும். இல்லாவிடில் அக்களவினை அது மன்னனரண்மனையிலேயே செய்திருக்குமா?

**வேடுவச்சி:—** இதோ! இதோ! மூக்கினுனியிற்பொருந்திய பொற்கயிற்றையுடைய மணியினால் ஆகாயத்தில் கோடுகளை இழுப்பதுபோல வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது.

**மன்னன்:—** இதைப்பார்க்கின்றேன். இந்தக்கழுகு மணிப் பொன்நாணினை மூக்கினிற்கவ்வி விரைவுடன் வட்டமிட்டுக் கொண்டு வட்டமாகக் கொள்ளிக்கட்டையினைச் சுற்றினாற்போலொத்த அம்மணியது சிவப்புக் கதிர்க்கம்பிவட்டத்தினைச் செய்யாநின்று பறக்கிறது. என்செய்வது.

**வேழம்பன்:—** (அண்மி) இரங்கினது போதும். குற்றவாளி ஒருக்கத்தக்கவனுவன்.

**மன்னன்:—** நீ நன்கு சொல்லுகின்றனை. வெற்றிவில் கொணர்க.

(விற்பிடித்த வேடுவச்சி வெளிச்சென்றனள்)

**மன்னன்:—** தோழ! பறவை காணப்படுகின்றிலதே.

**வேழம்பன்:—** ஒருக்கத்தகுந்த அப்பிணந்தின்னி தென்புறமாகப் பறந்து கண்ணிற்குப் புலப்படாமற்போயது.

மன்னன்:— (திரும்பிப்பார்த்து) இப்பொழுது காணப் பட்டது. தென்றிசை முகத்திற்கு அசோகுப்பூவினைத் தலையணி யாகச் சூட்டினாற்போல ஒளி தளிர்த்த அம்மணியைத் தென்பால் ஒளிவீசச்செய்யா நின்றது இக்கழுகு.

(விற்பிடித்த வேடுவச்சி வந்தனள்)

**வேடுவச்சி:—** தலைவ! இதோ கையுறையுடன் வில் உளது.

**மன்னன்:—** இப்பொழுது வில்லிருந்தும் என்ன பயன்? இறைச்சியுண்கழுகு அம்புவழிகடந்து சென்றது. இப்பொழுது அக்கழுகால் நெடுந்தூலையிற் கொண்டுபோகப்பட்ட அப்பெறலருங் கூடன்மணி இரவில் மிகச்செறிந்த முகிலுடன்கூடிய செவ்வாய்க் கோள்போலக் காணப்படுகின்றது. (பக்குடுக்கையனைப் பார்த்து) தத்த! நான் சொன்னேனென்று நீ ஊர்க்காவலினிடம் போய்ச் சொல். மாலையினில் அத்திருட்டுக்கழுகு உறையும் மரம் தேடப் பட்டிடும்.

**பக்குடுக்கையன்:—** மன்னவர் கட்டளைப்படியே நடக் கின்றேன்.

(என்று வெளிச்சென்றனன்).

**வேழம்பன்:—** நீ இப்பொழுது உட்காரு. அம்மணியைத் திருடினவன் எங்கேபோய் உனது ஒறுப்பிற்குத் தப்பி ஒளிந் திருப்பன்.

**மன்னன்:—** அக்கழுகு கொத்திச்சென்ற இரத்தினத்தில் முழுமணி என்ற பெருவிருப்பம் எனக்கு இல்லை. நண்ப! அக் கூடன்மணிதானே என் காதலியுடன் கூட்டமுறப்பண்ணினது.

**வேழம்பன்:—** நீ செய்தி முழுவதும் குறிப்பால் விளங்கச் செய்துவிட்டனையே.

(மணியை அம்புடன் எடுத்துக்கொண்டு பக்குடுக்கையன்)
வருகின்றனன்.

**பக்குடுக்கையன்:—** மன்னவர் வெல்க. வெல்க. அக்குற்றவாளியான கழுகு அம்புருவமெடுத்த உன்து வலியால் பிளக்கப்பட்ட உடலுடையதாகிக் குற்றத்திற்குத்தக ஒறுப்பினை உற்று விசும்பினின்றும் தலைமணியுடன் பொத்தென வீழ்ந்தது.

(அனைவரும் ஆச்சரியத்தை அபிநயிக்கின்றனர்.)

**பக்குடுக்கையன்:—** இம்மணி நீரால் தூய்தாக்கப்பட்டது. யாருக்குக் கொடுப்பது.

**மன்னன்:—** குறத்தி! இம்மணியை நெருப்பிற்காட்டித் தூய்தாக்கிப் பெட்டியினில் வைத்துவிடு.

**குறத்தி:—** மன்னவர் உத்திரவின்படியே நடக்கின்றேன்.

(என்று மணியை எடுத்துக்கொண்டு வெளிச்சென்றனள்)

**மன்னன்:—** தத்த! இது யாருடைய அம்பென்று உனக்குத் தெரியுமா?

**பக்குடுக்கையன்:—** பெயர் எழுதப்பட்டுள்ளது. எழுதுக்களைப் பார்ப்பதற்கு என் கண் கூசுகின்றது.

**மன்னன்:—** அப்படியானல் அம்பினைக்கொண்டுவா.

**பக்குடுக்கையன்:—** (அப்படியே செய்கின்றனன்)

**மன்னன்:—** (பெயரினை வாசித்து) பிள்ளைப் பேற்றின் பத்தினை அபிநயிக்கின்றான்.

**பக்குடுக்கையன்:—** (என் வேலையைச் செய்யப்போகின்றனன்)

(என்று வெளிச்சென்றனன்)

**வேழம்பன்:—** நீ என்ன எண்ணுகின்றனை.

**மன்னன்:—** அக்கமுகினை அடித்தவன் பெயரினைக்கேள். வாசிக்கின்றனன்) இவ்வம்பு பீலிவளைபாற் பிறந்தவனும், நெடுமுடிக்கிள்ளி மகனும், விற்பிடித்த வீரனும், பகைவராயுளைப் (போக்குவோனும், இளையோனுமாய திரையனுடையது. :—

**வேழம்பன்:—** (உவகையுடன்) சந்தோஷம். பிள்ளைப் பேறுற்று விளங்குகின்றனை.

**மன்னன்:—** நண்ப! இஃதெப்படி? அன்றுதொட்டு இவளுடன்கூடியே உள்ளனன். நான் கருப்பத்தின் அடையாளத்தையும் காணவில்லை. எங்கிருந்து மகப்பேறு வரும். ஆனால் சின்னாள்வரை அப்பீலிவளை கொங்கைமுகங் கறுக்கப்பெற்றும், மேனி விளர்க்கப்பெற்றும் நரம்புகள் பசுமைநிறமுறப் பெற்றும், புளியுணவிற்கு உவந்தும், பொய்த்துயில்கொண்டும், கண்கள் சோர்வு அடையப்பெற்றும், இருந்தனள்.

**வேழம்பன்:—** தேவமாதர்களிடத்துப் பூதலமங்கையா இயல்களனைத்தும் பொருந்தியிருக்குமென்று நீ நினையாதே. அவர்கள் வரலாறுகள் தெய்வீகவாற்றலால் மனிதருணர்வினுக்கு எட்டாதனவாகும்.

**மன்னன்:—** நீ எவ்வாறு இயம்புகின்றனையோ அவ்வாறேதான் இஃது இருக்கும். எக்காரணங்கொண்டு அவள் பிள்ளைப் பேற்றினை மறைத்திருந்தாள் என்பது புலனாகவில்லை.

**வேழம்பன்:—** தெய்வங்களது இரகசியங்களை யார் அறிய முடியும்.

(பக்குடுக்கையன் வருகின்றனன்.)

பக்குடுக்கையன்:— மன்னவர் வெல்க, வெல்க, மன்ன! சாயலர் குடிசையினின்றும் ஓர் தவப்பேரிளம்பெண் ஓர் மகனை அழைத்துக்கொண்டு தங்களைப் பார்க்கவேண்டுமென்று வந்துள்ளாள்.

மன்னன்:— இருவரையும் காலந்தாழ்த்தலின்றி என்னிடம் வருவி.

பக்குடுக்கையன்:— மன்னவர் உத்திரவின்படியே நடக்கின்றேன்.

என்று வெளிவந்து விற்கையனை இளையனொடும், தவப் பெண்ணொடும் வந்து சேர்ந்தனன்.

பக்குடுக்கையன்:— இறைவி! இவண் இவண் வருக.

(அனைவரும் வெளிச்செல்கின்றனர்.)

வேழம்பன்:— (பார்த்து) எவனது பிறைத்தலையம்பு கழுகினைக் கொன்றதோ? அவ்விளவரசனே இதோ முன்னிற்பவன். என்ன துணிவுகொள்ளவில்லையே. உன்னை அச்சடித்தாற்போலப் பெரும்பான்மையாய் ஒத்து நின்றனன்.

மன்னன்:— இவ்வணமிருக்கலாம். ஆகையினன்றோ என் கண்களும் இவனிடத்துப் பதிந்து ஆர்வப்புனல்கணீரை உகுக்கின்றன. என் உள்ளம் ஆர்வக்கட்டுடையதாகி நின்றது. மனது உவகை நிறைந்தது. நிறையிழந்த யான் நடுக்குற்ற இவ்வுறுப்புக்களால் இடைகெகிழாமல் இவ்விளைஞனைத்தழுவ விழைகின்றனன்.

பக்குடுக்கையன்:— இறைவி! இவ்வணம் அமர்ந்திரு.

(இளைஞனும், தவப்பேரிளம் பெண்ணும் அமர்ந்தனர்.)

மன்னன்:— தாயே! உன்னை வணங்குகின்றேன்.

தவப்பெண்:— பெருஞ்செல்வ! ஞாயிற்றின் மரபு வளர்ப்போன் ஆகுக. (தனக்குள்) நாம் சொல்லாமலே மக்கள் தொடர்புநிலையினை இவனுணர்ந்தனன். (வெளிப்படை) குழந்தாய்! உனது தந்தையை வணங்கி வழிபடு.

இளைஞன்:— (வில்லுட்பிடித்த குவிகையுடன் வணங்குகின்றனன்.)

மன்னன்:— நீடூழி நீ இன்புற்று வாழ்க.

இளைஞன்:— இவன் எனக்குத் தந்தையாயிருப்பின் நானிவன்றன் மகனாவேன். இம்மொழியைக் கேட்டகாலத்து என்னுள்ளம் மாணவன்பு பூண்டுள்ளது. தந்தைமார்களால் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டி அன்புடன் வளர்க்கப்பட்ட சிறுவர்களுக்குத் தகப்பன்மார்களிடத்தில் உள்ள அன்பு இத்தன்மையதென்று இயம்பவொண்ணாச் சிறப்புடையதாய் விளங்குமன்றோ.

மன்னன்:— இறைவி! வந்தது என்பயனுக்க கருதியோ?

தவப்பெண்:— மன்ன! கேள். இவ்விளந்திரையன் பிறந்தபோழ்தே யாதோவொன்றெண்ணி அப்பீலிவளை என்னிடம் இவனை அடைக்கலமாக்கிப் பாதுகாத்து வரச்சொல்லினள். இவ்வரசிளங் குழவிக்குப் பிறவிச்சடங்கு முதலியன எவ்வெவை செயற்பாலனவோ அவ்வவையனைத்தும் இறைவனுண சாயல முனிவனால் முறையுடன் செய்யப்பட்டன. இவ்விளைஞன் கலைகளனைத்துங் கற்றுத்தேர்ந்தனன். விற்கலையிலும் நன்கு பயிற்சியுற்றனன்.

மன்னன்:— தலைவருடையவனாக ஆயினன்.

தவப்பெண்:— இவன் முனிகுமாருடன் மலர், சிறுசுள்ளி, தருப்பை முதலியன கொணர்தற்குப் பூங்கானகத்திற்குப் போயினன். அவ்விடத்துத் தவப்பள்ளிக்குத் தகாதசெயல் இவனாற் செய்யப்பட்டது.

வேழம்பன்:— (பரபரப்புடன்) அது என்னது.

தவப்பெண்:— ஒரு கழுகு இறைச்சியினைக் கௌவிக் கொண்டு ஓர் மரக்கிளையில் ஒளிந்திருக்கையில் வில்லினில் நாண் பூட்டி இவன் குறிதவுறாது அம்பு எய்தனன்.

மன்னன்:— (அரசிளங் குமரனைப் பார்க்கின்றனன்) அப்புறம் என்ன?

தவப்பெண்:— பின் சாயலர் இச்செய்தியை அறிந்து எனக்குக் கட்டளையிட்டனர். கையடைப்பொருளைத் திரும்பவும் கொடு என்றனர். ஆகையின் அரசியாய அப்பீலிவளையைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகின்றேன்.

மன்னன்:— இறைவி! அப்படியெனில் இவ்வணையினில் சிறிது சாய்ந்திருக்க.

தவப்பெண்:— (கொண்டுவரப்பட்ட அணையினில் உட்காருகின்றனள்.)

மன்னன்:— தத்த! பீலிவளையை அழைத்துவா

பக்குடுக்கையன்:— எவ்வணம் ஆணையோ அவ்வணமே செய்கின்றேன்.

(என்று வெளிச்சென்றனன்.)

**மன்னன்:—** (மகனைப்பார்த்து) என்னருஞ் செல்வ! வருக. வருக. மகாஅர்களைத் தழுவுதலால் உறுமின்பம் உறுப் பனைத்துஞ்சென்று பரவுவதன்றே. ஆகையின் என்னை அண்மி நிலவு நிலாமணியைப்போல ஊற்றின்பந்தந்து என்னை மகிழ்வி.

**தவப்பெண்:—** கண்ணே! தந்தையை மகிழ்வி.

**இளைஞன்:—** (அரசனை அண்மி அடிவீழ்ந்து பணிகின் றனன்.)

**மன்னன்:—** (மகனைத் தழுவிப் பக்கத்தணையில் உட்கார வைத்துக்கொண்டு) கண்மணீ! இதோ உன் தந்தையது நண்பனாய அந்தணனை அச்சமுறாமல் வணங்கு.

**வேழம்பன்:—** ஏன் பயப்படுகின்றனை! தவப்பள்ளியிற் பழகின குரங்குதானே நான்.

**இளைஞன்:—** தாத்தா! (புன்னகையுடன்) உங்களை வணங்குகின்றேன்.

**வேழம்பன்:—** நன்னர் நலம் வளர்வதாகுக.

(பீலிவளையும் பக்குடுக்கையனும் வருகின்றனர்.)

**பக்குடுக்கையன்:—** இறைவி! இவணிவண் வருக.

**பீலிவளை:—** (மகனைப்பார்த்து) யாவன் இவன் மன்ன னுடன் உட்கார்ந்து வில்லேந்திக்கொண்டு முடியமைகுஞ்சியனாய் அழகாக வீற்றிருக்கின்றனன். (தவப்பேரிளம்பெண்ணைக்கண்டு) ஆ! ஆ! இவன் என் மகனிளந்திரையனென்று மெய்ம்மொழியாள் வந்திருப்பதனால் கண்டுகொண்டேன். குழந்தைப்பருவம் நீங்கப் பெற்று இளைஞனாக் ஆய்விட்டனன். (அரசனிடம் போகின்றனள்)

மன்னன்:— (பீலிவளையைப்பார்த்து) இதோ உன்தாய் உன்னைப் பார்க்க பேராவல்கொண்டு அன்புப்பாற்றுளியூற்றினால் நனைந்த மேலாடை யுடையளாகி வந்து முன்னிற்கின்றனள்.

தவப்பெண்:— குழந்தாய்! வா. அன்னையை எதிர்கொண்டு அழை.

இளைஞன்:— (பீலிவளையை வரவேற்கப் போகின்றனன்.)

பீலிவளை:— அம்மா! அடிவீழ்ந்து பணிகின்றனன்.

தவப்பெண்:— என்னருஞ் செல்வியே! கணவன் மனமகிழ் விப்பவளாயிரு.

இளைஞன்:— அம்மா! உங்களை வணங்குகின்றனன்.

பீலிவளை:— (அண்ணாந்தமுகமுடைய மகனைத் தழுவி) என் தங்கமே! தந்தையின் மனத்தைக் களிப்பிப்போனாயிரு. (அரசனை அண்மி) மன்னவர் வெல்க. வெல்க.

மன்னன்:— மகவின்றமாதே! வருக, வருக. நல்வரவு. இவண் அமரலாம்.

(தன்னரியணையின் பாதியை அளிக்கின்றனன்.)

பீலிவளை:— (உட்காருகிறாள்.)

(அனைவரும் தக்கவிடத்தில் உட்காருகின்றனர்.)

தவப்பெண்:— கலையனைத்துங் கற்ற இவ்விளந்திரையன் இப்பொழுது போர்க்கோல மணியத்தக்கோனாக ஆயினன். ஆகையின் இந்த உன் கொழுநன்முன் கையடைப்பொருள் மீண்டும் என்னால் அளிக்கப்பட்டது. ஆகையின் யான்போக நினைக்கின்றேன். எனது தவப்பள்ளியறம் தடையுறுகின்றது.

**பீலிவளை:—** தங்களைப்பார்த்து பன்னாளாயினமையின் தங்களை மிகப் பார்த்தும் ஆசைதணியப்பெறுளாய் இருக்கின்றேன். பிரியின் துயர் ஆற்றுளாகுவேன். தங்களுக்கு இடையூறுசெய்வதும் தக்கதன்று. ஆகையின் தாங்கள் சென்று மீண்டும் என்னைப் பார்க்கவரவும். வணக்கம். வணக்கம். நல்வழி சிறப்பதாகுக.

**மன்னன்:—** தாயே! இறைவரான சாயலமுனிவருக்கு என் குவிகை வணக்கங்களை அறிவிக்கவேண்டுமாறு விழைகின்றனன்.

**தவப்பெண்:—** இவவணமே ஆகட்டும.

**இளைஞன்:—** தலைவியே! உண்மையாகப் போவாயேயானால் அப்பொழுது என்னையும் தவப்பள்ளிக்கு அழைத்துப் போகவும்.

**மன்னன்:—** அன்ப! மாணிப்பருவத்தினில் அங்கிருந்தனை. இல்லற நிலையினை அடைவதற்கு இதுதான் தக்க நாள் ஆகும்.

**தவப்பெண்:—** குழந்தாய்! தந்தையின் சொற்படி ஒழுகுதல் நலம்.

**இளைஞன்:—** அந்தச் சிங்கக்குட்டியினைத் தடவிக்கொடுத்து இன்புறுவித்து என் மடியிற்கிடத்தித் தூங்கப்பண்ணினேன். பார் அந்தக்குட்டிக்குப் பற்களெல்லாம் இப்பொழுது முளைத்திருக்கும். பிடரிமயிர் நன்றாக வளர்ந்திருக்கும். அப்பெருமித நடைக்குட்டியினை அனுப்பு. மறந்துவிடாதே கட்டாயமாக அனுப்புவாயா?

**தவப்பெண்:—** (சிரித்து) இப்படியே அனுப்புகின்றேன். உங்களிருவருக்கும் நலம் பொங்குக.

(என்று வெளிச்சென்றனள்.)

**மன்னன்:—** நன்மாதே! இப்பொழுதுதான் நான் பிள்ளையினைப்பெற்றவர்களுள் முதல்வனாயினேன். எழிற்கண்ணியிடம் பிறந்த சொல்லணியனால் நாகராஜன் இன்புற்றிருப்பதுபோல உன் மகனாய இளந்திரையனால் யானும் இன்புற்றுள்ளேன்.

**பீலிவளை:—** (நினைத்துப் புலம்புகின்றனள்.)

**வேழம்பன்:—** ஏனிறைவி கண்ணீர் உகுமுகத்தினளா யினள்?

**மன்னன்:—** (பரபரப்புடன்) காதலி! ஏனிப்பொழுது அழுகின்றனை. நம்மரபு இன்றே நிலைத்தது. அளப்பிலா வுவகை யுறும்பொழுது வந்துற்றது. நன்முத்துமாலை ஒன்று அணிந்துள்ளனை. இது போதாதா? கண்ணீர் முத்துமாலையினை அணிதல் வேண்டாமே.

(என்று கண்ணீரைத் துடைக்கின்றனன்.)

**பீலிவளை:—** ஆருயிர்த்தலைவ! நீ கேள் என்னிலை. முதலில் பிள்ளையைக்கண்டதனால் என்னையே நான் மறந்திருந்தேன். இப்பொழுது நாகராஜன் என்ற பெயரினைச் சொல்லவே அவ் வேளைமுடிவு நினைவிற்கு வந்தது. அது என்மனதைத் துன் புறுத்துகின்றது.

**மன்னன்:—** எனக்குச் சொல்லு. எக்காலம் முடிந்தது.

**பீலிவளை:—** தாங்கள் முன்பு என் மனதைக் கவர்ந்திருந்த போழ்து நாகவேந்தன் எனக்கோர் கட்டளையிட்டுள்ளனன்.

**மன்னன்:—** என்னது அது.

**பீலிவளை:—** எப்பொழுது அவ்வென்னருமைத் தோழனாய நெடுமுடிவேந்தன் உன்பால் உதித்த மகனது முகத்தைப் பார்க்கின்றனனோ அப்பொழுது நீ மறுபடியும் என்னண்மையில்

வந்திருத்தல்வேண்டும் என்பதாகும். ஆகையின் தங்களைப் பிரிய வேண்டுமே என்ற அச்சங்கொண்டு பிறந்தவுடனேயே கல்விப் பயில்விப்பிற்காக இறைவனுன சாயலமுனிவர் தவப்பள்ளியி லுள்ள மெய்ம்மொழியாளது கையினில் என்றால் ஒருவருக்கும் தெரியாமல் அடைக்கலமாக இம்மகன் அளிக்கப்பட்டனன். இப்பொழுது தந்தைக்கு மகனாற்றும் நன்றிசெய வல்லோனாயினன் என்றெண்ணிய அத்தவப்பேரிளம்பெண் குழந்தையை என்னிடம் ஒப்புவித்தனள். ஆகையின் இத்துணைநாள்அளவும் எனக்குத் தங்களோடு உடனுறைவு கிடைத்தது. இவ்வின்பம் இவ்வள விற்றேயாகும். (அனைவரும் துன்பத்தினை அவிநயிக்கின்றனர்.)

**மன்னன்:—** (நெட்டுயிர்ப்புடன்) ஆ! ஆ! தெய்வம் இன் பத்திற்கு இடையூறு ஆக்குகின்றது. மகப்பேற்றுத் தெளி வடைந்த எனக்கு உனது பிரிவு புதுமழையால் கோடைவெம்மை நீங்கப்பெற்ற மரத்தின்மீது மின்னலணி நெருப்பு அணுகியது போல இருக்கின்றது.

**வேழம்பன்:—** இந்த அத்தகைய நன்மையும் ஒரு தீமை யைத்தொடர்ந்து வரல்வேண்டுமோ? ஊழின்வலியே சிறந்த தாவதுபோலும். நீ மரவுரியணிந்து தவஞ்செய் கானகத்திற்கு ஏகல் வேண்டுமென இப்பொழுது யான் எண்ணுகின்றேன்.

**பலிவனை:—** மாப்பெருமன்னர் நல்வினை செய்யாத என்னையும் முடித்த தொழிலை உடையளாயினள் என எண்ணினும் எண்ணலாம். மகன் நல்லோனும் கற்றோனுமாயினன். இனித் தன்காரியம் நிறைவேறினமையின் செய்யலாவது நாகலோகம் போவதுவே. இவன் இன்புறின் என்ன? துன்புறின் என்ன? நமக்கொன்றுமில்லை என்று இவள் எண்ணலாம் என என்னைப் பற்றி ஒருவேளை நினைக்கலாம்.

**மன்னன்:—** அழகி! இவ்வணம் இன்று. இன்று. பிறன்கண் ணடிமையாய் இருப்பது பிரிவினை எளிதாகச் செய்ய

வல்லது. தனக்கு இன்பஞ் சிறிதும் உண்டுபண்ணுதது. ஆகையின் உன் தலைவனுடைய ஆக்கினையை மீருது ஒத்து நீ ஒழுகு. நானும் உனது மகனுய இளந்திரையனிடத்து அரசினை ஒப்புவித்து மான்கள் உலாவுங் கானகங்களைக்கண்டு இன்பம் நுகரப்போகின்றனன்.

இளைஞன்:— மதர்த்த காளை பூட்டப்பட்ட வண்டியினில் கன்றினைப் பூட்டுவது தக்கதல்ல என்று தோன்றுகின்றது.

மன்னன்:— என்னருமை மகனே! மணவேழம் யானைக் கன்றுயிருந்தபோதிலும் மற்ற யானைகளைக் குறும்புசெய்யா வண்ணம் கெடுத்து அடக்குகின்றது. பாம்பு குட்டியாயினும் அதன் நஞ்சு உயிரைக் கவர்கின்றது. அரசன் இளமையனுயினும் மாநிலங்காப்பவல்லோனேயாவன். இவ்வரசியல் பிறவியினுலேயே தன்செயல் நிறைவேற்றுவதாகிறது. இளமை முதலிய பருவங்களாலன்று. மன்னர் மரபிற் பிறந்தவரது ஒளியே இவ்வுலகங் காக்கவல்லதாகும். அடே! தத்த! இளந்திரையன் முடிசூட்டு விழாவிற்கு வேண்டுவன அனைத்தும் சேர்க்கப்படட்டும் என நான் சொன்னேனென்று அவையாளும் அமைச்சரிடம் போய்ச் சொல்லு.

பக்குடுக்கையன்:— அப்படியே செய்கிறேன் (என்று துன்புற்று வெளிச்சென்றனன்.)

(அனைவரும் கண்கூசும் நிலையினை அவிநயிக்கின்றனர்.)

மன்னன்:— (ஆகாயத்தினைப் பார்த்து). என்ன! முகிலில்லா வானத்து மின்னல் ஒருங்கு கூடியதுபோல் தோன்றுகிறது.

பீலிவளை:— ஆ! ஆ! இறைவரான இருணந்திமுனிவர் எனும் மைநாகர் வருகின்றனர்.

**மன்னர்:—** அடே! நமது முனிவர் இயங்கும் கற்பகத் தினைப்போலப் பொன்னிறமேனியராகவும் கோரோசனை யுரைத் தாற்போலப் பொன்னிறமுடைய சடைமுடியினராகவும் நிலவினைப்போன்ற பூணூலணிந்தவராகவும், முத்தங்கி யணிந்தவராகவும், காணப்படுகின்றனர். இவருக்கு வழிபாடு செய்ய வேண்டுவனவாய பொருள்கள் வேண்டும்.

**பீலிவளை:—** (பூசைப்பொருள்களை எடுத்துக்கொண்டு)

(பூந்தட்டினை நீட்டி) இறைவருக்கு வழிபாடாற்றும் பொருள்கள் இங்குள்ளன.

(இருணந்தி முனிவர்)
வருகின்றனர்.

**இருணந்தி:—** மாநிலங்காக்கும் மன்னர் வெல்க. வெல்க. நீடூழிவாழ்க.

**மன்னன்:—** (பீலியின் கையினின்றும் கைந்நீர் எடுத்து வூற்றி) இறைவனே! உம்மை வணங்குகின்றேன்.

**பீலிவளை:—** இறைவனே! உம்மைத் தொழுகின்றேன்.

**இருணந்தி:—** நீவிர் இருவீரும் என்றும் கூடி இன்புற்று இருப்பீராக!

**மன்னன்:—** (தனக்குள்) இப்படியும் ஒரு நற்காலம் பிறக்குமா? (வெளிப்படை) (மகனைத்தழுவி) குழந்தாய்! அடிகட்கு வணக்கஞ்செய்.

**இளைஞன்:—** இறைவனே! பீலிவளைமகன் இளந்திரையன் வணங்குகின்றனன்.

**இருணந்தி:—** நீடூழி வாழ்ந்திரு. நீடூழி வீற்றிரு.

**மன்னன்:—** இம்மணையின் மீது நீவிர் அமர்ந்திருக்க விரும்புகின்றேன்.

**இருணந்தி:—** (அவ்வணமே அமர்ந்தனர்.)

(அனைவரும் இருணந்தியைப் பின்றொடர்ந்தமர்கின்றனர்.)

**இருணந்தி:—** மன்ன! நாகவேந்தனது உட்கோளினை நீ செவிமடுப்பாயாக.

**மன்னன்:—** நினைவு உடையவனாய் உளேன்.

**இருணந்தி:—** தெய்வப்புலமையால் அனைத்துங்காணும் நாகவேந்தன் கானகஞ்செலத் துணிவுகொண்ட உனக்கு ஒன்று வற்புறுத்துகின்றனன்.

**மன்னன்:—** என்ன கட்டளை யிடுகின்றனர்.

**இருணந்தி:—** முக்காலமும் காணும் முனிவர் இனிப் பெரும்போர் ஒன்று வருவதாகச் சொல்லி இருக்கின்றனர். நீ போர்வீரனும், எமது துணைவனும் ஆவாய். ஆகையின் நீ சஸ்திரங்களைக் கைவிடல் தகுதியன்று. இவ்விளந்திரையன் இருக்குமளவும் இப்பீலிவளை உனக்கு இல்லக்கிழத்தியாக இருப்பாள் ஆகுக என்பதாம்.

**பீலிவளை:—** (மறைவாய்) ஆ! ஆ! இருப்பாணி என் னெஞ்சினின்றும் எடுக்கப்பட்டதுபோலும் உளது.

**மன்னன்:—** நாகவேந்தனது உத்திரவின்படியே ஒழுகுகின்றேன்.

**இருணந்தி:—** தக்கது. உனது விருப்பத்தினை அவனே நிறைவேற்றுவானாக. நீயும் அவனது வேண்டுகோளின்படி நட.

ஞாயிறும் தீயினை ஒளியுறச்செய்கின்றது. தீயும் ஞாயிற்றினை ஒளிபெறச்செய்கின்றது. இதுவே அழகிதாம்.

(ஆகாயத்தைப்பார்த்து) மாதவி! நாகவேந்தனால் தானே சேகரிக்கப்பட்ட இளந்திரையன் முடிசூட்டுவிழாப் பொருள்களை எடுத்துக்கொண்டு உனது பாங்கிமாருடன் விரைவின் வருக.

(மேல்குறிப்பிடப்பட்ட பொருள்களைக் கொண்டுவந்து)
சேர்ந்தனர் நாகமங்கையர்.

**நாகமங்கையர்:—** இறைவரே! கூவிளம், புற்றுமண், அறுகு, அரிசி, முதலிய நீராணிவிழாப் பொருள்கள் இங்கு உள்ளன.

**இருணந்தி:—** என்னருஞ்செல்வ! மங்கள மணையினில் உட்காரு.

**மாதவி:—** இங்கு வா! கண்ணே! (என்று மணையினில் உட்காரவைக்கின்றனள்.

**இருணந்தி:—** (அரசிளங் குமரனது தலையின்மீது மந்திர நீர்க்குடத்தைச் சாய்த்து ஊற்றி நீராணிவித்து.)

மாதவி! ஆலாத்திமுதலிய மற்றவைகளை நீ நிறைவேற்று.

**மாதவி:—** (கண்மிச்சில்கழிக்கும் செயல்புரிந்து) குழந்தாய்! இறைவனையும் தாய்தந்தையரையும் நிலமுறவீழ்ந்து அடிபணிந்து வணக்கஞ்செய்.

**இளைஞன்:—** (முறையாக வணங்குகின்றனன்.)

**இருணந்தி:—** மங்கலம் உனக்குப் பொங்குக!

**மன்னன்:—** அரசியற் பெரும்பணி இயற்றுவோனாகுக.

**பீலிவளை:—** தந்தை மனமகிழ்விப்போனாகுக.

(கண்ணுளர் குடிஞையுள் இருவைதாளிகர் நின்றேத்துகின்றனர்.)

**முதலாமவன்:—** இளவரசர் வெல்க, வெல்க, வெல்க. சூரியபகவானுக்கு வைவச்சுதமனுப்போலவும், தயாதமன்னனுக்கு சிராமச்சந்திரன்போலவும், நீ உன் தந்தைக்கு ஒத்த குணங்களுடையோனாகி வீற்றிருப்பாயாக. உலகு மகிழ்விக்கும் குணங்களுடன் மேம்பட்டு விளங்கும் உன்பால் ஆசிமொழிகளனைத்தும் நிறைவுற்றமையின் முடிந்தனவேயாகும்.

**இரண்டாமவன்:—** பெரியோர் கண்முன்னிற்பவனான உன் தந்தையிடத்தும், கல்க்கவொண்ணு அஞ்சாமையும் வெருமித நடையும் உடைய உன்னிடத்தும் செம்பாகமாகப் பகுக்கப்பட்ட இவ்வரசுச்செல்வம் வடபெருங்கல்லிலும், குணகடலிலும் பகுத்தோடிய கங்கையாற்றுவெள்ளம்போல மீக்கூறப்பட்டு மிக மிக விளங்குகின்றது.

**நாகமங்கையர்—** (பீலிவளையை யணுகி) சந்தோஷம் மகனுக்கு முடிசூட்டுவிழாவும் நன்கு சீர்பெற நடந்தது. கொழுநனுடன் சேர்ந்து வாழ்தலும் அழிவின்றிக் கூடியது. ஆகையின் நீ சிறந்து விளங்குகின்றனை.

**பீலிவளை:—** பொதுத்தானே இச்சிறப்பு. யான் ஒன்றும் பொதுவறுசிறப்பு உறவில்லை. (மகனைக் கையாற்பிடித்து) கண்ணே! வருக. உனது பெரியம்மையாரை வணங்கு.

**இளைஞன்:—** (வணங்கப் புறப்படுகிறான்.)

**இருணந்தி:—** உலகநடையின்படி ஒழுகு! பெரியம்மையாரைப் பார்க்கப் போகின்றனையா?

**இருணந்தி:**— மன்ன! உனதுமகனுய இளந்திரையனுக்கு நிறைவேறிய இளவரசு முடியணிவிழாச்சிறப்பு நாகவேந்தனுல் நிறைவேறிய சேனைத்தலைமை நீரணிவிழவாடிய இளைமையோனை நினைவிற்கு வரச்செய்கின்றது.

**மன்னன்:**— இவ்வணம் தங்களால் தண்ணளிசெய்யப் பட்டவன் என் தக்கோன் ஆகமாட்டான்.

**இருணந்தி:**— உனக்கு மீண்டும் நாகவேந்தன் என்ன நலஞ்செய்யவேண்டும்.

**மன்னன்:**— நாகவேந்தன் எனக்கினியனுயின் இதனினும் பிறிதோர் பொருள் யாது வேண்டப்படுவதாகும்.

அப்படி இருப்பினும் இஃது இவ்வணஞ் சிறப்பதாகுக.

(பரதமுனிவர் மொழி)

பாவினிலே வீற்றிருக்கும் பாமகளும் வேறுருது
வீவியந்து வீற்றிருக்குஞ் சீரணங்குஞ்—சேர்வதால்
பல்லார் பயன்றுய்ப்பத் தானுவந்து வாழ்கவே
நல்லாரு நல்லோருந் தாம்.

(முற்றுபெற்றது.)

THE MADURA TAMIL SANGAM

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 23 | மின்னளுடன் | மின்னனுடன் |
| 4 | 28 | உடயவனுயினன் | உடையவனுயினன் |
| 5 | 19 | பாதளஞ் | பாதலஞ் |
| 7 | 1 | தன்மனுள | தன்,மனுள |
| | 6 | அரசனுற் | அரசனு[illegible] |
| | 7 | துணிகொண் | துணிவுகொண் |
| | 18 | எக்கங் | ஒக்கங் |
| 8 | 2 | மகிஷ்விக்க | மகிழ்விக்க |
| 10 | | கடைநான்குவரி | முதல்நான்குவரி |
| | 1 | துரை | துறை |
| 13 | 12 | நாகசாணன் | நாகசாரணன் |
| 14 | 15 | இருணத்தி | இருணர்தி |
| | 19 | வைத்தாளிகர் | வைதாளிகர் |
| 15 | 1 | எய்வதா | ஏய்வதா |
| | 20 | குவகை | உவகை |
| 16 | 6 | நல்லழகுடையேய் | நல்லழகுடையோய் |
| 17 | 2 | அசுரர்களந்தான் | அசுரர்களுந்தான் |
| 18 | 1 | விசையைக | விசையைக் |
| | 2 | போவனுதல் | போவதனுல் |
| 20 | 5 | பார்த்துதனக்குள் | பார்த்துத்தனக்குள் |
| | 6 | காக்ஷி | காட்சி |
| | 8 | நோக்கி தனக்குள் | நோக்கித் தனக்குள் |
| 21 | 2 | ஏற்றதாய்சந்திர | ஏற்றதாய்ச்சந்திர |
| | 22 | தளித்தது | தளிர்த்தது |
| 24 | 6 | இப்பீவிவளை | இப்பீலிவளை |
| | 6 | நண்பனுய் | நண்பனுய |
| | 12 | குகையினுன்றும் | குகையினின்றும் |
| 26 | 12 | போல கவர்ந்து | போலக்கவர்ந்து |
| | 13 | காதன்மனங் | காதன்மணங் |
| 27 | 2 | பாயாசத்தினை | பாயசத்தினை |
| | 3 | கழுத்துரை | கழுத்து,வரை |
| | 17 | மனத்தாராகி | மனத்தராகி |

THE MADURA TAMIL SANGAM

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | 19 | பாங்கநாய | பாங்கனைய |
| | 20 | அந்தபார்ப்பானை | அந்தப்பார்ப்பானை |
| 28 | 1 | புருஷனொடு | புருசனோடு |
| 33 | 6 | மிருக்கின்றது | மிருகின்றது |
| | 10 | பாசிலந்தளிர் | பாசிளந்தளிர் |
| | 12 | வளர்த்ததாய் | வளத்ததாய் |
| 35 | 1 | மன்னர் | மன்னரே |
| 38 | 8 | உய்த்துரைப்பட்டது | உய்த்து உணரப்பட்டது |
| 39 | 20 | விழைகின்றனள் | விழைகின்றனன் |
| | 22 | எடுத்து சொன்ன | எடுத்துச்சொன்ன |
| 40 | 14 | நன்ப | நண்ப |
| 41 | 15 | கடிதத்தினைபத்திரமாய் | கடிதத்தினைப்பத்திரமாய் |
| 43 | 1 | மறையினை | மறைவினை |
| | 13 | செய்கின்றனள் | செய்கின்றனன் |
| | 15 | என்வணங்க | என் வணங்க |
| 44 | 9 | னுந்தலைவாது | நுந்தலைவாது |
| | 18 | பேராச்சிரியத்தால் | பேராச்சரியத்தால் |
| 46 | 4 | பொருளுறைநகளைக் | பொருளுரைகளைக் |
| | 26 | படிக்கின்றனன் | படிக்கின்றனள் |
| 47 | 18 | பூ குழலாள் | பூங்குழலாள் |
| | 22 | சாலநான் | சாலவுநான் |
| 48 | 1 | வந்துளள | வந்துளள் |
| | 11 | பிரறைத் | பிறரைத் |
| | 21 | என் | ஏன் |
| 49 | 13 | பிறர | பிறர் |
| | 24 | மணிநீரேட்டமின்றேல் | (மணிநீரோட்டமின்றேல்) |
| 50 | 20 | வந்துரைகின்றது | வந்துறைகின்றது |
| 51 | 4 | மனையைத் | மனையைத் |
| | 4 | தீயரைக் | தீயறைக் |
| | 6 | கல்வி பயில்விப்பு | கல்விப்பயில்விப்பு |
| | 9 | கண்ணி திருமணம் | கண்ணித் திருமணம் |
| 52 | 2 | மஹானுவானிடத்து | மஹானுபாவனிடத்து |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 54 | 3 | மலர்த | மலர்ந்த |
| 55 | 11 | எறுக | ஏறுக |
| | 10 | படிகட்டு | படிக்கட்டு |
| | 12 | எறு | ஏறு |
| | 17 | இக்கீழ்திசை | இக்கீழ்த்திசை |
| | 18 | குழலாள் | குழலால் |
| 56 | 15 | வருவள | வருவள் |
| 58 | 13 | துணுக்குகின்றது | துணுக்குறுகின்றது |
| | 13 | நம்மிருவரும் | நாமிருவரும் |
| | 13 | இவன் | இவண் |
| | 20 | பூவனையும் | பூவணையும் |
| 59 | 4 | கேட்கபடில் | கேட்கப்படில் |
| 60 | 8 | இவணிவன் | இவணிவண் |
| | 16 | என் | ஏன் |
| 65 | 21 | முதுகுபக்கத்திற் | முதுகுப்பக்கத்திற் |
| 66 | 5 | தவிற | தவிர |
| 67 | 16 | தவிற | தவிர |
| 68 | 9 | முனைபளவும் | முனையளவும் |
| 72 | 9 | பொன்னுறை | பொன்னுரை |
| | 22 | அறையனே | அரையனே |
| 73 | 19 | உதட்டினி | உதட்டிணி |
| 75 | 12 | நீரப்பறவை | நீர்ப்பறவை |
| | 23 | தக்கவைபாகின் | தக்கவையாகின் |
| 76 | 7 | சித்தெனங் | சித்தெனுங் |
| | 27 | உனக்கும | உனக்கும் |
| 77 | 20 | கோபத்னை | கோபத்தினை |
| | 28 | மறைந்நனளோ | மறைந்தனளோ |
| 78 | 16 | செறுப்புப் | செருப்புப் |
| 80 | 11 | யுறுவம் | யுருவம் |
| 83 | 19-24 | ஒருக்கத் | ஒறுக்கத் |
| 84 | 12 | காவலினிடம் | காவலணிடம் |
| 85 | 16 | எழுதுக்களைப் | எழுத்துக்களைப் |

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 86 | 20 | நண்ணார்வினுக்கு | மணிதருணார்வினுக்கு |
| 88 | 15 | இயப்ப | இயம்ப |
| 91 | 2 | பார்க்க பேராவல் | பார்க்கப்பேராவல் |
| 92 | 1 | பார்த்து பன்னாள் | பார்த்துப் பன்னாள் |
| | 12 | கவப்பள்ளிக்கு | தவப்பள்ளிக்கு |
| 97 | 9 | ராகவேந்தன் | நாகவேந்தன் |
| 98 | 1 | ஞயிறும் | ஞாயிறும் |
| | 12 | மங்களமனை | மங்கலமனை |
| 99 | 11 | வெருமிதநடை | பெருமித நடை |
| 100 | 17 | முற்றுபெற்றது | முற்றுப்பெற்றது. |